REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஜூலை 19 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

1932–2024 ANNIVERSARY

வரு. 92 இல. 171 | Friday 19, July, 2024 | 20 பக்கங்கள் | 50/-

## கடவுச்சீட்டு பெற புதிய முறை இன்று வெள்ளி முதல் ஆரம்பம்

**www.immigration.gov.lk முன்பதிவு செய்வது அவசியம்**

கடவுச்சீட்டுகள் வழங்கும் புதிய முறை இன்று (19) வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்படுவதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது. விண்ணப்பதாரர்களின்

06

# நுண், சிறு, நடுத்தர தொழில்துறைகளுக்கு புத்துயிரளிக்க நிதி வழங்கும் பொதி

- 7 வீத சலுகை வட்டி வீதத்தில் அதிகபட்சம் ஒரு கோடி 50 இலட்சம் ரூபாவுக்கு உட்பட்ட முதலீட்டுக் கடன் வசதி
- 08 வீத மானிய வட்டி வீதத்தில் அதிகபட்சமாக 50 இலட்சம் ரூபா வரை மூலதனம்
- கடன் வழங்க 1,800 கோடி ரூபா ஒதுக்கீடு
- 15 வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் அரசுடன் கைகோர்ப்பு
- சிறு, நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்காக NDB வங்கி



நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை மீள வலுவூட்டும் நோக்கில், நுண், சிறு மற்றும் நடுத்தர முயற்சிகளுக்கான முதலீடு மற்றும் செயற்பாட்டு மூலதன வசதிகள் ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய நிதி வசதிப் பெக்கேஜை அறிமுகம் செய்யும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்று (18) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

மானிய வட்டி வீதத்தில் அனுமதி பெற்ற வணிக வங்கிகள் மற்றும் அனுமதி பெற்ற விசேட வங்கிகள் உட்பட 15 நிதி நிறுவனங்கள் மூலம் நெருக்கடியை எதிர்கொண்டு செயற்படும் நுண், சிறு மற்றும் மத்திய தொழில்முயற்சியாளர்களுக்கு நிவாரணம் வழங்கல் மற்றும் செயற்பாடற்ற கடன் பிரிவின் கீழ் இருக்கும் நுண், சிறு மற்றும் மத்திய தொழில்முற்சிகளுக்காக ஒத்துழைப்பு

06

## அஸ்வெசும இரண்டாம் கட்டம் 75,000 விண்ணப்பங்கள் ஏற்பு

### பரிசீலனை நடவடிக்கைகள் ஆரம்பம்



அஸ்வெசும இரண்டாம் கட்ட விண்ணப்பங்களை பரிசீலனை செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளதாக, அஸ்வெசும நலன்புரி சபையின் தலைவர் ஜயந்த விஜேரத்ன தெரிவித்தார். அஸ்வெசும விண்ணப்பங்களை ஏற்கும் காலம் கடந்த 13ஆம் திகதி நிறைவடைந்தது. இதில், இரண்டாம்

06

## உர மானிய நிதிகள் வங்கிகளில் வைப்பீடு



கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக நெற் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு பசளைக்கான மானிய நிதி, வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள பிரதி ஆணையாளர் பா.தேவரதன் தெரிவித்தார்.

இதுவரை 9,091 விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் உர மானியத்துக்கான பணம் வைப்பிலிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

06

## துறைமுக அதிவேக நெடுஞ்சாலை மக்கள் பாவனைக்காக அக்டோபரில் திறப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கொழும்பு துறைமுக அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணப் பணிகளை அமைச்சர் பந்துல குணவர்தன நேற்று நேரில் சென்று பார்வையிட்டபோது. (படம்: வாசித பட்டபெந்திகே)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் (300 மில்லியன்) 30 கோடி அமெரிக்க டொலர் நிதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள காலிமுகத்திடலுக்கும் இங்குருகொட சந்திக்குமான அதிவேக நெடுஞ்சாலை, எதிர்வரும் அக்டோபர் மாதத்தில் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்படும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். நிர்மாணப்பணிகள் பெரும்பாலும் முடிவடைந்துள்ள மேற்படி ஐந்து கிலோமீற்றர் நீளமான அதிவேக நெடுஞ்சாலையை பார்வையிடுவதற்காக

06

## ஜனாதிபதித் தேர்தலுக்கு நிதி வழங்குவதில் தடை இல்லை



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான நிதியை வழங்குவதற்கு நிதியமைச்சு தயாராக உள்ளதாகவும் தேவைகளுக்கு இணங்க அந்த நிதியை பெற்றுக் கொடுக்க முடியும் என்றும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். எந்த ஒரு தேர்தலை நடத்துவதற்கும் 2024 ஆம்

06

## ஈஸ்டர் தாக்குதல் விசாரணை; DIG நிலந்தவுக்கு கட்டாய விடுமுறை



உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளில் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் நிலந்த ஜயவர்தன கட்டாய விடுமுறையில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

நிலந்த ஜயவர்தன ஒழுக்காற்று விசாரணையின் அடிப்படையில் இவ்வாறு விடுமுறையில் வைக்கப்பட்டுள்ளதாக தேசிய பொலிஸ்

06

## ஜனாதிபதி ரணிலின் திட்டங்கள், செயல்கள் வித்தியாசமானவை



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான அரசியலை கடந்த 15 வருடமாக முன்னெடுத்தபோதும் இருந்ததை விடவும், அவரது திட்டங்களும் செயற்பாடுகளும் வித்தியாசமானதாக இருப்பதாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார். கடந்த ஒன்றரை வருடமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து

06



**03** ஆணைக்குழு உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும்

சிவஞானம் சிறீதரன் எம்.பி. கோரிக்கை



**03** அமெரிக்க ஜனாதிபதிக்கு கொவிட்-19 தொற்று உறுதி

வீட்டில் தனிமைப்படுத்தல்

### ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவான

## புதிய அரசியல் கூட்டணி கதிரை சின்னத்தில் களம் இறங்கும்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து விலகி சுயாதீனமாக செயற்படும் புதிய அரசியல் கூட்டணி, உத்தேச தேர்தல்களில் கதிரை சின்னத்தில் பொதுக் கூட்டணியொன்றை அமைத்து போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட முக்கிய கட்சிகளுடன்

06

## ஆந்திராவின் நீர்வேளாண்மை திட்ட பகுதிக்கு அமைச்சர் டக்ளஸ் விஜயம்



ஆந்திரா மாநிலத்தின் இராமகுண்டம் பகுதிக்கு விஜயம் செய்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தொட்டிகளில் மீன் வளர்க்கும் முறைமையையும் தொட்டிகளின் மேல் சூரியப் படல் (Solar panel) தொழில்நுட்பத்தினூடாக மின் உற்பத்தி செய்யப்படும்

06

## திஸ்ஸ அத்தநாயக்க MP பயணித்த ஜீப் விபத்து



ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க பயணித்த ஜீப் வண்டி, ஜாவத்தை வீதியில் சலுசல பிரதேசத்துக் கருகில் விபத்துக்குள்ளானது. நேற்று முன்தினம் புதன்கிழமை (17) இரவு திஸ்ஸ அத்தநாயக்க பயணித்த ஜீப் வண்டியும் கார் ஒன்றும் மோதியே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தின் போது 03 பேர் காயமடைந்துள்ளதுடன்,

06

## திரையரங்குகளில் கைபேசிகளை தடைசெய்ய விரைவில் சட்டம்

### இயக்குநர்கள் சங்கம் கோரிக்கை

திரையரங்குகளுக்குள் கைபேசிகளைக் கொண்டு செல்வது தொடர்பாக புதிய சட்டம் இயற்ற வேண்டும் என, திரைப்பட இயக்குநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி, திரையரங்குகளுக்குள் கையடக்கத் தொலைப்பேசிகளை எடுத்துச் செல்வதைத் தடுக்க புதிய சட்டம் உருவாக்கப்பட உள்ளது. அது தொடர்பில் திரைப்படக் கூட்டுத்தாபனம் தலையிட்டு தேவையான சட்ட ஏற்பாடுகளைத் தயாரிக்க வேண்டுமென திரைப்பட இயக்குநர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற சில சம்பவங்கள் காரணமாக இந்தத் தீர்மானத்தை மேற்கொள்வது பொருத்தமானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மூழ்கிய ஓமான் கப்பலிலிருந்து ஒன்பது பேர் பாதுகாப்பாக மீட்பு

### இலங்கையர் ஒருவரும் மீட்கப்பட்டார்



ஓமான் கடலில் மூழ்கிய எண்ணெய்க் கப்பலிலிருந்து காணாமற்போன 16 பேரில் இலங்கையர் ஒருவர் உட்பட 09 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. இக்கப்பலிலிருந்து ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார். எனினும் உயிரிழந்த நபர் இதுவரை அடையாளம் காணப்படவில்லையென வெளிநாட்டு ஊடகங்கள்

06

## வண. ஞானசார தேரர் பிணையில் விடுதலை



### மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு

நான்கு வருடகால கடுழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு சிறையிலடைக்கப்பட்டிருந்த வண. கலகொட அத்தே ஞானசார தேரரை, பிணையில் விடுவிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (18) உத்தரவிட்டுள்ளது.

ஞானசார தேரரால் சமர்ப்பிக்கப்பட்ட மறுசீராய்வு

06

யார் என்ன சொன்னாலும் நாடு முழுவதும் குறைந்த விலையில் தருவது காகில்ஸ் மட்டுமே




*நிபந்தனைகளுக்கு உட்பட்டது. இருப்பு உள்ளவரை மட்டுமே. காய்கறி மற்றும் பழங்கள் 2024 ஜூலை 21 வரை மட்டுமே. எந்தவொரு முன்னறிவித்தலுமின்றி விலைகள் மாற்றப்படலாம்.

Cargills FOOD HALL | Cargills XPRESS | Cargills food city வீடு செல்லும் போது

# ஐம்பது இலட்சம் மக்கள் வாழும் பெருநகரமாக மேல்மாகாணத்தை மாற்றியமைப்பதற்கு திட்டம்

## 'ரன்தொர' உறுமய முழு உரிமையுள்ள வீட்டு உரிமைப் பத்திரங்களை வழங்கும் தேசிய நிகழ்வில் ஜனாதிபதி

மேல்மாகாணத்தை சுமார் 50 இலட்சம் மக்கள் வாழும் பெரிய நகரமாக அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கிராமங்கள், நகரங்கள் மற்றும் மலையகத்தை உள்ளடக்கிய வகையில் மக்களுக்கு முழு உரிமையுள்ள காணி மற்றும் வீட்டு உரிமைகளை வழங்குவதற்கு செயற்பட்டு வருவதாகத் தெரிவித்த ஜனாதிபதி, நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக எந்தவொரு அரசாங்கத்தினாலும் நடைமுறைப்படுத்தப்படாத இந்த புரட்சிகரமான வேலைத்திட்டத்தை அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் (17) பிற்பகல் நடைபெற்ற கொழும்பில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் 50,000 குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் 'ரன்தொர உறுமய' நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவுக்கமைய, 2024 வரவு செலவுத் திட்டத்தில் 20 இலட்சம் பேருக்கு காணி உரிமை வழங்கும் உறுமய வேலைத்திட்டமும், கொழும்பு அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிக்கும் இரண்டரை இலட்சம் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அந்த வீடுகளின் முழு உரிமையை வழங்கும்



திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இதன் முதற்கட்டமாக கொழும்பில் அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் 50,000 குடும்பங்களுக்கு முழு உரிமையுள்ள உறுதிப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளதுடன், நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் 937 வீடுகளும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் 180 வீடுகளும் உள்ளடங்கலாக 1117 உறுதிப் பத்திரங்கள் இந்நிகழ்வில் வழங்கப்பட்டன.

இதன்படி, நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான மிஹிந்து செத்புர, சிறிசர உயன, மெட்ரோ வீட்டுத் தொகுதிகள் மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் உள்ள 31 அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிப்பவர்களுக்கு இந்த 'ரன்தொர உறுமய' உரிமைப் பத்திரங்கள் வழங்கப்பட உள்ளன.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்ததாவது:

"உங்களின் பிரச்சினைகளில் ஒன்று இன்று தீர்ந்துவிட்டது. உங்கள் வீட்டின் உரிமை உங்களுக்குக் கிடைத்துள்ளது. ஒரு வீட்டின் உரிமையை இழப்பது மக்களுக்கு ஒரு பெரிய பிரச்சினை என்பதை நாம் அறிவோம். கொழும்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்திய பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் அந்த மக்களின் பிரச்சினைகளை நான் நன்கு புரிந்து கொண்டுள்ளேன்.

நாங்கள் மிகவும் இக்கட்டான காலக்கட்டத்தில் அரசாங்கத்தைப் பொறுப்பேற்றோம். கடந்த பொருளாதார நெருக்கடியால் இந்த மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர். ஆனால் இந்த நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப அரசாங்கம் செயற்படும் என்று நீங்கள் நம்பினீர்கள். அந்த நம்பிக்கையின் காரணமாகவே அந்தப் பணியில் வெற்றி பெறும் வாய்ப்புக் கிடைத்தது. எங்கள் மீது நம்பிக்கை வைத்து பொறுமையாக செயற்பட்ட உங்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

இன்று நாடு பொருளாதார ரீதியாக முன்னேறி வருகிறது. இந்த அரசாங்கம் ஒரு கட்சியால் கட்டியெழுப்பப்பட்டது அல்ல. சிலர் பொறுப்புகளை புறக்கணித்த போது, ஒவ்வொரு கட்சியிலிருந்தும் நபர்களை மிகத் திடீரென திரட்டி இந்த அரசாங்கம் உருவாக்கப்பட்டது. இதற்கு முன் இந்த நாட்டில் இப்படியொரு அரசாங்கம் இருக்கவில்லை.

இன்று நாம் ஒரு நாடாகக் கட்டியெழுப்புகின்ற இவ்வேளையில் சாதாரண மக்களுக்கும் இதன் பயன்கள் சென்றடைய வேண்டும். அதனால்தான் இந்த அடுக்குமாடி குடியிருப்புகளின் முழு உரிமையையும் உங்களுக்கு வழங்க ஏற்பாடு செய்துள்ளோம்.

எந்த அரசாங்கமும் செய்யாத பணியை இந்த அரசாங்கம் நிறைவேற்றியுள்ளது. சாதாரண மக்களுக்கு நாம் உரிமையை வழங்கியுள்ளோம். இந்த நாட்டின் உரிமையை விரிவுபடுத்தியுள்ளோம். மற்ற அரசாங்கங்கள் பங்குச் சந்தையில் மட்டுமே உரிமையைப் பார்த்தன. எத்தனை பேர் பங்குகளை வாங்கினார்கள், பங்குகளின் பெறுமதி கூடுகிறதா அல்லது குறைந்ததா என்று பார்த்தார்கள். ஆனால் நாங்கள் சாதாரண மக்களைப் பார்த்தோம்.





இந்த நாட்டின் விவசாயிகள் கடந்த காலங்களில் நல்ல விளைச்சலை எமக்கு வழங்கியுள்ளனர். எனவே, அவர்களின் நில உரிமையை உறுதி செய்ய வேண்டும். அந்த மக்களுக்கு இதுவரை நாம் காணி உரிமை வழங்கவில்லை.

இதுவரை உரிமம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இப்போது நில உரிமை கொடுக்க ஆரம்பித்துள்ளோம். இந்த காலக்கெடு முடிவதற்குள் 20 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களுக்கு காணி உரிமையும், அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் மக்களுக்கு அந்த வீட்டு உரிமையும் வழங்கப்படும். அத்துடன் பெருந்தோட்ட மக்களுக்கு வீடுகள் வழங்கும் வேலைத்திட்டம் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும். சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்து இது குறித்து கலந்துரையாடினேன். புதிய சட்டம் தயாரித்து அனைவருடனும் கலந்தாலோசித்து பணிகளை மேற்கொள்ளுமாறு நான் பணிப்புரை விடுத்தேன்.



## ' கிராமம், நகரம் மற்றும் மலையகத்தை உள்ளடக்கிய வகையில் மக்களுக்கு முழு உரிமையுள்ள காணி மற்றும் வீட்டு உரிமைகள் வழங்கப்படும்'

இந்த அடுக்குமாடி குடியிருப்புகளை நிர்மாணிப்பதற்கு முன்னாள் தலைவர்கள் மூன்று பேர் பெரும் தியாகம் செய்தனர். பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவல பம்பலப்பிட்டியில் முதலாவது அடுக்குமாடி குடியிருப்பை நிர்மாணித்தார். ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச கொழும்பில் பாரிய அடுக்குமாடி திட்டங்களை செயற்படுத்தினார்.

மேலும், கோட்டாபய ராஜபக்ஷ அடுக்குமாடி குடியிருப்பு திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல பணியாற்றினார். அதற்காக இந்த மூவருக்கும் நன்றி கூற வேண்டும். இன்று உங்களுக்கு வழங்கப்படும் வீட்டு உறுதிப் பத்திரங்களின் மதிப்பு பத்து வருடங்களில் இரட்டிப்பாகும். எனவே, இந்தச் சொத்தை முறையாக நிர்வகித்து உங்கள் வாழ்க்கையை வெற்றியடையச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இன்று கிடைத்த பத்திரத்தை அடகு வைக்காதீர்கள். 10 வருடங்களில் கொழும்பு அபிவிருத்தி அடையும். மேல்மாகாணத்தை 50 இலட்சம் மக்கள் வாழும் பெரிய நகரமாக மாற்ற நாம் எதிர்பார்த்துள்ளோம். அப்போது அந்த இடங்களில் உள்ள பழைய கட்டடங்கள் அகற்றப்படும். மேலும், இந்த மாகாணத்தில் புதிய துறைமுகம் ஒன்றை அமைக்க முடியும்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் உள்ளிட்ட குழுவினர் ஏற்கனவே அதற்கான பணிகளை செய்து வருகின்றனர். அத்துடன், கொலன்னாவ பிரதேசத்தில் சில புதிய பாடசாலைகளை அமைக்க தீர்மானித்தோம். அந்தத் வேலைத்திட்டத்தை நாங்கள் தொடர்ந்து முன்னெடுக்க உள்ளோம்".

பிரதமர் தினேஷ் குணவர்தன:

2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் பிரகாரம் இன்று மக்களுக்கான காணி மற்றும் வீட்டு உரிமைகள் வழங்கப்படுகின்றன. இன்று நீங்கள் ஒரு பெருமைக்குரிய உரிமையாளராகிவிடுவீர்கள். உணவு, உடை, உறைவிடம் ஆகியவை மனிதனின் அடிப்படைத் தேவைகள். அதன்படி இன்று உங்கள் வீடு உங்களுடையதாக இருப்பதால் அடிப்படைத் தேவை ஒன்று பூர்த்தியாகின்றது. இது உங்கள் வாழ்க்கையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தும். அதனை முறையாக நிர்வகித்து வாழ்க்கையை வெற்றியடையச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்".

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், மேல்மாகாண ஆளுநர் மார்ஷல் ஓஃப் எயார் ஃபோர்ஸ் ரொஷான் குணதிலக்க, இராஜாங்க அமைச்சர்களான தேனுக விதானகமகே, அருந்திக பெர்னாண்டோ, பாராளுமன்ற உறுப்பினர்களான வஜிர அபேவர்தன, ஏ.எச்.எம். பௌசி, யதாமினி குணவர்தன, சட்டத்தரணி பிரேமநாத் சி.தொலவத்த, ஓய்வுபெற்ற மேஜர் பிரதீப் உந்துகொட, சட்டத்தரணி மதுர விதானகே, தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, ஜனாதிபதி தொழிற்சங்கப் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ். சத்யானந்த உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(ஜனாதிபதி ஊடகப் பிரிவு)

---



# பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் அரச நிறுவனங்கள் பாதுகாக்கப்பட்டன

## ஜனாதிபதியின் வழிகாட்டல்கள் பக்கபலமாக அமைந்தன_உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த

கொரோனா தொற்றுநோய் பரவல் காலத்திலும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் எந்தவொரு அரச ஊழியருக்கும் சம்பளத்தையும் கொடுப்பனவுகளையும் குறைவின்றி வழங்கி அரச சேவையை முன்னெடுத்துச் செல்ல முடிந்துள்ளமை பெரு வெற்றியாகும் என்றும், அதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வழங்கிய அறிவுரைகள் பக்கபலமாக அமைந்திருந்தாகவும் உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இன்று (17) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் தெரிவித்ததாவது:

"கடந்த இரு வருடங்கள் மிகக் கஷ்டமாக அமைந்தது. நாம் கொவிட், பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் அரச ஊழியர்களுக்கு சம்பளத்தையும் கொடுப்பனவுகளையும் வழங்க வேண்டியிருந்தது. சம்பளமும், கொடுப்பனவுகளும் நிறுத்தப்படலாம் என்றும் சிலர் சிந்தித்தனர்.

அரசாங்க சேவை முடங்கிவிடும் என்றும் நினைத்தனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலுக்கமைய அரச நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் என்ற வகையில் பிரதமர் தினேஷ் குணவர்தனவின் வழிகாட்டலின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிர்வாகச் செயற்பாடுகள் காரணமாக அரச சேவையைப் பாதுகாக்க முடிந்தது.

இது மிகப்பெரிய வெற்றியாகும். அதற்கு அரச ஊழியர்கள் மற்றும் நாட்டு மக்களின் முழுமையான பங்களிப்பு கிடைத்திருந்தது என்பதையும் நினைவுகூர வேண்டும்.

தேர்தல் பற்றி இன்று பலர் பல இடங்களில் பேசினாலும் அதற்கு தகுந்த சூழலை உருவாக்க உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அர்பணித்துள்ளது."

மேலதிகச் செயலாளர் (உள்நாட்டு அலுவல்கள்) மற்றும் இணைந்த சேவைகளுக்கான பணிப்பாளர் நாயகம் எஸ். ஆலோக பண்டார:

"கொவிட் பொருளாதார நெருக்கடியின் விளைவாக 2020_ 2022 ஆம் ஆண்டுக்குள்

அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வது மட்டுப்படுத்தப்பட்டது. 2022 ஆம் ஆண்டில் முற்றாக நிறுத்தப்பட்டது. அதனால் அரச சேவை நிறுவனங்களின் பணிக்குழு தொடர்பான மீளாய்வொன்றை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

அதன்படி உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் நாடளாவிய ரீதியில் ஆறு சேவைத் துறைகளுக்கும், இணைந்த சேவைகள், கிராம சேவைகள் உள்ளிட்ட பல சேவைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்ய தீர்மானித்தது. அந்த தீர்மானத்துக்கு அரசாங்க சேவை ஆணைக்குழு மற்றும் நிதி அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக வெற்றிடங்களுக்கு மாத்திரம் ஆட்சேர்ப்பு செய்ய தீர்மானிக்கப்பட்டது.

அதேபோல் ஆட்சேர்ப்புக்கான பரீட்சைகளில் காணப்பட்ட தாமதத்தை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. வருடத்திற்கு இரண்டு தடவைகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டும் விசேட தர நிலைக்கு தரம் உயர்த்தும் பணிகளும் ஜூலை 1 ஆம் திகதியிலிருந்து துரிதப்படுத்தப்பட்டுள்ளது.'"என்று தெரிவித்தார்.

மேலதிகள் செயலாளர் (உள்நாட்டு நிர்வாகம்) மகேஷ் கம்மன்பில:

"அரச நிறுவனங்களுக்கு சொந்தமான சுற்றுலா விடுதிகள் மற்றும் பங்களாக்களை பயன்படுத்திக்கொள்வதற்கான திட்டமிடலை மேற்கொள்ளுமாறு 2024 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. அதன்படி குறைந்தளவில் பயன்படுத்தப்படும் சுற்றுலா விடுதிகளையும் பங்களாக்களையும் அரச மற்றும் அரை அரச சேவைப் பிரிவுகளுக்கு வழங்கும் அதேவேளை, அரசாங்கத்துக்கு வருமானம் ஈட்டித்தரும் வகையில் செயற்படும் தரப்பினருக்கு அவற்றை வழங்கவும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

தற்போது அரசாங்கத்தின் வசமாகவிருக்கும் 720 விடுதிகள் மற்றும் சுற்றுலா பங்களாக்களில் சுற்றுலா வர்த்தகத்துக்காக 3750 அறைகளைப் பெற்றுக்கொடுக்கும் இயலுமை இருக்கிறது. அதற்காக 2024 வரவு செலவு திட்டத்தில் 600 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேபோல் அரச நிர்வாக , உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, சுற்றுலா பங்களா, விடுதிகள் ஆகியவற்றை இணைய முறையில் ஒதுக்கீடு செய்வதற்கும் கொடுப்பனவுகளை செய்வதற்குமான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன."

மேலதிக செயலாளர் (உள்நாட்டு அலுவல்கள் ) டபிள்யூ.எம்.ஏ.பீ.பி .வன்னிநாயக்க

''அரச ஊழியர்களுக்கு இருப்பிட வசதிகளை வழங்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட 32 வீட்டுத் தொகுதிகளை









உள்ளடக்கிய நில பியச வேலைத்திட்டம் 2023 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டு அதற்கான விண்ணப்பங்கள் இணைய முறையில் கோரப்பட்டு பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.அதேபோல் மட்டக்களப்பு மாவட்டச் செலகத்தின் 92% பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கிறது. மஹியங்களை, ஹாலிஎல, ஹோமாகம, லுனுகம்வெஹெர, ஜாஎல பிரதேசய செயலக கட்டிடங்களின் நிர்மாண பணிகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

அதேபோல் முந்தல் மற்றும் மஹவிலச்சிய பிரதேசய செயலக கட்டிடங்கள் 369 மில்லியன் ரூபா செலவில் பூர்த்தி செய்யப்பட்டு கடந்த மார்ச் ஜூன் மாதங்களில் திறக்கப்பட்டுள்ளன.

2023 ஆம் ஆண்டில் களுத்துறை மாதுருவெல மற்றும வல்லாவிட பிரதேச செயலக கட்டிடங்களும் கம்பஹா மாவட்ட செயலக கட்டிடமும் வத்தளை பிரதேச செயலக அலுவலகமும் அநுராபுரம் மாவட்டத்தின் நுவரகம்பலாத பிரதேச செயலக கட்டிடமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.'

ஓய்வூதிய திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஏ.ஜகத் டயஸ்:

"இந்த வருடத்தின் ஜனவரி 02 ஆம் திகதியிலிருந்து முப்படையினரின் ஓய்வூதிய தொகையில் திருத்தம் செய்வதற்கான விண்ணப்பம் இணைய முறையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.அதேபோல் கடல் பாதுகாப்பு சேவை, கடற்படை படகுகளில் சேவையாற்றும் அரச ஓய்வூதியதாரர்களுக்கு நாட்டிலிருந்து புறப்படும் முன்னதாக உயிர்ச் சான்றிதழ்களை பிரதேச செயலகங்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு அல்லாத சந்தர்ப்பத்தில் வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதுக்குழுக்கள் வாயிலாக சான்றிதழ்களை உறுதிப்படுத்தி பிரதேச சபைகளுக்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

அதேபோல் ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ளல், முகாமைத்துவம் செய்தல், புதிய தகவல்களை இணைக்க தொழில்நுட்பக் கட்டமைப்பை அறிமுகப்படுத்தல், தாமதமின்றி ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன".

உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்ன, மேலதிகள் செயலாளர் (உள்நாட்டு அலுவல்கள்) ஆர்.ஏ.சீ.எஸ்.ரணவீர ஆராச்சி, மேலதிகச் செயலாளர் (உள்நாட்டு அலுவல்கள்) ஏ.ஜீ.நிஷாந்த, சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஏ.டீ.டீ.சலங்க,மேலதிகச் செயலாளர் (மனித வளம்) புத்தி தரங்கா கருணாசேன,பணிப்பாளர் நாயகம் (நிறுவனங்கள்) சந்தன குமாரசிங்க, இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் நாலக கலுவெவ, பதிவாளர் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டபிள்யூ.ஆர்.ஏ.என்.எஸ்.விஜயசிங்க, அரசகரும மொழிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் பிரின்ஸ் சேனாதீர,மேலதிகள் செயலாளர் (பிரதேச நிர்வாக மறுசீரமைப்பு) வருண ஸ்ரீ தனபால , சிரேஷ்ட உதவிச் செயலாளர் (அரச சேவை மறுசீரமைப்பு)சம்பிக ராமவிக்ரம மற்றும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் ஏ.எம். மனோஜ நீதீஷன அமரசிங்க உள்ளிட்டோரும் இதன் போது கலந்துகொண்டிருந்தனர்.

(ஜனாதிபதி ஊடகப் பிரிவு)

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஜூலை 19 வெள்ளிக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්



தொழுகை நேரம்
சுபஹ் - 04.41
லுஹர் - 12.18
அஸர் - 03.43
மஃரிப் - 06.32
இஷா - 07.47

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் ஆடி 03
ராகுகாலம் : காலை : 10.31 - 12.01வரை
சுபநேரம் : காலை : 06.01 - 07.31வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

# மலையக மக்களுக்கு நிரந்தர காணி, வீட்டுரிமை வழங்குவதே அரசின் நோக்கம்

## பெருந்தோட்ட மக்கள் வாழும் பகுதிகளை புதிய குடியேற்ற கிராமங்களாக பிரகடனப்படுத்த நடவடிக்கை - ஜனாதிபதி

பெருந்தோட்ட மக்கள் வாழும் பிரதேசங்களை அடையாளங்கண்டு அப்பகுதிகளைப் புதிய குடியேற்ற கிராமங்களாக சட்டரீதியாக பிரகடனப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் (17) நடைபெற்றது.

கிராமங்கள், நகரங்கள் மற்றும் பெருந்தோட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய நிரந்தர காணி மற்றும் வீட்டு உரிமைகளை மக்களுக்கு வழங்குவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு எனவும் அதற்குத் தேவையான புரட்சிகர வேலைத்திட்டம் ஏற்கனவே செயற்படுத்தப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி



ரணில் விக்கிரமசிங்க இதன்போது தெரிவித்தார். அரச பெருந்தோட்டக் கம்பனி மற்றும் உள்ளூர் பெருந்தோட்டக் கம்பனிகளின் கட்டுப்பாட்டிலுள்ள தோட்ட மக்கள் வாழும் பகுதிகளை புதிய கிராமங்களாக சட்டரீதியாக பிரகடனப்படுத்தத் தேவையான சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்வது மிகவும் முக்கியமானதும் காலத்துக்கு உகந்தது என்பதாலும் கொள்கை ரீதியாக இதற்கு உடன்பாடும் எட்டப்பட்டது.

இந்த பிரேரணையை நடைமுறைப்படுத்தும் போது மலையகத்தில் வாழும் அனைத்து மக்களதும் காணி உரிமையை உறுதிப்படுத்துவது இன்றியமையாததென சுட்டிக்காட்டிய பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், இது தொடர்பான பிரேரணையை ஜனாதிபதியிடம் கையளித்தார். 06

### கொழும்பு ஜெயந்தி நகரில் நாளை ஆன்மீக அருளுரை



கொழும்பு ஜெயந்திநகர் ஜிந்துபிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணியர் சுவாமி தேவஸ்தான ஆடி வேல் விழா நாளை 20 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு கனபதி ஹோமத்துடன் ஆரம்பமாகிறது. 06

## துறைமுக அதிவேக நெடுஞ்சாலைக்கு அமைச்சர் பந்துல கள விஜயம்



காலிமுகத்திடலுக்கும் இங்குருகொட சந்திக்குமான அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாண பணிகளை அமைச்சர் பந்துலகுணவர்த்தன நேற்று பார்வையிட சென்ற போது பிடிக்கப்பட்ட படம். எதிர்வரும் அக்டோபரில் இந்த நெடுஞ்சாலை மக்களின் பாவனைக்காக திறக்கப்படவுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியில் இது அமைக்கப்படுகிறது.

## தேர்தலை தடுப்பதற்கான எவ்வித திருத்தங்களும் முன்வைக்கப்படாது

### ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னரே 22 ஆவது திருத்தம்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



ஜனாதிபதித் தேர்தலைத் தடுப்பதற்கான எந்தவித திருத்தங்களும் முன்வைக்கப்பட மாட்டாதென அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்குப்பின்னரே 22 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்ட மூலம் கொண்டுவரப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் நேற்று நடைபெற்றுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் பின்னர், ஊடகவியலாளர்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பாராளுமன்ற வாரத்தில் 22 ஆவது திருத்த சட்டமூலம் கொண்டுவரப்படும் என கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வந்தாலும் அவ்வாறு கொண்டுவரப்படமாட்டாதென தெரிவித்த அவர், தேர்தலை தடுக்கும் எவ்வித திருத்தங்களும் முன்வைக்கப்பட மாட்டாதென்றும், தேர்தலுக்குப் பின்னரே 22 ஆவது திருத்த சட்டமூலம் சமர்ப்பிக்கப்படலாமென்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

## அமெரிக்க ஜனாதிபதிக்கு கொவிட்–19 தொற்று உறுதி



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கொவிட் 19 தொற்றுக் குள்ளாகியுள்ளதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

81 வயதான அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கொவிட்19 தடுப்பூசிகள் ஏற்றியும், ஏற்கனவே அவருக்கு இருதடவைகள் கொவிட் 19 தொற்று உறுதிப்படுத்தப் பட்டிருந்ததாக வெள்ளை மாளிகையின் ஊடகச் செயலாளர் தெரிவித்துள்ளார். 06

## ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளர் ஒருவரை ஸ்ரீ.சு.க.நிறுத்தும்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் என, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். 06

## அத்துருகிரிய துப்பாக்கி சூட்டுச் சம்பவம் இருவரைத் தவிர ஏனையோர் கைது

### சட்டவிரோத ஆயுதங்களை களைந்தாலே தாக்குதல்களை ஒழிக்க முடியும்



அத்துருகிரிய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த இருவரைத் தவிர ஏனையோர், கைது செய்யப்பட்டுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிச்சூட்டை திட்டமிட்டு கட்டம் கட்டமாக முன்னெடுப்பதில் ஈடுபட்டவர்களை அதிகாரிகள் கைது செய்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

நேற்று (18) நடைபெற்ற ஊகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

அத்துருகிரியவிலுள்ள பச்சை குத்தும் கலைக் கூடத்துக்குள் கடந்த (10) இரு ஆயுததாரிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 'கிளப் வசந்த' மற்றும் மற்றுமொரு நபர் கொல்லப்பட்டதுடன் நான்கு பேர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

கிளப் வசந்தவின் சொத்துக்கள் மற்றும் பணம் குறித்து ஊடகவியலாளர்கள் அமைச்சரிடம் கேட்டபோது, பல கிளப்புகளை நடத்தி அவர் வருமானம் ஈட்டியிருப்பதாக அமைச்சர் பதிலளித்தார். இருப்பினும் இறக்கும் போது, கிளப் வசந்த நாடு முழுவதும் பலருக்கு கடனாளியாக இருந்தமை தற்போது நடத்தப்பட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார். 06

## ஒருவரின் வாலாக SLFP செயல்பட வேண்டுமென்பது சிலரது எண்ணம்

### மல்வத்து மகாநாயக்கரிடம் அமைச்சர் விஜேயதாச தெரிவிப்பு



ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை நீர்த்துப் போகச் செய்து யாரோ ஒருவரின் வாலாக செயல்பட வைக்க வேண்டும் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா உள்ளிட்ட ஒரு குழுவினர் நினைப்பதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ மல்வத்து மகாநாயக்க தேரர் முன்னிலையில் தெரிவித்தார்.

அமைச்சர் நேற்று (18) காலை மல்வத்து மகா விகாரைக்குச் சென்று மகாநாயக்கர் சங்கைக்குரிய திப்பட்டுவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரை சந்தித்து நல்லாசி பெற்றுக்கொண்டார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நடவடிக்கைகளை வெளியிலிருந்து சீர்குலைக்க இவர்கள் முயற்சிப்பதாகவும், அதனை பிரச்சினையாக்காமல், அமைப்பாளர்கள் உட்பட 90 வீதமானவர்களின் ஆதரவுடன் தமது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாகவும் அமைச்சர் இதன் போது தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஜனசேத பெரமுனவின் தலைவர் சங்கைக்குரிய பத்தர முல்லை சீலானந்த தேரரும் கலந்து கொண்டார். நீதிமன்றங்களில் பல வழக்குகள் உள்ளன. அவை தீர்க்கப்பட்டாலும் எங்களுக்கு கவலையில்லை. பத்து வருடங்கள் சென்றாலும் பிரச்சினை இல்லை.

கட்சியின் அனைத்து செயற்பாட்டாளர்களும் என்னுடன் ஒன்றிணைந்துள்ளனர். பொதுமக்களின் கருத்து என்பது நீதிமன்றத்தால் தீர்க்கப்படக்கூடிய ஒன்றல்ல. கட்சி முன்னோக்கி செல்வதை தடுக்கவே சிலர் நீதிமன்றம் சென்றுள்ளனர். மக்களின் ஜனநாயக உரிமைகளை அழிக்க முயற்சிக்கின்றனர்.

நிமல் சிறிபால உட்பட ஒரு சிலர் கட்சியை சீர்குலைத்து ஒருவரின் வாலாக மாற்ற நினைத்துள்ளனர். 06

## நான்கில் ஒருவருக்கு பக்கவாதம் முன்னரே கண்டறிவது அவசியம்

நாட்டில் நான்கு பேரில் ஒருவருக்கு, பக்கவாதம் ஏற்படுவதாக இலங்கை நரம்பியல் நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

உலக மூளை தினத்தையிட்டு எதிர்வரும் 22 'மூளை ஆரோக்கியம் மற்றும் தடுப்பு' அனுஷ்டிக்கப்படுகிறது.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே , இலங்கை நரம்பியல் நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் டொக்டர் காமினி பத்திரன இவ்விடயத்தை சுட்டிக்காட்டினார்.

வீட்டிலேயே இந்த நோயைக் கண்டறிவது மிகவும் முக்கியம் என தெரிவித்த அவர் ஏதேனும் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளதா? என அவதானித்து உடனடியாக வைத்தியசாலைக்கு செல்லுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பக்கவாதம் என்பது உயிரிழப்பை ஏற்படுத்தக்கூடிய ஒரு நோயாகும், நாட்டில் 90 வீதமானவர்களில் பக்கவாத நோய் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இரத்த அழுத்தம், நீரிழிவு, கொலஸ்ட்ரால் அதிகரிப்பு உடல் பருமன் மற்றும் புகைபிடித்தல் போன்ற காரணிகளும் பக்கவாதம் ஏற்படுவதற்கு வழிவகையாக அமையுமென சுட்டிக்காட்டினார். பக்கவாதத்துக்கு இப்போது மருந்து உண்டு. இது இரத்தக் கட்டியைக் கரைக்கும். எனவே, பக்கவாதத்தை வீட்டிலேயே அடையாளம் கண்டு, அருகிலுள்ள மருத்துவமனைக்குச் செல்வது மிகவும் அவசியம்.

பக்கவாதத்தை மூன்று அறிகுறிகள் மூலம் அடையாளம் கண்டுகொள்ள முடியும். வாய் ஒரு பக்கம் செல்வது, 06

### எரிபொருள்,எரிவாயு, மின்கட்டண குறைப்பு

## மக்களுக்கான பிரதிபலன்களை உறுதிப்படுத்த அதிரடி ஏற்பாடுகள்

சமையல் எரிவாயு, எரிபொருள், மின்சாரம் என்பவற்றின் விலை குறைப்புக்களின் பிரதிபலன்கள் நுகர்வோரைச் சென்றடைகிறதா என்பதை அவதானிக்க, நுகர்வோர் அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளள்ளதாக சபையின் தலைவர் துசித இந்திரஜித் உடுவர தெரிவித்துள்ளார்.

இதன்பொருட்டு, எதிர்வரும் நாட்களில் நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்புகள் மற்றும் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு சோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

நாடளாவிய ரீதியிலுள்ள உணவகங்கள், சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் ஏனைய வர்த்தக நிலையங்களில் தொடர்ச்சியாக சோதனைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## ஆணைக்குழு உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும்

### மக்களின் ஜனநாயக உரிமைக்கு சந்தர்ப்பம் வழங்குவது அவசியம்



தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிடைத்துள்ள அதிகாரத்தை பயன்படுத்தி உடனடியாக தேர்தலை நடத்தி மக்களின் ஜனநாயக்கத்தை உறுதிப்படுத்த தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் (17) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே மேற்கண்டாவாறு அவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏற்கனவே தேர்தல் ஆணைக்குழு உள்ளூராட்சி சபைத் தேர்தலை அறிவித்து, அதனை நிறுத்தியது. இவ்வாறு காலத்தை இழுத்தடிக்காமல் மக்களின் ஜனநாயக உரிமைக்கு சந்தர்ப்பம் வழங்காது தேர்தலை இழுத்தடிக்காது உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடும் உடனடியாக தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே. ஜனநாயக முறைப்படி மக்கள் தங்கள் விரும்பிய ஒருவரை தெரிவு செய்துக்கொள்ள உரித்துள்ளவர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆடி மாதம் 03ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 முஹர்ரம் பிறை 12

## குறள் தரும் சிந்தனை



வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின்

பிறர் பொருளாக இருப்பினும் அதனைத் தன் பொருளைப் போலவே கருதி நேர்மையுடன் வாணிகம் செய்தலே வணிக நெறியெனப்படும்.

# புகைத்தலால் ஏற்படும் நோய்களுக்கு சிகிச்சை அளிக்க அதிக செலவினம்

புகைத்தல் பாவனையால் அரசாங்கத்திற்கு கிடைக்கப்பெறும் வருமானத்தை விடவும், அப்பழக்கத்தின் விளைவாக ஏற்படக்கூடிய நோய்களுக்கு சிகிச்சை அளிக்கவென இரு மடங்கு செலவிடப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பான புதிய தரவுகள் அடங்கிய அறிக்கையை புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான மத்திய நிலையம் வெளியிட்டுள்ளது.

அந்தத் தரவுகள் அதிர்ச்சிகரமானவையாக நோக்கப்பட வேண்டியவையாகும். கடும் பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி கட்டம் கட்டமாக மீட்சி பெற்று மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்திருக்கும் இந்நாடு புகைத்தல் பழக்கத்தினால் ஏற்படக்கூடிய நோய்களுக்கு இவ்வாறு பாரிய நிதியை செலவிடுவது நியாயப்படுத்த முடியாத விடயமாகும். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனம் செலுத்துவது இன்றியமையாததாகும்.

அதேநேரம் புகைத்தல் பழக்கமானது உடல், உள ஆரோக்கியத்திற்கு எவ்விதத்திலும் நன்மை பயக்கக் கூடியதல்ல. கெடுதல்களும் உயிராபத்தும் தான் புகைத்தலின் பிரதிபலனாக விளங்குகின்றன. அதுவே மருத்துவ நிபுணர்களின் கருத்துமாகும்.

இப்பழக்கத்தை முற்றிலும் தவிர்த்துக் கொள்ள முடியும். அதன் ஊடாக அதற்கு செலவிடக் கூடிய பணத்தையும் மீதப்படுத்திக் கொள்ளவும் வேறு செலவுகளுக்கு பயன்படுத்திடவும் முடியும்.

இருந்த போதிலும் இது தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படாதுள்ளதன் விளைவாக சுமார் 15 இலட்சம் பேர் இன்னும் புகைத்தல் பழக்கம் கொண்டவர்களாக இருக்கின்றனர். இது புகை பிடித்தல் பழக்கம் தொடர்பான உலகளாவிய ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நாட்டில் புகைத்தலுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் விழிப்புணர்வு நடவடிக்கைகளால் சிகரட் பாவனை 9.1 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளதோடு சிகரட் விற்பனை 2023 இல் சுமார் 19 சதவீதம் குறைவடைந்துள்ளதாக புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான மத்திய நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சம்பத் சேரம் தெரிவித்திருக்கின்றார்.

நாட்டில் சிகரட் பாவனையிலும் விற்பனையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ள போதிலும், மக்கள் மத்தியில் தவறானதும் உடல், உள ஆரோக்கியத்துக்கு கெடுதல்களை ஏற்படுத்தக் கூடியதுமான பழக்கவழக்கமாக புகைத்தல் உள்ளது.

இப்பழக்கத்தினால் உடல் உள ரீதியிலான பாதிப்புகளுக்கு நிச்சயம் முகம்கொடுக்க நேரிடும். அத்தோடு இதயநோய், புற்றுநோய் போன்ற பல தொற்றா நோய்களுக்கும் புகைத்தல் பழக்கம் மூலகாரணியாக உள்ளது.

புகைத்தலுக்காகப் பயன்படுத்தப்படும் பொருட்களில் காணப்படும் நச்சுப் பதார்த்தங்கள்தான் இந்த தொற்றாநோய்களுக்கு அடிப்படைக் காரணியாக இருக்கின்றன.

புகைத்தல் பொருளில் 4000 இற்கும் மேற்பட்ட இரசாயனப் பதார்த்தங்கள் காணப்படுகின்றன. அவற்றில் 30 இற்கும் மேற்பட்டவை கடும் நச்சுத்தன்மை கொண்டவையாகும்.

அப்படியிருந்தும் உலகில் 1.3 பில்லியன் பேர் புகைத்தல் பழக்கம் கொண்டவர்களாக உள்ளனர். அவர்களில் 80 சதவீதமானவர்கள் நடுத்தர வருமானம் பெறும் நாடுகளில் வாழ்வதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. இப்பழக்கம் காரணமாக வருடமொன்றுக்கு 8 மில்லியன் பேர் உயிரிழக்கின்றனர். அவர்களில் 1.3 மில்லியன் பேர் புகைபிடிப்பவர் வெளியே விடும் புகையை சுவாசிப்பவர்களாவர் என்றும் அந்த ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.

அந்த வகையில் இலங்கையிலும் புகைத்தலின் விளைவான நோய்கள் காரணமாக நாளொன்றுக்கு 50 தொடக்கம் 60 பேர் உயிரிழப்பதாக புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.ை

இந்நாட்டில் 2019 ஆம் ஆண்டில் புகைத்தல் பொருட்களின் விற்பனையால் 92.9 பில்லியன் ரூபா அ ரசுக்கு வருமானம் கிடைக்கப்பெற்றது. ஆனால் புகைத்தலால் ஏற்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கவென அரசாங்கம் 214 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது என்பதும் ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இதன்படி புகைத்தல் விற்பனை மூலம் கிடைக்கப்பெறும் வருமானத்தை விடவும் அப்பாவனையினால் ஏற்படக்கூடிய நோய்களுக்கு சிகிச்சை அளிக்கவென இரண்டு மடங்கு நிதியை செலவிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை நாட்டில் காணப்படுகின்றது. இது வளர்முக நாடொன்றுக்கு ஆரோக்கியமான நிலை அல்ல.

புகைத்தல் பழக்கமானது எவ்வித நன்மையையும் அளிக்கக்கூடிய ஒன்றல்ல என்பது மிகவும் தெளிவானது. அதனால் அப்பழக்கத்தை முற்றிலும் தவிர்ந்து கொள்ள முடியும்.

ஆகவே உடல் உள ஆரோக்கிய நலன்களையும் நாட்டின் பொருளாதார சூழல் நிலைகளையும் கருத்தில் கொண்டு புகைத்தல் பழக்கத்தை தவிர்த்துக் கொள்வதில் புகைபிடிப்பாளர்கள் கவனம் செலுத்த வேண்டும். அது நாட்டுக்கும் மனித சமூகத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் அளிக்கும் பாரிய சேவையாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# தேசிய நல்லிணக்கத்தின் அவசியத்தை அன்றே வலியுறுத்திய சுவாமி விபுலாநந்தர்

## அடிகளார் மறைந்து 77 ஆண்டுகள் நிறைவு



இலங்கையில் கல்விமுறைமை எவ்வாறு அமைய வேண்டும்? இனநல்லிணக்கம், தேசிய நல்லிணக்கம் எவ்வாறு அமைய வேண்டும்? என்பதை இற்றைக்கு 100 வருடங்களுக்கு முன்பே ஒரு தீர்க்கதரிசி கூறியிருந்தார். அவர்தான் அகிலம் போற்றும் உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளார் ஆவார்.

சுவாமி விபுலாநந்தர் மகாசமாதி அடைந்து இன்று (19) வெள்ளிக்கிழமை எழுபத்தேழு வருடங்களாகின்றது.

அடிகளார் 1924 இல் சுவாமி சிவானந்தரிடம் ஞானோபதேசம் பெற்று துறவியாகி (சுவாமி விபுலானந்தராகி) இவ்வருடம் (2024) நூறு வருடங்களாகின்றன. சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவறதின நூற்றாண்டில் வருகின்ற முதலாவது சிரார்த்த தினம் இன்றாகும்.

அடிகளார் பிறந்து 132 வருடங்களாகின்றன. அவர் பிறந்தது 1892.03.27 இல் ஆகும். 20 ஆம் நூற்றாண்டின் ஈடிணையற்ற பேரறிஞர் சுவாமி விபுலாநந்த அடிகளார் ஆவார். அவர் பெயரில் பல அமைப்புகள் உலகில் இயங்கி வருகின்றன. அவருக்காக பல நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. பல ஆய்வரங்குகள் நடத்தப்பட்டிருக்கின்றன.

அவர் மறைந்தது 19.07. 1947இல் ஆகும்.

"பலமொழிக் கல்வி தேசிய ஒருமைப்பாட்டையும் நாட்டினுள்ளும் நாடுகளிடையேயும் ஐக்கியத்தையும் உறுதிப்படுத்துகின்றது. சர்வதேச நல்லுறவையும் நன்முறையில் விருத்தி செய்வதற்குப் பல மொழிகளை ஆண்களும் பெண்களும் கற்றல் வேண்டும்" என்று அடிகளார் அன்று கூறியுள்ளார்.

"பலதரப்பட்ட மொழிகளைக் கற்பதனால் அறிவு விசாலிக்கும் என்றுகூறிய அவர், பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கு அப்பால் தொழிற்கல்வியையும் வழங்குவதே விரிவுக்கல்வியாகும். நல்ல திடகாத்திரமான உடல்நிலை, உவப்பான உளவளர்ச்சி பன்பனவும் கட்டாயமானது" என 1941 இல் அடிகளார் கூறினார்.

இலங்கையில் முக்கிய பாடங்களுடன் தொழிற்கல்வியும் உடற்கல்வியும் கவின்கலைகளும் கட்டாய பாடமாக்கப்பட்டன. இம்மாற்றம் முழுக்க முழுக்க விபுலானந்த அடிகளாரின் கல்விச்சிந்தனையில் எழுந்ததே ஆகும். இனங்கள் ஒன்றாக நல்லிணக்கத்துடனும் இனசௌயன்யத்துடனும் இருக்க வேண்டும் என்பதை அன்றே சிந்தித்தவர் சுவாமிகள். சிங்களமும், இஸ்லாமும், அறபும், சமஸ்கிருதமும் அவர் தோற்றுவித்த கல்லடி சிவானந்தாவில் கற்பிக்க ஏற்பாடுசெய்தவர் அடிகளார். காத்தான்குடி முஸ்லிம் மாணவர்களும் பயில வேண்டுமென்பதற்காக அவர் சிவானந்தாவை கல்லடியில் அமைத்தார்.

**விபுலமாமணி**
**வி.ரி.சகாதேவராஜா...**
(M.Ed.) A.D.E. (காரைதீவு சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணிமன்ற முன்னாள் தலைவர்)

# ஒருபுறம் அனுகூலங்கள், மறுபுறம் பிரதிகூலங்கள்!



சமூக ஊடகங்களால் சீரழியும் மாணவர் கல்வி!

சமூகம் எப்போதெல்லாம் புதுமை காணத் துணிகின்றதோ, அப்போதெல்லாம் மாற்றத்தின் வழியாய் வெகுஜன ஊடகங்களும் வளர்ந்து கொண்டே செல்கின்றன. உலகில் 150 கோடிக்கும் அதிகமான மக்கள் சமூக வலைத்தளங்களை உபயோகிக்கின்றனர். சமூக வலைத்தளங்கள் வரிசையில What's app, Facebook, twitter, Imo, Instagram, linked in, my space, google+, you tube, tagged முதலிய பலவகையான இணையத் தளங்கள் காணப்படுகின்றன. இவ்வாறான சமூக வலைத்தளங்களுள் புலனம் (what's app) இன் சாதக, பாதகங்களை பாடசாலை மாணவர்கள் எவ்வாறு எதிர்கொள்கின்றனர் என்பதை ஆராய்வது அவசியம்.

What's app ஊடாக இரு நபர்களுக்கிடையில் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட நபர்களுக்கிடையில் கருத்துப் பரிமாற்றங்கள், குரல் பதிவுகள், புகைப்படங்கள், காணொளிகள், காணொளி அழைப்புகள் என்பவற்றை மேற்கொள்ள முடியும். இதனை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு மட்டங்களிலும் பல்வேறு விதங்களில் மாணவர்கள் இவ்வலைத்தளத்தை கையாளுகின்றனர். ஆசிய நாடுகளில் அதிகமாக பயன்படுத்தப்படுகின்ற முதல் 5 வலைத்தளங்களில் J. Brian Action மற்றும் Jan koum ஆகியவர்களால் 2009 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட புலனம் (what's app) 3ஆவது இடத்தில் உள்ளது. மாணவர்களுக்கு தொழில்நுட்ப வளர்ச்சி கையாளுகையின் ஆரம்ப அறிவையும் அடித்தளத்தையும் what's app வழங்குகின்றது எனலாம்.

அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் விளைவால் வாகனங்களுக்கான பொருளை பெற்றுக் கொள்வதற்கு QR முறைமை கொண்டு வரப்பட்டது. தொழில்நுட்ப மற்றும் ஒன்லைன் மூலமான அம்முறைமையை செய்து கொள்வதில் பலர் இன்னல்களை மேற்கொண்டதோடு, அதனை மேற்கொள்ள பிறிதொருவரை நாடிச் செல்ல வேண்டிய நிலை இருந்தது. கல்வி கற்ற மாணவர்களே அதனை மேற்கொள்ள கருவியாகவும் இருந்தார்கள் என்பதை சுட்டிக்காட்ட வேண்டும்.

அவ்வாறே தற்போதைய சூழ்நிலையில் பல்கலைக்கழக விண்ணப்பங்கள் முதல் குடும்ப விபரங்கள் வரை ஒன்லைன் மூலமே நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட வற்வரி தகவல் முறை பதிவேடுகளும் ஒன்லைன் மூலமே பதிவுசெய்யப்படுகின்றன. மாறிவரும் உலகின் சவால்களுக்கு ஏற்ப தம்மை இசைவுபடுத்திக் கொள்ளகூடிய ஆளுமையின் அடித்தளத்தை what's app வழங்குகின்றது எனலாம்.

அவ்வாறே நெருக்கடியான காலங்களில் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை அதிகரிக்கும் நோக்கில் மேலதிக வகுப்பிற்காக what's app வளைத்தள உத்திகளை கையாண்டு (what's app group call) கற்றல் செயற்பாட்டை முன்னெடுக்கும் வாய்ப்பையும் இந்த ஊடகம் வழங்குகின்றது.

மற்றும் குழுச் செயற்பாடுகள், நிகழ்ச்சி வடிவமைப்புகள் என்பவற்றை திட்டமிட்டு அனைவரையும் ஒன்றிணைத்து மேற்கொள்வதற்கு what's app மூலமான குழுமங்களை உருவாக்கி செயற்படுத்துவது இன்றியமையாததாகும். இன்றைய வகுப்பறை முகாமைத்துவ செயற்பாட்டின் ஒரு வடிவமாய் வகுப்பாசிரியருக்கும் மாணவர்களுக்கும் பெற்றோருக்குமான what's app குழுமங்கள் உருவாக்கப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்ட ஒரு விடயமாகும்.

மறுபுறம் சிந்திக்கையில் நியூட்டனின் 3ஆம் விதி நினைவிற்கு வருகிறது. எந்தவொரு தாக்கத்திற்கும் நேரானதும் எதிரானதுமான மறுதாக்கம் உண்டு என்பது சிந்தையில் எட்டுகிறது. What's app தொழிற்பாட்டில் சமூக விழிப்புணர்வும் கல்விச் சிந்தனையும் ஒரு பகுதியாகவே காணப்படுகின்றது. மற்றைய பகுதிகள் ஏதோ ஒரு வகையில் பாதக செயற்பாட்டிற்கு வழிகோலுகின்றது என்பது பலவருட காலமாக அனைவராலும் விமர்சிக்கப்படுகின்ற உண்மையாகும். கல்வி பயிலும் மாணவர்களுக்கு what's app பாவனை சில நேரங்களில் நன்மையுடையதாக அமைந்தாலும் பல நேரங்களில் அவர்களின் கற்றல் செயற்பாட்டை முடக்கும் தன்மையையும் கொண்டுள்ளது எனலாம். கற்றல் செயற்பாட்டிற்காக what's app ஐ பயன்படுத்துவதற்கு மாறாக முழுநேரத் தொழிற்பாடாக மாணவர்கள் அதனை

மாற்றியமைத்திருக்கின்றமையை அவதானிக்க முடிகின்றது. உரையாடல்கள், குறுஞ்செய்திஅனுப்புதல் குழுமங்களை உருவாக்கி அரட்டை அடித்தல் Status பதிவுகளை இடுதல் முதலிய செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர். இதனால் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் மாணவர்களின் ஆர்வம் குறைந்து செல்கின்றமையும் இனங்காணப்பட்ட விடயமாகும்.

மேலும் பாலியல் சார்ந்த வீடியோக்களும் சில தவறான குழுமங்களும் உருவாக்கப்பட்டு அதில் மாணவர்கள் இணைந்து கொள்வதால் அவர்களின் நடத்தையில் பிறழ்வு நிலை தென்படக் காரணமாக அமைகின்றது. இதனால் வகுப்பறை செயற்பாடுகள் ஆண் பெண் எதிர்பால் கவர்ச்சி நிலைக்கு வழிவகுத்துள்ளது எனலாம்.

இன்று மாணவர்கள் whats app இல் status பதிவுகளை மேற்கொள்ளும் அளவிற்கு கூட பத்திரிகையில் தமது ஆக்கங்களை பிரசுரிக்க முனைவதில்லை. காரணம் கற்றல் மீது அவர்கள் கொண்ட ஆர்வத்தை விட கையடக்க தொலைபேசியில் தமது விடயங்களை மற்றவர்களுக்கு பரவலாக்கம் செய்வதனையே விருப்பப் குறிக்கோளாக கொண்டுள்ளனர் எனலாம். புத்தகங்களை வாசிக்கும் பழக்கம் இன்றைய மாணவர்களிடத்தில் மழுங்கிக் காணப்படுகின்றது என்றே சொல்ல வேண்டும். பொழுதுபோக்கிற்காக புத்தகம், பத்திரிகை வாசித்த நிலை மாறி தொலைபேசியில் what's app பாவிப்பதையே தமது பொழுதுபோக்காக கொண்டுள்ளனர் எனலாம்.

ஆகவேதான் வெகுஜன ஊடகங்கள் எவ்வளவு நன்மைகளை மாணவர் மத்தியில் உண்டாக்கினாலும் அதற்கு ஏற்றாற் போல பாதக செயற்பாட்டிற்கும் வழிவகுத்து நிற்கின்றன என்றே கூற வேண்டும்.

**சிவகுமார் டிலக்சினி...**
4ஆம் வருட மாணவி, (கல்வி, பிள்ளை நலத்துறை, கிழக்கு பல்கலைக்கழகம்)

# சிட்னியில் தமிழும் சைவமும் செழிக்க சமூகப் பணியாற்றிய வேலுப்பிள்ளை



அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் தமிழும் சைவமும் மேலோங்கி வளர, பெருந்தொண்டு ஆற்றிய மூத்த சமூக சேவையாளரான செல்லையா வேலுப்பிள்ளை கடந்த 15 ஆம் திகதி காலமானார்.

தமிழருக்கே அடையாளம் தந்த சைவநெறியின் மேன்மையை புலம்பெயர் மண்ணில் காத்து வளர்த்த பெருமைக்குரியவர்களில் சிட்னியில் முதன்மையானவர் வேலுப்பிள்ளை அவர்கள்.

மறைந்த வேலுப்பிள்ளை அவர்கள் முல்லைத்தீவு மண்ணை பிறப்பிடமாகக் கொண்டவர். ஆரம்பக்கல்வியை மன்னார் எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரியில் பயின்றார். பின்னர் உயர்தர கல்வியை யாழ். பரமேஸ்வரா கல்லூரியில் கற்றார்.

வேலுப்பிள்ளை ஐயா கடந்த பல வருடங்களாக சைவ மக்களின் இறுதிக் கிரியைகளை நடத்துவதில் சேவை மனப்பான்மையுடன் தொண்டு ஆற்றிய பெருமைக்குரியவர். சிட்னியில் சைவமன்றக் காவலராக, ரசனைமிகு கலைஞராக, பழந்தமிழ் இலக்கிய வாசகராக விளங்கியவர். தமிழுக்கும், சிட்னி தமிழ் சமுகத்திற்கும் அவர் ஆற்றிய பணிகள் அளப்பரியன.

தமிழ் மக்கள் செறிந்து வாழும் கம்பர்லாந்தில் (Cumberland) தமிழ்ச்சங்கத்தை உருவாக்க வித்திட்டவர்களில் இவரும் ஒருவராவார். முதுமை அவரை வாட்டினாலும், பல உபாதைகளால் சிரமப்பட்டாலும் கோயில் தரிசனம் பெறத் தவறியதில்லை.

அத்துடன் அவுஸ்திரேலியாவில் கோயில்கள், தமிழ்ப் பாடசாலைகள், தமிழ் அமைப்புகள் நடத்தும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் அவரின் புன்முறுவல் பூத்த முகத்தினை என்றும் காணலாம். அவுஸ்திரேலியா மண்ணில் நீண்ட காலம் சமூகப்பணியாற்றிய அவரின் மறைவு பேரிழப்பாகும்.

சிட்னியின் மூத்த குடிமகனான வேலுப்பிள்ளை ஐயா பல வருடங்களாக மறைந்த 'வானொலி மகேசன் மாமா' உடன் இணைந்து மறைந்த சைவ மக்களுக்கு இறுதிச் சடங்குகளைச் செய்து சமூகத் தொண்டாற்றினார்.

அத்துடன் தமிழ் மூத்த குடிமக்கள் சங்கங்களில் ஈடுபட்டு சேவையாற்றினார். தனது கணீரென்ற குரலில் தேவாரம், புராணம் பாடல்களைப் பாடுவதில் வல்லமை பெற்றிருந்தார். சிட்னி முருகன் கோயிலில் தொண்டனாக நீண்ட காலம் பணியாற்றினார்.

தற்பெருமை இல்லா சமூகத் தொண்டனாக, தமிழ்ச் சமூகத்துக்கு மகத்தான சேவை புரிந்தவர். அவரின் மறைவு சிட்னி தமிழ் சமூகத்துக்கு பெரும் இழப்பாகும்.



**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

# இந்திய உச்சநீதிமன்ற நீதிபதியாக தமிழ்நாடு ஆர்.மகாதேவன்

இந்திய உச்சநீதிமன்றத்தின் நீதிபதியாக தமிழ்நாட்டைச் சேர்ந்த சென்னை உயர்நீதிமன்றத்தின் பொறுப்பு தலைமை நீதிபதி ஆர்.மகாதேவன் நேற்று பதவியேற்றுக் கொண்டார். இதேபோல ஜம்மு காஷ்மீர் உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி கோடீஸ்வர் சிங்கும் உச்சநீதிமன்றத்தின் நீதிபதியாக நேற்று பதவியேற்றார். இதனையடுத்து உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகள் எண்ணிக்கை முழுமையடைந்தது.





இந்திய உச்சநீதிமன்றத்தில் மொத்த நீதிபதிகள் எண்ணிக்கை 34. உச்சநீதிமன்றத்தில் இரண்டு நீதிபதிகள் இடம் காலியாக இருந்தது. இதனையடுத்து உச்சநீதிமன்றத்தின் நீதிபதிகளை நியமிக்கும் குழு குழுவானது, சென்னை உயர்நீதிமன்றத்தின் பொறுப்பு தலைமை நீதிபதி ஆர். மகாதேவன், ஜம்மு காஷ்மீர் உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி கோடீஸ்வர் சிங் ஆகியோரை உச்சநீதிமன்ற நீதிபதிகளாக அக்குழு பரிந்துரைத்தது.

தமிழ்நாட்டின் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் பிரதிநிதித்துவம் பெற வேண்டும் என்பதற்காக சமூகநீதி அடிப்படையில் ஆர்.மகாதேவன், உச்சநீதிமன்ற நீதிபதியாக குழுவால் பரிந்துரைக்கப்பட்டார். மத்திய அரசும் அதனை ஏற்றுக் கொண்டது. அக்குழுவின் இந்த பரிந்துரை தமிழ்நாட்டில் பெரும் பாராட்டைப் பெற்றது. தமிழ்நாட்டின் மூத்த எழுத்துலக ஆளுமை மா. அரங்கநாதனின் மகன் ஆர்.மகாதேவன் உச்சநீதிமன்ற நீதிபதியாகியுள்ளார்.

இருவருக்கும் நேற்று தலைமை நீதிபதி டி.வை சந்திரசூட் பதவியேற்பு செய்து வைத்தார். இரு நீதிபதிகள் பதவியேற்பைத் தொடர்ந்து உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகள் எண்ணிக்கையான 34 முழுமையடைந்தது.

# இஸ்லாம் போற்றும் இளமை பருவம்



வாலிப பருவம் என்பது மனித வாழ்க்கையின் ஒரு முக்கியமான கட்டமாகும். அல்லாஹ்வின் அற்புதமான பாக்கியங்கள் வாய்க்கப்பெற்ற வசந்த காலம் தான் இப்பருவம். சிறந்த உடல் பலமும், உளப் பலமும் உச்சளவில் சங்கமிக்கும் பருவம் இது.

இதனை அல்குர்ஆன், 'அல்லாஹ் எத்தகையவன் என்றால் உங்களை (ஆரம்பத்தில்) பலவீனத்திலிருந்து அவன் படைத்தான், பின்னர் பலவீனத்துக்குப் பிறகு உங்களுக்கு பலத்தையும் உண்டாக்கினான், அப்பால், அப்பலத்திற்குப் பின்னர் (முதுமையின்) பலவீனத்தையும் முதுமைப் பருவத்தினையும் ஆக்கினான்' (அல் றூம்:54) என்று குறிப்பிட்டுள்ளது.

இவ்வசனத்தில் முதுமையின் பலவீனத்துக்கு முன்னால் உள்ள பலமான காலப்பகுதி கட்டிளமைப் பருவம் என சுட்டக்காட்டப்படுகிறது.

இவ்வாறு துடிப்பும், உற்சாகமும் உத்வேகமும் நிறைந்ததாக இளமைப் பருவம் விளங்குவதால் தான் இளைஞர்கள் சமூகத்தின் முதுகெலும்பு எனப்படுகிறார்கள்.

இளைஞர்கள் பற்றியும் அவர்களது செயற்பாடுகள் பற்றியும் அல் குர்ஆன் பல இடங்களில் எடுத்தியம்பியுள்ளது. யஹ்யா (அலை) அவர்கள் பற்றி குறிப்பிடும்போது, அவர் இளைஞராக இருக்கும் போதே நாம் அவருக்கு ஞானத்தை வழங்கினோம்' (அல் குர்ஆன் 21:12) என்றுள்ளது. யூசுப் (அலை) பற்றி குறிப்பிடும் போது, 'இன்னும் அவர் வாலிபத்தை அடைந்த பொழுது நாம் அவருக்கு சட்ட நுணுக்கத்தையும், கல்வியையும் கொடுத்தோம். இவ்வாறே நன்மை செய்வோருக்கு நாம் கூலி கொடுக்கின்றோம்' (அல் குர்ஆன் 12:22) என்றும் சுட்டிக் காட்டியுள்ளது.

அற்புதமான அழகும், இளமைத் துடிப்பு மிக்க இளைஞராக இருந்த யூசுப் (அலை) அவர்கள் தனது மனோ இச்சையின் தூண்டுதலுக்கு ஆளாகாமல் கீழ்த்தரமான உணர்வுகளுக்கு எதிராகப் போராடி தனது கற்பொழுக்கத்தை பாதுகாத்துக்கொண்ட வரலாற்றை சூறா யூசுப் மிகத் தெளிவாக விளக்குகின்றது. யாரும் அறிந்திரா வண்ணம், மிக இலகுவாக தன் மனோ இச்சைக்கு வழிபட்டு ஆசையை தீர்த்துக் கொள்ள வாய்ப்பிருந்தும், அல்லாஹு தஆலா தனக்குத் தந்திருக்கின்ற இந்த இளமைப்பருவமும், அதன் பலமும், அல்லாஹ்வின் திருப்பொருத்ததை அடைந்து கொள்வதற்கான முதலீடாகவே அமைய வேண்டும் என்பதில் யூசுப் (அலை) உறுதியாக இருந்தார்.

கீழ்த்தரமான ஆசைகளுக்கு கட்டுப்பட்டு அற்ப இன்பத்தை அடைவதை விட காலமெல்லாம் சிறைவாசம் அனுபவிப்பது மேலானது எனக் கூறினார்.

இதனை அல்குர்ஆன், 'என் இரட்சகனே! அவர்கள் என்னை எதன் பக்கம் அழைக்கிறார்களோ (அத்தீய காரியத்தை) விட சிறைகூடமே எனக்கு மிக விருப்பமானதாகும். ஆகவே (இப்பெண்களாகிய) அவர்களுடைய சூழ்ச்சியிலிருந்து என்னைத் திருப்பாவிட்டால் அவர்களின் பக்கம் சாய்ந்துவிடுவேன். மேலும் (பாவம் செய்யும் அறிவீனர்களில் ஒருவனாக நான் ஆகிவிடுவேன் என்று (பிரார்த்தித்து) கூறினார். (அல் குர்ஆன் 12:33)

இவ்வாறு தன் கட்டிளமைப் பருவத்தை, அதன் அருட்கொடைகளை வீணடிக்காமல், இப்பருவத்தில் ஆர்ப்பரித்தெழுகின்ற தீய உணர்வுகளைக் கட்டுப்படுத்தி அல்லாஹ் விரும்புகின்ற பிரகாரம் தனது வாலிபத்தைக் கழிப்பவன் பற்றி நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு இயம்பினார்கள்.

'எந்த நிழலும் இல்லாத மறுமை நாளில் ஏழு கூட்டத்தினருக்கு அல்லாஹ் அர்ஷின் நிழலைக் கொடுக்கின்றான். அதில், தனது வாலிபத்தை அல்லாஹ்வின் வணக்க வழிபாட்டில் கழித்த ஒரு மனிதனும் அடங்குகிறான். (ஆதாரம்: அபூதாவுத்). இது தனது வாலிபத்தை முறையாகக் கழித்த ஒரு வாலிபனுக்கு அல்லாஹ் கொடுக்கின்ற அதி உச்ச கௌரவமாகும்.

எந்த ஒரு சமூகத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும் பெரும்பாலும் அச்சமூகத்தின் வாலிபர்களாலேயே தீர்மானிக்கப்படுகின்றது என்ற உண்மையை உலக வரலாறு எடுத்தியம்புகிறது. இஸ்லாம் 23 ஆண்டு காலப்பகுதிக்குள் ஏற்படுத்திய மாபெரும் சமூகப் புரட்சியின் முகவர்களாகவும், அதன் முன்னணி அங்கத்தவர்களாகவும் இருந்தவர்கள் வாலிபர்களாவர். இஸ்லாமிய வரலாற்றைப் படிப்பவர்கள் இதனைப் புரிந்து கொள்வார்கள். இஸ்லாத்தின் தூதை முதன் முதலாக ஏற்றுக்கொண்ட அபூபக்கர் (றழி) அவர்கள் 37 வயதுடையவராக இருந்தார். அவரது அறிவு, ஆற்றல், பலம், பணம் எல்லாவற்றையும் இஸ்லாம் என்ற உயரிய தூதை முழு உலகிற்கும் கொண்டு சேர்ப்பதற்கான முதலீடாகப் பயன்படுத்தினார்.

இஸ்லாம் அறிமுகமாகிய ஆரம்ப காலப் பகுதியில் கடுமையான சவால்களும் கொடுமையான சோதனைகளும் ஏற்பட்டன. இஸ்லாத்தை பகிரங்கமாக பிரசாரம் செய்வதிலும், இஸ்லாத்தை தழுவியவர் அதனை வெளிப்படுத்துவதிலும் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டனர். அச்சந்தர்ப்பத்திலும் முஸ்லிம்களுக்காக தனது வீட்டைக் கொடுத்து அங்கிருந்து நபி(ஸல்) அவர்கள் பிரசாரத்தை மேற்கொள்வதற்கான ஏற்பாட்டை செய்து கொடுத்த அர்கம் பின் அபில் அர்கம் (ரழி) அவர்கள் வெறும் 16 வயது நிரம்பிய வாலிபராக இருந்தார். 'தாருல் அர்க்கம்' என்றியப்படுகின்ற அவரது வீடு இஸ்லாமிய தஃவா வரலாற்றின் மிகப் பெரும் சான்றாகவே அடையாளப்படுத்தப் படுகிறது.

இவ்வாறு இஸ்லாத்திற்காக தம்மை முழுவதுமாக அர்ப்பணித்த நபித்தோழர்கள் பலர் இருந்துள்ளார்கள். உமர், உஸ்மான், அலி, அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத், ஸஈத் இப்னு ஸெய்த், அப்துர் ரஹ்மான் பின் அவ்ப், பிலால் பின் றபாஹ், முஸ்அப் பின் உமைர் (ரழி) போன்ற நபித்தோழர்கள் ஆரம்ப காலத்தில் இஸ்லாமிய அழைப்புப் பணியிலும், பிற்காலத்தில் இஸ்லாத்தின் பரவலிலும் முக்கிய பங்காற்றியுள்ளார்கள்.

எகிப்து, சிரியா, ஈராக், வட ஆபிரிக்கா, மத்திய ஆசியா போன்ற பிரதேசங்களை வெற்றி கொள்வதிலும், ரோம், பாரசீக ஆதிக்கத்தை முறியடித்து இஸ்லாமிய சாம்ராஜ்யத்தை கட்டியெழுப்புவதிலும் இளைஞர்களின் பங்களிப்பு மிகக் காத்திரமானது.

வட ஆபிரிக்காவை வெற்றி கொண்ட உக்பா பின் நாபிஃ 18 வயது நிரம்பியவராகவும், கொன்ஸ்தாந்திநோபிள், ஸ்பெயினூடாக ஐரோப்பாவை இஸ்லாமிய வெற்றிக் கொடியின் கீழ் கொண்டுவரப் புறப்பட்ட தாரிக் பின் ஸியாத் 17 வயதுடையவராகவும் இருந்தார்.

இவ்வாறு இஸ்லாத்தின் பரவலுக்காகவும் அதன் மேம்பாட்டுக்காகவும் மாத்திரமல்லாமல் சமூகத்தைக்காக்கும் அரண்களாகவும், அதன் வளர்ச்சிக்கான உரமாகவும் திகழ்ந்த நற்பண்புகள் நிறைந்த இளைஞர்களை உருவாக்கிய பெருமை இஸ்லாத்துக்கு உள்ளது.

ஆனால் இன்றைய உலகமயமாக்கல் ஏற்படுத்தியுள்ள சூழல் தாக்கங்களால் இளைஞர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தவறான பழக்கவழக்கங்களாலும் நடத்தைகளாலும் கவரப்பட்டவர்களாகப் பெரும்பாலான இளைஞர்கள் காணப்படுகிறார்கள்.

ஆனால் இளைஞர்களை குடும்பத்துக்கும் சமூகத்திற்கும் நாட்டுக்கும் பங்களிக்கக்கூடிய நற்பிரஜைகளாக உருவாக்குவதிலும் நெறிப்படுத்துவதிலும் இஸ்லாம் அதிக கவனம் செலுத்தியுள்ளது. அதற்கான தேவை பரவலாக உணரப்பட்டுள்ள காலமாக இன்றைய நவீன யுகம் விளங்குகிறது.

அதன் காரணத்தினால் இஸ்லாமிய வழிகாட்டல்களுக்கு அமைய இளைஞர்கள் நெறிப்படுத்தப்பட வேண்டும். அதற்கான பொறுப்பு பெற்றோருக்கும் சமூக நிறுவனங்களுக்கும் உள்ளது. இதன் நிமித்தம் பெற்றோருக்கும் இளைஞர்களுக்கும் அறிவூட்டி வழிகாட்டும் ஆக்கபூர்மான கருத்தரங்குகளும், பயிற்சி நெறிகளும் வினைத்திறனோடு நடாத்த வேண்டும். நெறி பிறழ்வுக்கு துணைபுரியும் காரணிகளைக்கண்டு, அவர்கள் அவற்றிலிருந்து தங்களைத் தூரமாக்கிக் கொள்ளவென உறுதி கொள்ள வேண்டும். அதற்கு ஏற்ப அவர்களை நெறிப்படுத்த வேண்டும். தங்களது வாழ்க்கையின் முக்கியத்துவத்தையும் மதிப்பையும் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதுவே இன்றைய தேவையாகும்.

கலாநிதி, அல்ஹாபிழ்
**எம்.ஐ.எம். சித்தீக்...**
(அல்ஈன்ஆமி)
B.A.Hons, (Al Azhar university, Egypt) M.A.& PhD (International Islamic university, Malaysia)

## ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# மனித வாழ்வுக்கான ஒழுக்க மாண்புகள்



இஸ்லாம் ஏக இறைவனால் மனித சமுதாயத்திற்கு அருளப்பட்ட மார்க்கமாகும். இம்மார்க்கம் மனிதனுக்குத் தேவையான உபதேசங்களை வழங்கி உள்ளது. அதில் ஒரு மனிதனுக்கு முக்கியமான, தேவையான, அவசியமான அன்றாட வாழ்வில் மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க மாண்புகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இஸ்லாம் கூறும் ஒழுக்க மாண்புகளை ஒரு மனிதர் உலக வாழ்வில் கடைபிடித்து வாழும் போது அவர் இவ்வுலக வாழ்க்கையிலும் மறுஉலக வாழ்க்கையிலும் வெற்றி பெறுவர் என்றுள்ளது இஸ்லாம். ஒரு மனிதரிடத்தில் ஒழுக்க பண்புகள் இல்லையென்றால் அவர் இவ்வுலகிலும் மறுமையிலும் நஷ்டமடைந்தவராக இருப்பார் என்பதையும் இஸ்லாம் அறிவுறுத்தியுள்ளது.

ஒழுக்கம் மனிதர்களிடத்தில் இல்லை என்றால் மனிதனுக்கும் மிருகத்திற்கும் வேறுபாடு இல்லாமல் போயிருக்கும். மற்ற படைப்பினங்களுக்கு இல்லாத சிறப்பம்சம் மனிதனுக்கு உண்டு என்றால் அது ஒழுக்க நெறியோடு வாழும் வாழ்க்கைதான்.

ஒரு குழந்தையின் முதல் முன்மாதிரி அவனுடைய தாயும், தந்தையும் ஆவர். பெற்றோர்களிடத்தில் ஒழுக்க மாண்புகள் இருக்கும் என்றால் பிள்ளைகளிடத்திலும் அது பிரதிபலிக்கும். அதனால் தான் இஸ்லாம் குழந்தை வளர்ப்பில் பெற்றோர்களின் பங்களிப்பை அளப்பரியதாக கருதுகிறது.

ஒரு தடவை நபி(ஸல்) அவர்கள், "உலகில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் இயற்கை மார்க்கமான தீனுல் இஸ்லாத்தில்தான் பிறக்கின்றன. அக்குழந்தையை நெருப்பு வணங்கிகளாக (இணை வைப்பவராக) அவர்களது பெற்றோர்கள்தான் மாற்றி விடுகின்றனர்' என்று குறிப்பிட்டுள்ளார்கள். (நபிமொழி)

ஒரு மனிதன் தன் பார்வை விஷயத்தில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று இஸ்லாம் போதிக்கின்றது. ஏனெனில் பார்க்கக் கூடாத காட்சிகளைக் கண்கள் பார்க்கும்போது தவறான எண்ணம் தோன்றும். மிக இலகுவாக மனிதன் ஒழுக்கக் கேடான காரியங்களைச் செய்வதற்கு முதல் படியாக பார்வை அமையும்.

அதனால்தான் அல் குர்ஆன் பார்வை தொடர்பாக அறிவுரை கூறுகிறது. (நபியே!) இறைநம்பிக்கை கொண்ட ஆண்களிடம், அவர்கள் தங்கள் பார்வைகளைப் பேணிக் கொள்ளும்படியும் தங்களுடைய வெட்கத்தலங்களைப் பாதுகாத்துக் கொள்ளும்படியும் நீர் கூறும். இதுவே, அவர்களுக்கு மிகத் தூய்மையான வழிமுறையாகும்.

(நபியே!) இறைநம்பிக்கை கொண்ட பெண்களிடம் கூறும்: அவர்கள் தங்களுடைய பார்வைகளைப் பேணிக் கொள்ளட்டும். தங்களுடைய வெட்கத் தலங்களைப் பாதுகாக்கட்டும்;

(அல் குர்ஆன் 24: 30, 31)

இஸ்லாம் ஆடை விடயம் குறித்தும் அறிவுரை வழங்கியுள்ளது. 'தங்களுடைய அழகை வெளியில் காட்டாதிருக்கட்டும். வெளியே தெரிகின்றவற்றைத் தவிர! மேலும், தங்களுடைய மார்புகள் மீது தங்கள் முந்தானையைப் போட்டுக் கொள்ளட்டும்.' (அல் குர்ஆன் 24:31)

அதேநேரம் நபி(ஸல்) அவர்கள், இறுக்கமாக ஆடையணிவது கூடாது என்றார்கள் (நபிமொழி) "கையை வெளியே எடுக்க இயலாத அளவிற்கு இறுக்கமாக ஆடையைச் சுற்றிக் கொள்வதையும் ஒரே ஆடையை அணிந்திருக்கும் போது வெட்கத்தலங்கள் தெரியும்படியாக இரு முழங்கால்களையும் நட்டு வைத்து உட்காருவதையும் நபி(ஸல்) அவர்கள் தடை செய்துள்ளார்கள்'. (ஆதாரம் : புஹாரி)

சமூகத்தில் தீய செயல்கள் பெருகுவதற்கு தீய நண்பர்களின் நட்பு காரணமாக உள்ளது. அதனால் தான் அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள், "நல்ல நண்பனுக்கும் தீய நண்பனுக்கும் உதாரணம் கஸ்தூரி வைத்திருப்பவரும் கொல்லனின் உலையுமாகும். கஸ்தூரி வைத்திருப்பவரிடமிருந்து உமக்கு ஏதும் கிடைக்காமல் போகாது. நீர் அதை விலைக்கு வாங்கலாம். அல்லது அதன் நறுமணத்தையாவது பெற்றுக் கொள்ளலாம்.

கொல்லனின் உலை உமது வீட்டையோ அல்லது உனது ஆடையையோ கரித்து விடும் அல்லது அவனிடமிருந்து கெட்ட வாடையை நீர் பெற்றுக் கொள்வீர்'. (ஆதாரம்: புஹாரி) என்று குறிப்பிட்டார்கள்.

இந்நபிமொழி நாம் ஒழுக்க மாண்புகளை மேற்கொள்ள சிறந்த அறிவுரையாக உள்ளது.ஒருவர் நல்லவரா என்று அடையாளப்படுத்துவதற்கு அவனது பேச்சு ஒழுங்குகளும் ஒரு காரணியாக அமைகின்றது. இறைவன் அல் குர்ஆனில், "நம்பிக்கை கொண்டோரே.... அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்! நேர்மையான சொல்லையே கூறுங்கள்'. (33:70) என்றும், 'வார்த்தைகளில் நேர்மை வேண்டும் "(நபியே! நம்பிக்கையாளர்களான) என் அடியார்களிடம், அவர்கள் மிகவும் சிறந்த பேச்சைத் தான் பேச வேண்டும் என்று நீர் கூறுவீராக!' (17:53) என்றும் குறிப்பிட்டுள்ளான்.

குரலைத் தாழ்த்திப் பேச வேண்டும் "உனது நடையில் மிதமான நிலையை மேற்கொள். உன்னுடைய குரலைச் சற்று தாழ்த்திக்கொள். திண்ணமாக, அனைத்துக் குரல்களிலும் மிகவும் அருவருப்பானது, கழுதைகளின் குரலாகும்'.

(அல் குர்ஆன் 31:19)

நல்ல வார்த்தைகளைப் பேச வேண்டும் "நல்ல (இனிய) சொல்லும் தர்மமாகும்' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: புஹாரி) கெட்ட வார்த்தை பேசக் கூடாது நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். "நான் இயற்கையாகவோ, செயற்கையாகவோ கெட்ட வார்த்தை பேசுபவராக இருந்ததில்லை. உங்களில் சிறந்தவர் உங்களில் நற்குணமுடையவரே என்று கூறினார்கள்'

(ஆதாரம்: புஹாரி).

மற்றொரு தடவை நபி(ஸல்) அவர்கள், 'அல்லாஹ் மூன்று செயல்களை வெறுக்கிறான். இவ்வாறு சொல்லப்பட்டது. அவர் சொன்னார், இவர் சொன்னார் (என ஆதாரமின்றிப் பேசுவது)' என்றும், (ஆதாரம்: புஹாரி), "தான் கேள்விப்பட்டதையெல்லாம் ஒருவன் பரப்புவதே அவன் பொய்யன் என்பதற்குப் போதுமானதாகும்'எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

சிரிக்க வைப்பதற்காகப் பொய் சொல்லக்கூடாது என கூறியுள்ள நபி(ஸல்) அவர்கள், "எவன் பிற கூட்டத்தினரைச் சிரிக்க வைப்பதற்காகப் பொய்யான செய்தியைக் கூறுகிறானோ அவனுக்குக் கேடுதான்! அவனுக்குக் கேடுதான்'

(ஆதாரம்: திர்மிதி) என்றும் கூறியுள்ளார்கள்.

அத்தோடு, அதிகமாகச் சிரிக்காதீர்கள் எனவும் நபிகளார் குறிப்பிட்டுள்ளார்கள். ஏனென்றால் அதிகமாகச் சிரிப்பது உள்ளத்தை மரணிக்கச் செய்து விடும் எனவும் குறிப்பிட்டுள்ளார்கள்'.

(ஆதாரம்: இப்னுமாஜா)

இஸ்லாம் மனித சமூகத்தைச் சீர்திருத்தம் செய்வதற்காகவும், மனிதனை மனிதனாக வாழ வைப்பதற்காகவும், ஒழுக்கம், நற்பண்புகள், நற்சிந்தனைகள் கொண்டவனாக உருவாக்கும் வழிமுறைகளைத் தெளிவுபடக் கூறுகிறது. மனிதனின் பேச்சில், அவனது சிரிப்பில், அவனது வாழ்க்கையில் மேற்கொள்ள வேண்டிய ஒழுக்க மாண்புகள் அல் குர்ஆன் மற்றும் நபிகளாரின் வாழ்வு மூலமாக தெளிவாக எடுத்தியம்பப்பட்டுள்ளது.

ஆகவே இஸ்லாம் கூறும் ஒழுக்க மாண்புகளைக் கடைபிடித்து மனிதன் வாழ்வான் எனில் இவ்வுலக வாழ்க்கையிலும் அவனது இறப்புக்குப் பின் மறுமை வாழ்விலும் வெற்றி பெறுவான் எனலாம்.

**அப்துல்லாஹ்...**

# அழகாகப் பேசுவோம், அழகானதைப் பேசுவோம்

இறை விசுவாசிகளின் பேச்சில் உண்மையும் அழகும் இருக்க வேண்டும். இதயங்களின் ஆழத்திலிருந்து வரும் நேர்மையான வார்த்தைகளாகவும் அவை அமைய வேண்டும், ஏனெனில் உண்மையும் நம்பகத்தன்மையும் அழகான பேச்சுக்களும் ஓர் இறைவிசுவாசிக்கான சிறந்த அடையாளமாகும்.

'நம்பிக்கை கொண்டோரே..! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்..! நேர்மையான சொல்லையே கூறுங்கள்..!

(அல் குர்ஆன் 33:70)

'(முஹம்மதே..!) அழகியவற்றையே பேசுமாறு எனது அடியார்களுக்குக் கூறுவீராக..! ஷைத்தான் அவர்களிடையே பிளவை ஏற்படுத்துவான். ஷைத்தான் மனிதனுக்குப் பகிரங்க எதிரியாவான்' (அல் குர்ஆன் 17:53)

'யாரேனும் கண்ணியத்தை நாடினால் கண்ணியம் யாவும் அல்லாஹ்வுக்கே உரியது. தூய சொற்கள் அவனிடமே மேலேறிச் செல்லும். நல்லறம் அதை உயர்த்தும். தீய காரியங்களில் சூழ்ச்சி செய்வோருக்குக் கடுமையான வேதனை உண்டு. அவர்களின் சூழ்ச்சி தான் அழியும்.

(அல் குர்ஆன் 35:10)

மேலும் அளவற்ற அருளாளனின் அடியார்களது பண்புகள் குறித்து குர்ஆன் பேசும் போது பின்வரும் சில முக்கிய பண்புகளை அது எமக்கு சுட்டிக்காட்டுகிறது.



'வீணானதைப் புறக்கணிப்பார்கள்'.

(அல் குர்ஆன் 23:3)

'வீணானவற்றை அவர்கள் செவியுறும் போது அதை அலட்சியம் செய்கின்றனர். 'எங்கள் செயல்கள் எங்களுக்கு. உங்கள் செயல்கள் உங்களுக்கு. உங்கள் மீது ஸலாம் உண்டாகட்டும். அறிவீனர்களை விரும்ப மாட்டோம்' எனவும் கூறுகின்றனர்

(அல் குர்ஆன் 28:55)

'அவர்கள் பொய் சாட்சி கூறமாட்டார்கள். வீணானவற்றைக் கடக்கும் போது கண்ணியமாகக் கடந்து விடுவார்கள்.

(அல் குர்ஆன் 25:72)

உண்மை பேசுதல், அழகிய வார்த்தைகளால் மக்களோடு உரையாடுதல் என்ற அம்சத்தை அளவற்ற அருளாளனின் அடியார்கள் கடைப்பிடிக்கும் அதேவேளை உண்மைக்குப் புறம்பான வார்த்தைகள், அறிவீனமான செயல்களை அவர்கள் அலட்சியம் செய்துவிடுவார்கள் என்பதனையும் மேலுள்ள வசனங்கள் எமக்கு தெளிவுபடுத்துகின்றன.

உண்மை உரைத்தல், அழகிய வார்த்தைகளை உபயோகித்தல் நீதி, நேர்மையாகப் பேசுதல் என்ற உயர்ந்த குணங்களின் சொந்தக்காரராக எமது தலைவர் முஹம்மத் (ஸல்) அவர்கள் வாழ்ந்து காட்டியுள்ளார்கள், அறியாமைக்கால மக்கள் கூட அதற்கான சாட்சியத்தை வழங்கியுள்ளார்கள்.

'(நபியே!) உங்களுடைய நெருங்கிய உறவினர்களை நீங்கள் எச்சரியுங்கள்' எனும் (26:214 ஆவது) இறை வசனம் அருளப் பெற்ற போது நபி (ஸல்) அவர்கள் ஸஃபா மலைக்குன்றின் மீது ஏறிக்கொண்டு, 'பனூ ஃபிஹ்ர் குலத்தாரே..!, பனூ அதீ குலத்தாரே..!' என்று குறைஷிக் குலங்களை (பெயர் சொல்லி) அழைக்கலானார்கள். அவர்கள் அனைவரும் ஒன்று கூடினார்கள். அங்கு வர முடியாத நிலையில் இருந்த சிலர், அது என்ன என்று பார்த்து வர (தம் சார்பாக) ஒரு தூதரை அனுப்பினார்கள். இவ்வாறு அபூலஹப் உள்ளிட்ட குறைஷியர் வந்தனர். நபி (ஸல்) அவர்கள், 'சொல்லுங்கள், இப்பள்ளத்தாக்கில் குதிரைப் படை ஒன்று உங்கள் மீது தாக்குதல் தொடுக்கப்போகிறது என்று நான் உங்களுக்குத் தெரிவித்தால், நான் உண்மை சொல்வதாக என்னை நீங்கள் நம்புவீர்களா? என்று கேட்க, மக்கள் 'ஆம். (நம்புவோம்); உங்களிடம் நாங்கள் உண்மையைத் தவிர வேறெதையும் அனுபவித்ததில்லை' என்று பதிலளித்தனர். அப்போது நபி (ஸல்) அவர்கள், 'அப்படியென்றால், நான் கடும் வேதனையொன்று எதிர்நோக்கியுள்ளது என்று உங்களை எச்சரிக்கின்றேன்' என்று (தமது மார்க்கக் கொள்கையைச்) சொன்னார்கள். (இதைக் கேட்ட) அபூலஹப், 'நாளெல்லாம் (என்றென்றும்) நீ நாசமாகுவாயாக! இதற்காகவா எங்களை ஒன்று கூட்டினாய்?' என்றான். அப்போது தான் 'அபூலஹபின் கரங்கள் நாசமாகட்டும்..! அவனும் நாசமாகட்டும்..' என்று தொடங்கும் (அல் குர்ஆனின் 111 ஆவது) அத்தியாயம் அருளப்பெற்றது. (ஆதாரம்: புஹாரி)

நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்த வேளையில், நபிகளார் வந்து விட்டார்கள், நபிகளார் வந்து விட்டார்கள்' என்று சொல்லப்பட்டது. அப்போது மக்களெல்லாம் அவர்களை நோக்கி விரைந்தார்கள். நானும் மக்களுடன் அவர்களைப் பார்க்கச் சென்றேன். அவர்களை அடையாளம் கண்டு கொண்டேன். அவர்களின் முகம் பொய் சொல்லும் முகமாகத் தெரியவில்லை என்பதைப் புரிந்து கொண்டேன். ஸலாத்தை பரப்புங்கள், (பசித்தவருக்கு) உணவளியுங்கள், மக்கள் உறங்கும் வேளையில் தொழுங்கள், மன அமைதியுடன் சுவர்க்கம் செல்வீர்கள்' என்பது தான் அவர்களின் பேசிய முதல் பேச்சாகும்'. (ஆதாரம்: திர்மிதீ, இப்னுமாஜா)

மிகச் சிறந்த உண்மையாளராக திகழ்ந்த நபிகளார் உண்மை பேசுதல், அழகானதைப் பேசுதல் போன்றவற்றை இறை விசுவாசத்தோடு தொடர்பு படுத்தி கூறியுள்ளார்கள், அதனால் தான் யார் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொள்கிறாரோ (ஒன்று) அவர் நல்லதைப் பேசட்டும் அல்லது வாய் மூடி இருக்கட்டும் என்று வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்.

நபி (ஸல்) அவர்கள், அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டவர் தம் அண்டை வீட்டாருக்கு தொல்லை தர வேண்டாம். அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டவர் தம் விருந்தாளியைக் கண்ணியப்படுத்தட்டும். அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டவர் (ஒன்று) நல்லதைப் பேசட்டும். அல்லது வாய் மூடி இருக்கட்டும் என்றும் கூறினார்கள். (ஆதாரம்: புஹாரி)

உண்மையையும் நல்லதையும் பேசுதல் இறை விசுவாசியின் உயர்ந்த பண்பு என்பது போல அது அல்லாஹ்வுக்காக அவன் செய்கின்ற மிகப்பெரும் தர்மம் என்றும் நபிகளார் எமக்கு கற்றுத்தந்துள்ளார்கள்.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், மக்கள் தமது மூட்டுக்கள் ஒவ்வொன்றுக்காகவும் சூரியன் உதிக்கின்ற ஒவ்வொரு நாளிலும் தர்மம் செய்வது அவர்களின் மீது கடமையாகும். குறிப்பாக இருவருக்கிடையே நீதி செலுத்துவதும் தர்மம். ஒருவர் தன் வாகனத்தின் மீது ஏறி அமர (அவருக்கு) உதுவுவதும் தர்மம். அல்லது அவரது பயணச் சுமைகளை அதில் ஏற்றி விடுவதும் தர்மம். நல்ல (இனிய) சொல்லும் தர்மம். ஒருவர் தொழுகைக்குச் செல்ல எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியும் தர்மம். தீங்கு தரும் பொருளைப் பாதையிருந்து அகற்றுவதும் ஒரு தர்மம் என்றும் குறிப்பிட்டார்கள்.

(ஆதாரம்: புஹாரி)

ஆகவே இஸ்லாமிய போதனைகளுக்கு அமைய அழகாகப் பேசுவோம். அழகானதைப் பேசுவோம்.

**அபூ மதீஹா...**

# டுபாய் அந்தரா நடனக் கல்லூரியின் ஆசான் விம்மி ஈஸ்வரின் நடன நிகழ்வு



டுபாயிலுள்ள அந்தரா இன்ஸ்டிடியூஷன்ஸ் ஒப் பெர்பார்மிங் ஆர்ட்ஸ் எல் எல்சி அமைப்பின் "பிரக்ருதி த்வனி 2024, சமுத்ரா மௌக்திகா தி கல்ச்சுரல் ஓட்" என்ற நிகழ்வு, எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொழும்பு மருதானை எல்பின்ஸ்டன் ஹிஸ்டாரிக் தியேட்டரில் நடைபெறவுள்ளது.

அனுமதி இலவசம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர், தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளார்கள்.

எல்லைகளைத் தாண்டிய கடல் திரைகளை கடந்து ஒரு வசீகரிக்கும் பாரம்பரிய நடன கலைகளுக்குள் உங்களை இந்த நிகழ்வு அழைத்துச் செல்லவுள்ளது.

இங்கு இந்தி பாலே நடனம், இந்திய பாரம்பரிய நடனம், கிளசிக்கல் இசை என பல்வேறு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இந்தியக் கலைஞரும் நடனம் மற்றும் இசை ஆசானுமாகிய திருமதி விம்மி பகவதிஷ்வர் தலைமையில் துபாயிலிருந்து வருகை தரும் சிறப்புக் கலைஞர்கள் இந்நிகழ்வில் தங்களது கலைநிகழ்ச்சிகளை மேடையேற்றவுள்ளனர்.

## ஜனாதிபதித் தேர்தலுக்கு நிதி...

ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மூலம் 10 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர், அரசாங்கம் கடும் நிதி முகாமைத்துவத்துடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அந்த வகையில் தேர்தலுக்கான நிதியை வழங்குவதில் எந்த தடையும் கிடையாது என்றும் தெரிவித்துள்ளார். முதலாவதாக தபால், அச்சகம், மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான செலவைப் பெற்றுக் கொடுப்பதற்கு தயாராகவுள்ளதாகவும் தேவைகளை கருத்திற் கொண்டு ஏனைய நிதியை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன உள்ளிட்ட நிதியமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குமிடையில் நேற்று முற்பகல் விசேட பேச்சு வார்த்தையொன்று நடைபெற்றுள்ளது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான நிதியை ஒதுக்குவது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இதன் போது, கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அஸ்வெசும இரண்டாம் கட்டம்...

கட்டமாக 75,000 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக தலைவர் ஜயந்த விஜேரத்ன தெரிவித்தார். அஸ்வெசுமவின் முதல் கட்டத்தில் கணக்கிடப்பட்ட மொத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 34 இலட்சம் எனவும் அதில் 18 இலட்சம் பேர், அஸ்வெசுமவின் பலன்களுக்கு தகுதி பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## உர மானிய நிதிகள் வங்கிகளில் வைப்பீடு...

ஏனையவர்களுக்கு கட்டம், கட்டமாக அவர்களது வங்கிக் கணக்குகளில் பணம் வைப்பிலிடப்படுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இன்றைய பலன்கள்

(19.07.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கு வாய்ப்புகள் கூடிவரும். குடும்பம் முன்னேற்றம் கூடும் நேரம் இது.



**ரிஷபம் :**
குடும்பப் பிரச்சினைகள் தீர்வு காண்பதற்காக துணிந்து சில முடிவுகளை எடுப்பீர்கள். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும்.



**மிதுனம்:**
அதிகார வர்க்கத்தினரின் ஆதரவு கிடைக்கும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு கடுமையான போட்டிகளுக்கு இடையில் முன்னேற்றம் உண்டு.



**கடகம்:**
பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு எதையும் சிந்தித்து முடிவெடுப்பது நல்லது. வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு கூட்டாளிகளால் கவலை ஏற்படும்.



**சிம்மம்:**
வியாபாரம் மற்றும் தொழில் செய்பவர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்த சம்பள உயர்வு உண்டு.



**கன்னி:**
உடல் நலம் சீராகும். சகோதர வர்க்கத்தினரால் நன்மை உண்டு. பொது வாழ்வில் உள்ளவர்கள் முன்னேற்ற பாதையில் அடி எடுத்து வைக்கும் நேரம் இது.



**துலாம்:**
விற்ற சொத்துக்களால் வில்லங்கங்கள் வரும். எதையும் அனுபவஸ்தர்களை கொண்டு ஆலோசனை செய்து முடிவெடுப்பதே நல்லது.



**விருச்சிகம்:**
நண்பர்கள் நல்ல தகவலை கொண்டு வந்து சேர்ப்பர். நீண்ட நாட்களாக முடிவடையாத வழக்குகள் இப்பொழுது உங்களுக்கு சாதகமாக முடியும்.



**தனுசு:**
பண நெருக்கடியின் காரணமாக ஒரு சிலருக்கு கடன் வாங்கும் சூழ்நிலை கூட ஏற்படலாம். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு கௌரவம், அந்தஸ்து, உயரும்.



**மகரம்:**
கடன் சுமை பாதிக்கு மேல் குறையும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய திருப்பங்கள் ஏற்படும். வியாபாரம் மற்றும் தொழில் செய்பவர்களுக்கு பங்குதாரர்களை அனுசரித்து செல்வது நல்லது.



**கும்பம்:**
பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு மேல் இடத்தில் இருந்து நிர்ப்பந்தம் அதிகரிக்கும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு அதை விரிவு செய்ய போதுமான பொருளாதாரம் கிடைக்கும்.



**மீனம்:**
வருங்காலத்தை பற்றிய பயம் அகலும். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு ஆதாயம் தரும் தகவல் கிடைக்கும். வியாபாரம் மற்றும் தொழில் செய்பவர்களுக்கு கூட்டாளிகளின் அனுசரிப்பு குறையும்.

## நுண், சிறு, நடுத்தர தொழில்துறைகளுக்கு...

வழங்குதல் ஆகிய பிரதான இரு பிரிவுகளின் கீழ் இந்தக் கடன்கள் வழங்கப்படும். இந்த நோக்கங்களுக்காக, நிதியுதவி தேவைப்படும் தகுதியும் திறனுமுள்ள நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கு தொழில்துறை அமைச்சினால் பரிந்துரைக் கடிதங்கள் வழங்கப்படும்.

நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை வலுப்படுத்தும் முதலீட்டுக் கடனின் கீழ், பத்து வருட காலத்துக்கு 7 வீத சலுகை வட்டி வீதத்துக்கு உட்பட்டு, அதிகபட்சமமாக 15 மில்லியன் ரூபாவுக்கு உட்பட்டு கடன் வழங்கப்படவுள்ளது. இதற்காக 13 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. செயற்படாத கடன் பிரிவின் கீழ் உள்ள நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு மூலதனமாக ஐந்து வருட காலத்துக்கு உட்பட்டதாக 8 வீத கடன் வட்டியின் கீழ் 05 மில்லியன் ரூபா கடன் வழங்கப்படவுள்ளதுடன், இதற்காக 5 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி, அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி, ஹட்டன் நேஷனல் வங்கி, செலான் வங்கி, சம்பத் வங்கி, கொமர்ஷல் வங்கி, டி.எப்.சி.சி வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி, நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி, சனச அபிவிருத்தி வங்கி லிமிடெட், யூனியன் வங்கி, பான் ஆசியா வங்கி, கார்கில்ஸ் வங்கி ஆகியவை பங்கேற்பு நிதி நிறுவனங்களாக செயற்படவுள்ளன.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எந்தவொரு நாட்டையும் முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்வதற்கு நுண், சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களைப் பலப்படுத்த வேண்டும்.

கடந்த பொருளாதார வீழ்ச்சியினால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் இத்தகைய முயற்சியாளர்களே. இவர்களின் மீட்சிக்கு அரசாங்கம் முன்னுரிமை அளித்து வருகிறது. வர்களுக்குத் தேவையான மூலதனத்தை வழங்குவதற்காக தேசிய அபிவிருத்தி வங்கி ஸ்தாபிக்கப்படும்.

வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்று பாரிய தொழில் முயற்சியாளர்களை வலுப்படுத்தும் நோக்கில் செயற்பட்டு வருகிறோம்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கும், காலநிலை மாற்றம் உள்ளிட்ட வணிகச் செயற்பாட்டு சூழலில் ஏற்படும் மாற்றங்களால் ஏற்படும் அபாயங்களைக் கையாள்வதற்கும் நுண், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் திறனை மேம்படுத்த இந்தப் புதிய கடன் திட்டம் உதவும். விவசாயம், சுற்றுலா, உற்பத்தி, தொழில்நுட்பம் மற்றும் ஏற்றுமதி சார்ந்த துறைகள், பெண்கள் தலைமையிலான நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் (வர்த்தகம், குத்தகை மற்றும் வாடகை வணிகங்கள் தவிர்த்து) குறித்து இந்த கடன் திட்டத்தில் விசேட கவனம் செலுத்தப்படுகிறது. அந்நியச் செலாவணியைப் பாதுகாப்பது, இறக்குமதிப் பொருளாதாரத்திலிருந்து ஏற்றுமதிப் பொருளாதாரமாக மாறுவது ஆகிய அரசாங்கத்தின் நோக்கத்தை அடையவும் இது உதவும்.

சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன, இராஜாங்க அமைச்சர்களான ரஞ்சித் சியம்பலாபிட்டிய, ஷெஹான் சேமசிங்க, பிரசன்ன ரணவீர, ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மற்றும் நிதி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## துறைமுக அதிவேக நெடுஞ்சாலை...

நேற்று வருகை தந்த அமைச்சர், இது தொடர்பில் ஊடகவியலாளர்களுக்குத் தெளிவுபடுத்தும் போதே இதனைத் தெரிவித்தார்.

சர்வதேச கடன் மறு சீரமைப்புக்குப் பின்னர் நிறுத்தப்பட்டிருந்த அபிவிருத்தி திட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு வருவதாக தெரிவித்த அவர், தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த அதிவேக நெடுஞ்சாலை நாட்டின் அனைத்து நெடுஞ்சாலைகளையும் இணைக்கக் கூடியவாறு எதிர்காலத்தில் அமையும் என்றும் குறிப்பிட்டார்.

அமைச்சர் பந்துல குணவர்தன அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்;

எமது நாட்டில் அதிவேக நெடுஞ்சாலை வரலாற்றில் பாரிய நவீன தொழில்நுட்பத்துடன் துறைமுக அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இங்குருகொடை சந்தியிலிருந்து கொழும்பு துறைமுக நகரம் வரை இந்த நெடுஞ்சாலை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. காலிமுகத்திடல் பகுதியில் எந்த வித வாகன நெரிசலும் இல்லாத வகையில் நாட்டில் எந்த ஒரு அதிவேக நெடுஞ்சாலையிலிருந்தும் உட்செல்லல் மற்றும் வெளிச்செல்லல் வசதியுடன் இந்த அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் 300 மில்லியன் அமெரிக்கன் டொலர் நிதியில் இந்த அதிவேக நெடுஞ்சாலை திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இங்குறுகொடை சந்தியிலிருந்து காலிமுகத்திடல் வரை ஐந்து கிலோ மீற்றரில் தூண்களில் நிர்மாணிக்கப் பட்டுள்ள அதிவேக நெடுஞ்சாலையாக இதனைக் குறிப்பிட முடியும்.

உலகில் காணப்படும் வளர்ச்சியடைந்த நவீன தொழில்நுட்ப முறையை பயன்படுத்தி இந்த நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சீன "சிவில் இன்ஜினியரிங் கன்ஸ்ட்ரக்ஷன் கோபரேஷன்" நிறுவனம் இதற்கான டெண்டரைப் பெற்றுக் கொண்டு இந்த திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

நாட்டில் நிலவிய பாரிய பொருளாதார மற்றும் நிதி நெருக்கடி நிலையிலும் எதிர்கொள்ள நேர்ந்த அழுத்தங்களையும் கவனத்திற் கொள்ளாது உடன்படிக்கை செய்துகொண்ட நிதியிலேயே, செயற்பாடுகளை இடை நிறுத்தாது தொடர்ந்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு தற்போது நிறைவடையும் தறுவாயில் உள்ளன.

இதற்கான நிதி யுதவி வழங்கிய ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு நாம் நன்றி கூற வேண்டும்.

கடன் வழங்குவதை நிறுத்தியமைக்குப் பின்னரும் இந்தத் திட்டத்துக்கு மாத்திரம் தொடர்ச்சியாக நிதி கிடைத்தது. இலங்கை அரசாங்கம் சர்வதேச கடன் மறுசீரமைப்புகளை முன்னெடுப்பதற்கு சர்வதேச சமூகம் உடன்படிக்கை கைச்சாத்திட்டுள்ளதால் குறிப்பாக பிரான்ஸ், இந்தியா, ஜப்பான் ஆகிய மூன்று நாடுகளும் கடன் வழங்குநருக்கு சர்வதேச மட்டத்தில் உறுதிப்படுத்தியுள்ள நிலையில் நாம் அனைத்து சர்வதேச கடன்களையும் 2042 ற்குள் செலுத்துவதற்கு உறுதியளித்துள்ளோம்.

அதற்காக நாட்டில் சட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. பொருளாதார பரிவர்த்தனை சட்டம் என்ற அந்த சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் யார் இந்த நாட்டின் ஜனாதிபதியாக பதவி வகித்தாலும் எந்த அரசாங்கம் என்றாலும் இலங்கை அரசாங்கம் சர்வதேச ரீதியில் செய்து கொண்டுள்ள உடன்படிக்கையின்படி அரச நிதி முகாமைத்துவம் முன்னெடுக்கப்பட வேண்டும். அந்த வகையிலேயே அனைத்து நிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்களையும் தற்போது ஆரம்பிக்கக் கூடிய நிலைமை உருவாகியுள்ளது.

## ஜனாதிபதி ரணிலின் திட்டங்கள், ...

பணியாற்றியபோதே, இதனை அவதானித்ததாகவும் ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார். அண்மையில் மலேசியா சென்றபோது இந்த நாடு பொருளாதார ரீதியிலிருந்து குறுகிய காலத்தில் மீட்சிபெற்றது குறித்து அந்நாட்டு அரசியல்வாதிகள் வியப்பை வெளியிட்டனர். இதற்கான காரணம் இந்த நாட்டை தலைமையேற்று நடத்திய ஜனாதிபதியின் செயற்பாடுகள் எனவும் அவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே.மணிவண்ணன் தலைமையில் உள்ளூராட்சிமன்றங்களில் தற்காலிக சேவையாற்றிவரும் ஊழியர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாக கலந்துகொண்டு பேசும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

நிகழ்வில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர், இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் பிரத்தியேக செயலாளர் த.ரொஸ்மன், இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தனின் மாவட்ட அபிவிருத்திக்குழுவின் செயலாளர் தஜிவரன் மற்றும் அதிகாரிகளும் இதில், கலந்துகொண்டிருந்தனர்.

## வண. ஞானசார தேரர்...

மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட பின்னரே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சம்பத் அபேகோன் உள்ளிட்ட மேன்முறையீட்டு நீதிபதிகள் குழாம் முன்னிலையில், இந்த மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஞானசார தேரரை 50,000 ரூபா பிணையிலும் 05 இலட்சம் ரூபா பெறுமதியிலான 02 சரீரப் பிணைகளிலும் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றில் தெரிவித்த கருத்தின் மூலம் இன, மத நல்லிணக்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தியமை உள்ளிட்ட 02 குற்றச்சாட்டுகள் தொடர்பில் இவர் குற்றவாளியாகக் கருதப்பட்டார். இதையடுத்து ஞானசார தேரருக்கு 04 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. நான்கு வருட கால கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர், மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கூரகல தொல்லியல் அமைவிடம் தொடர்பாக 2016 இல் கொழும்பில் நடத்தப்பட்ட ஊடக மாநாடொன்றில் இஸ்லாம் மதத்தை இழிவுபடுத்தும் விதத்தில் கருத்துக்களை தெரிவித்தமைக்காக, கொழும்பு மேல் நீதிமன்றத்தால் நான்கு வருட கால கடூழியச் சிறைத் தண்டனை இவருக்கு விதிக்கப்பட்டது. ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## ஆந்திராவின் நீர்வேளாண்மை திட்ட...

திட்டத்தையும் பார்வையிட்டார். இது போன்று இரண்டு வகையான திட்டங்களை இலங்கையில் மேற்கொள்வது குறித்தும் அமைச்சர் கலந்துரையாடியுள்ளார்.

இதனால், நீர்வேளாண்மையில் ஈடுபட்டுள்ள இலங்கையர்கள் கூடுதல் நன்மையை அடைவரென்றும் அதிகாரிகளிடம் அமைச்சர் டக்ளஸ் தெரிவித்தார்.

## கடவுச்சீட்டு பெற புதிய முறை...

நலனுக்காகவும் செயல்முறையை சீரமைக்கவும் கடவுச்சீட்டுகளை வழங்குவதற்கான புதிய வழிமுறையை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன்படி, புதிய கடவுச்சீட்டுகளுக்காக விண்ணப்பிப்பவர்கள் www.immigration.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக முன்கூட்டியே பதிவு செய்ய வேண்டும்.

ஒன்லைனில் பதிவு செய்ததன் பின்னர் முன்னுரிமை முறையின் படி, கடவுச்சீட்டுகள் வழங்கப்படுமென குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

## ஈஸ்டர் தாக்குதல் விசாரணை;...

ஆணைக்குழு தெரிவித்துள்ளது. உயர் நீதிமன்ற உத்தரவின் படி தேசிய பொலிஸ் ஆணைக்குழு, அரச புலனாய்வு சேவையின் முன்னாள் பிரதானிக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கவில்லையென உயர்நீதிமன்றம் கேள்வி எழுப்பியதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக முன்கூட்டியே புலனாய்வுத் தகவல் கிடைத்த போதிலும், தாக்குதலைத் தடுக்கத் தவறியதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்ததாக சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் நிலந்த ஜயவர்த்தன மீதும் குற்றஞ்சாட்டப் பற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மூழ்கிய ஓமான் கப்பலிலிருந்து...

செய்தி வெளியிட்டுள்ளன.

கொமொரோஸ் கொடியுடன் பயணித்த எண்ணெய்க் கப்பல் ஓமானின் ராஸ் மத்ராகாவிலிருந்து தென்கிழக்கே 25 கடல் மைல் தொலைவில் திங்கட்கிழமை கடலில் மூழ்கியது. இந்தச் சம்பவம் தொடர்பில் ஓமானின் கடல்சார் பாதுகாப்பு மையம் வெளியிட்ட அறிக்கையின் படி, அந்தக் கப்பலின் பணிக்குழாமில் 13 இந்தியர்களும், 03 இலங்கையரும் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கப்பலைக் கண்டுபிடித்த,காணாமலான பணியாளர்களை மீட்டல் என்பவற்றுக்காக கப்பல் ஒன்றும் விமானமும் இந்தியக் கடற்படை பகுதிக்கு அனுப்பியிருந்ததாக இந்திய ஊடகங்கள் தெரிவித்திருந்தன.கப்பலில் மொத்தமாக 16 பேர் பயணித்திருந்தனர். எஞ்சியவர்களைத் தேடி மீட்புப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன.இப்பகுதியில் கடல் சீற்றம் மற்றும் பலத்த காற்றுகளுக்கு மத்தியிலும் இந்திய மற்றும் ஓமானிய படையினர் தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

## திஸ்ஸ அத்தநாயக்க MP...

பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு காயங்கள் ஏற்படவில்லை. காயமடைந்தவர்களில் காரின் சாரதி மற்றும் பயணியொருவரும் அடங்குகிறார். காயமடைந்தவர்கள் நாரஹேன்பிட்டி பகுதியில் உள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## புதிய அரசியல் கூட்டணி கதிரை...

இணைந்து இந்த பொதுக் கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளதாக, கூட்டணியின் செயல்பாட்டாளர்களான அநுர பிரியதர்ஷன யாப்பா மற்றும் நிமல் லான்சா ஆகியோர் தெரிவித்தனர்.

கொழும்பில் புதன்கிழமை (17) நடைபெற்ற விசேட சந்திப்பொன்றிலே மேற்கண்டவாறு இவர்கள் குறிப்பிட்டனர். அங்கு மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்ற உறுப்பினர்கள் 25 பேர் தற்போது முக்கிய செயல்பாட்டாளர்களாக உள்ளனர். இதனைத் தவிர ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி ஆகிய அரசியல் கட்சிகளிலிருந்து பெரும்பாலான உறுப்பினர்கள் இணையவுள்ளனர். ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னரே இவர்கள் இணைவர். அப்போது எண்ணிக்கை 45 உறுப்பினர்களுக்கும் மேல் இருக்கும்.

எவ்வாறாயினும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து விலகிய முக்கிய அரசியல் பிரமுகர்களால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் நோக்கில் ஸ்தாபிக்கப்பட்ட புதிய அரசியல் கூட்டணி தற்போது பிரபல அரசியல் கட்சியாக உருவெடுத்துள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்களான நிமல் லன்சா, துமிந்த திசாநாயக்க, அநுர பிரியதர்ஷன யாப்பா, அமைச்சர்களான சுசில் பிரேம்ஜயந்த, நிமல் சிறிபாலடி சில்வா, நளின் பெர்னாண்டோ உள்ளிட்ட பல சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இதில் பிரதான செயல்பாட்டாளர்களாக உள்ளனர்.

அண்மையில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பாரிய குழுவொன்றும் இந்த கூட்டணியுடன் கைகோர்த்தது. சுதந்திர கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான நிமல் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர, துமிந்த திஸாநாயக்க, லசந்த அழகியவண்ண, வீரகுமார திஸாநாயக்க உள்ளிட்டோர் புதிய கூட்டணியுடன் இணைந்து மாவட்ட ரீதியிலான அரசியல் கூட்டங்களையும் நடத்தி வருகின்றனர்.

## கொழும்பு ஜெயந்தி... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

அன்றைய தினம் மாலை 7.00 மணிக்கு தமிழகத்தின் பிரபல ஆன்மீக சொற்பொழிவாளர் திருமுருக வள்ளல் வாரியார் சுவாமிகளின் மாணவி கலைமாமணி, வாகீசகலாநிதி, திருமதி தேச மங்கையர்கரசி, 'இனி எல்லாம் வெற்றியே' என்ற தலைப்பில் ஆன்மீக அருள் உரை நிகழ்த்தவுள்ளார்.

## நான்கில் ஒருவருக்கு... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

கை அல்லது கால் உணர்வின்மை, மொழியைக் கையாள்வதில் சிக்கல் என்பவையே அவையாகும். அது மட்டுமின்றி இந்நோயால் கண்பார்வையைக் கூட இழக்கலாம். உடல் சமநிலையை இழக்கலாம். இவை அனைத்தும் உடனடியாக ஏற்படக்கூடியவையாகும். இவை ஏற்படுவதற்கு முன் அறிகுறி எதுவும் இருக்காது. ஆதலால்,அது நிகழும் நேரத்தைக் கவனிக்க வேண்டியது அவசியம்.

## ஒருவரின் வாலாக SLFP... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட அம்மையார் மற்றும் திரு.கொப்பேகடுவ வெற்றி பெற முடியவில்லை என்றும் அமைச்சர் கூறினார். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி கூட்டணியாகவே தேர்தலில் போட்டியிடவுள்ளது. இடதுசாரி கட்சிகள் எங்களுடன் ஒன்றிணைந்துள்ளன. 1994 ஆம் ஆண்டு சந்திரிகா அம்மையார் நாற்காலி சின்னத்திலேயே போட்டியிட்டார். இந்த வருடம் ஜனாதிபதி தேர்தலில் கூட்டணியுடன் போட்டியிடுவோம் என்றும் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

## அத்துருகிரிய துப்பாக்கி... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

எம்பிலிப்பிட்டிய மற்றும் அம்பலாங்கொடை பிரதேசங்களில் அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் குறித்து அமைச்சர் குறிப்பிடுகையில், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் சிலர் நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார். நாட்டில் சட்டவிரோத ஆயுதங்கள் பரவலாக இருப்பதால் துப்பாக்கிச் சூடு சம்பவங்களைத் தடுக்க முடியாதென்று தெரிவித்த அமைச்சர், சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருக்கும் இடங்கள் அல்லது நபர்களின் தகவல்களை பொது மக்கள் அறிந்திருந்தால் அதிகாரிகளுக்கு தகவல் வழங்க வேண்டுமென்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மேலும் தெரிவித்தார்.

## அமெரிக்க ஜனாதிபதிக்கு... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

இதனையடுத்து, லாஸ் வெகாஸில் நடைபெறவிருந்த ஆதரவாளர்களுடனான சந்திப்பும் பிரசார நடவடிக்கையும் இரத்து செய்யப்பட்டுள்ளன.

ஜனாதிபதி அவரது இல்லத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக வெள்ளை மாளிகையின் ஊடக செயலாளர் தெரிவித்துள்ளார்.

## மலையக மக்களுக்கு... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

கிராமங்கள், நகரங்கள் மற்றும் பெருந்தோட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய மக்களுக்கு நிரந்தர காணி மற்றும் வீட்டு உரிமைகளை வழங்குவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு எனவும் அதற்குத் தேவையான புரட்சிகர வேலைத்திட்டம் ஏற்கனவே செயற்படுத்தப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இங்கு குறிப்பிட்டார். உள்ளூர் பெருந்தோட்டக் கம்பனிகளுடன் கலந்தாலோசித்து அவர்களின் கருத்துக்களைப் பெற்று அதற்கான சட்டச் செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் தோட்ட மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்துக் கட்சிகள் அடங்கிய குழுவொன்றை நியமிக்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கினார்.

## ஜனாதிபதி தேர்தலில்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், ஜனாதிபதித் தேர்தல் கண்டிப்பாக நடைபெற வேண்டும். எந்த விதத்திலும் அதனை ஒத்திப் போட முடியாது. அதனை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி ஒரு போதும் ஏற்றுக் கொள்ளாது. அவ்வாறு ஜனாதிபதித் தேர்தலை ஒத்திப்போடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுமானால் நாட்டில் பெரும் போராட்டம் வெடிக்கும். இரத்தம் சிந்தும் நிலை ஏற்படலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அந்த வகையில் ஜனாதிபதித் தேர்தலை ஒத்திப் போடுவதற்கு எத்தகைய நடவடிக்கையும் எவரும் எடுக்கக்கூடாது.தேர்தலில் வேட்பாளர் ஒருவரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நிறுத்தும் என்றார்.

# தலைவரும் தவிசாளரும் சவால்களும் சாதனைகளும்



இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் முஸ்லிம்களுக்கென ஒரு தனித்துவமான அரசியல் கலாசாரத்தை தோற்றுவித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர், தேசிய ஐக்கிய முன்னணி, தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஸ்தாபகர் மிக நீண்ட நேரம் பாராளுமன்றத்தில் உரையாற்றி புகழ்பூத்த பெரும் அரசியல் தலைவர், போர்க்கால சூழலில் தம் சமூகத்தின் இருப்புக்காகவும் மற்றும் சமூக எழுச்சியிலும் சமூக மாற்றத்திற்கான சிந்தனையிலும் பெரும் வகிபாகத்தைக் கொண்டிருந்த கவிஞர் திலகம் எம். எச். எம். அஷ்ரஃபின் வலதும் இடதுமாக இயங்கிய அவரது தவிசாளர் சட்டத்தரணி எச். எம். பாரூக்கின் வாழ்க்கை வரலாறு ஒரு பார்வை.

எம். எச். எம். அஷ்ரஃப் 2000ஆம் வருடம் செப்டம்பர் 21இல் விமான விபத்தில் இவ்வுலகை விட்டுப் பிரிந்து இரு தசாப்த காலங்களைக் கடந்தும் இற்றைவரையிலும் அவர் பதிவு செய்த அரசியல் வரலாற்றுத் தடத்தை இன்னுமொருவரால் அந்த இடைவெளியை நிரப்ப இயலாமல் உள்ளதென்கின்ற உண்மையினை இங்கு நாம் கவலையுடன் சொல்லாமலும் இருக்க முடியாது.

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் முகவரி மற்றும் முஸ்லிம் இளைஞர்களின் தொழில் வாய்ப்பு, ஒலுவில் துறைமுகம், கல்வி மற்றும் போரினால் இடம்பெயர்ந்து வந்த வடபுல முஸ்லிம் மக்களின் மேம்பாட்டுக்காக அவர் உழைத்த தியாகங்கள் வெறும் ஓரிரு எழுத்துக்களால் வடிக்க முடியாதவையே.



இலங்கையில் புதிய அரசியல் கலாசாரத்திற்கு முஸ்லிம்களை இட்டுச் சென்ற அஷ்ரஃப் அவர்களின் வரலாற்றை ஆராயும் போது கண்முன்தோன்றுபவராக அக்கட்சியின் தவிசாளர் பாரூக் அவர்களும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் எழுச்சியில் முக்கிய பாத்திரத்தை பெற்றவராகத் திகழ்கிறார்.

எச்.எம். பாரூக் அரசியலுக்குள் காலடி எடுத்து வைத்த காலம் பெரிதும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகர் எம்.எச்.எம். அஷ்ரஃபுடன் ஆரம்பமாகிறது. பாரூக் தனது சட்டத்துறைப் பயிற்சியினைப் பெற்றுக் கொள்வதற்காக அஷ்ரஃபின் கீழ் பணிபுரிந்தார். அஷ்ரஃப் தனது சட்டத்துறை ஆசானாகவும் அவருடைய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உதயமும் அவருடன் சேர்ந்து சென்ற பயணங்களும், அவருடன் பழகிய நீண்ட கால நட்புறவும், அவருடைய தனித்துவமான நவீன அரசியல் சிந்தனைகளும், வழிகாட்டல்களும் பாரூக்கின் அரசியல் பிரவேசத்திற்கு பெரும் தூண்டுதலாக அமைந்தன.

அஷ்ரஃப் அவர்களை சட்டத்துறையில் முதல்



ஆசானாகவும் தனது அரசியல் வழிகாட்டியாகவும் எச்.எம். பாரூக் ஏற்றிருந்தார். அந்த வகையில் கட்சியின் தவிசாளர் என்ற உயர்ந்த இடத்திலும், மத்திய மாகாண சபையின் உறுப்பினராகவும் இருந்து அவர் ஆற்றிய பாரிய சேவையின் பதிவுகள் என்றும் வரலாற்றில் மறக்க முடியாதவையே. இவை தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தவிசாளர், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர், கென்யா நாட்டின் முன்னாள் தூதுவர் சட்டத்தரணி எச். எம். பாரூக் தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.

**முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தவிசாளரான நீங்கள் கட்சிக்கு ஆற்றிய அர்ப்பணிப்புக்கு முக்கிய காரணம் என்ன?**

1986 இல் எனது சட்டத்துறைத் தொழிலை மு.கா ஸ்தாபகர் எம்.எச்.எம். அஷ்ரப் அவரிடம் பயிற்சியினைப் பெற்ற பின்னர்தான் தொடங்கினேன். அந்த உறவின் வளர்ச்சிதான் என்னை அரசியலுக்கு கொண்டு வந்து சேர்த்தது. அஷ்ரஃப் 1988 இல் மாகாண சபைத் தேர்தல் வந்த சமயம் ஒரு நாள் நள்ளிரவு ஒரு மணி அளவில் வந்து 'பாரூக் பாரூக்' என்று கூறி என் வீட்டின் கதவைத் தட்டினார். அவருடன் மருதூர்க்கனி போன்ற குழுவினர்களும் வந்திருந்தார்கள். அவர் என்னிடம் 'மாகாண சபைத் தேர்தல் வருகிறது. நீங்கள் போட்டியிட வேண்டும்' என்று கூறினார். அதற்கு நான் 'இப்பொழுதுதான் எனது தொழிலைத் தொடங்கி நடத்திச் செல்கின்றேன். பாயிஸ் முஸ்தபாவின் தந்தை மறைந்த எஸ். எம். முஸ்தபாவின் கீழ் ஜூனியராக வேலை செய்கிறேன். இதில் ஈடுபட்டால் சட்டத்துறை வேலைகளைச் செய்வது கடினம். நாளைக்கு யார் சரி தேடித் தருகிறேன்' என்றேன்.

அஷ்ரஃப் அவர்கள் மறுநாளும் நள்ளிரவு 12.30 மணி அளவில் வந்தார். அன்றைய தினமும் கைத் துப்பாக்கியைக் காட்டி மாகாண சபைத் தேர்தலில் கேட்கத்தான் வேண்டும் என்றார். அதற்கு நான் 'கொஞ்சம் இருங்கள் சேர். நான் மனைவியிடம் கேட்டுச் சொல்லுகிறேன்' என்றேன். அதற்கு அவர் கட்சியின் தலைவர் அஷ்ரஃப் அவர்களே வீட்டுக்கே வந்து விட்டார். எப்படி இயலாது என்று சொல்வது. நீங்களே கையொப்பத்தைப் போட்டுக் கொடுங்கள்' என்றார். நான் எனது அருப்பொலவில் உள்ள வீட்டின் முகவரியை எழுதாமல் நாவலப்பிட்டி என்ற இடத்திலுள்ள முகவரியைத்தான் எழுதினேன். தொழிலை வியாபாரி என்று எழுதினேன். சட்டத்தரணி என்று எழுத வில்லை. அத்தேர்தலில் போட்டியிட கொஞ்சம் கூட மனம் இடம்கொடுக்கவில்லை. ஆனால் அரசியல் வாதியாக வருவேன் என்று நான் கனவில் கூட நினைக்க வில்லை.

**நீங்கள் ஏன் நாவலப்பிட்டிய என்ற இடத்தை தெரிவு செய்தீர்கள்?**

என்னை யாருக்கும் தெரியக் கூடாது என்பதற்காகத்தான் நாவலப்பிட்டிய என்ற இடத்தைப் போட்டேன். என்னுடைய வாழ்க்கையில் எந்தத் தொழிலுக்குப் பின்னாலும் தேடிச் செல்ல வில்லை. அவைகள் எல்லாம் என்னைத் தேடியே வந்தன. வேட்பு மனுவில் கையொப்பத்தை மட்டும் வைத்துக் கொடுத்தேன். ஒரு மாத காலமாக எந்தவொரு தேர்தல் பிரசார நடவடிக்கைகளிலும் நான் ஈடுபடவில்லை. ஒரு நாள் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களை எல்லோரையும் அழைத்து மஹியங்கனையிலுள்ள சேர் ராசிக் பரீத் மண்டபத்திலே கூட்டம் நடத்தினார். அதில் அவர் உரையாற்றி விட்டு இத்தேர்தலில் மிகுந்த ஆர்வத்தோடு போட்டியிட யார் தயாராக இருக்கின்றீர்களோ அவர்கள் அனைவரும் கையை உயர்த்துங்கள் என்று கூறினார். அதற்கு நான் கையை உயர்த்த வில்லை. ஆனால் அப்பொழுது மஹ்ரிப் அதான் ஒலித்தது. தொழுகைக்காக பள்ளிக்குச் சென்றேன். அப்படித் தொழுது கொண்டிருக்கும் போது என் மனதில் அல்லாஹ் ஒரு உதிப்பைத் தந்தான். ஏன் நீ போட்டியிட்டால் என்ன? என்று. கையை உயர்த்தாமல் பள்ளிக்குச் சென்ற நான் திரும்ப வந்து சேர் நானும் ஆர்வத்தோடு இத்தேர்தலில் போட்டியிடுகிறேன் என்றேன். அப்பொழுது மண்டபத்திலுள்ள அனைவரும் அல்லாஹு அக்பர் என்று கோசம் எழுப்பினர். இந்தச் சந்தர்ப்பத்தில் இஷாத் தொழுகைக்காக அதான் ஒலித்தது. அன்றைய தினத்தில் இருந்து பத்து பதினைந்து நாட்கள்தான் தேர்தல் நடக்க இருந்தது. 203 என்ற இலக்கத்தில் என்னிடம் கருப்புக் கார் ஒன்று இருந்தது. தலைவர் அஷ்ரஃப் அவர்கள் ஒரு நாள் முழுக்க கண்டி மாவட்டத்தில் தேர்தல் பிரசாரப் பணிகளில் ஈடுபட்டார். தலைவர் அஷ்ரஃப் அவர்கள் தெஹியங்க என்ற இடத்தில் சென்று உரையாற்ற இருப்பாராயின் அதற்கு முதல் சென்று நான் அங்கு உரையாற்றுவேன். அவர் யஹலத்தென்னைக்கு வரமுன் நான் அங்கு சென்று உரையாற்றுவேன். இவ்வாறு கண்டி மாவட்டத்திலுள்ள சகல முஸ்லிம் கிராமங்களுக்கும் சென்று தேர்தல் பிரசாரப் பணியினைச் செய்தேன். ஒரே நாளில் கண்டி மாவட்டத்தில் பெரும்பாலான பகுதியை நிறைவு செய்து விட்டேன். தேர்தல் நடைபெற்றது.

அதில் எனக்கு அதிக விருப்ப வாக்குகள் கிடைக்கப் பெற்று தெரிவு செய்யப்பட்டேன். 1988 இல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட்டு இருவர் தெரிவு செய்யப்பட்டார்கள். கண்டி மாவட்டத்தில் என்னுடன் உபைதுல்லா என்பவரும் தெரிவு செய்யப்பட்டார். அதில் எனக்குத்தான் விருப்பு வாக்குகள் கூட. மாத்தளை மாவட்டத்தில் அத்ஹாம் என்பவர் தெரிவு செய்யப்பட்டார்.

**இலங்கையில் முதன் முதலாக நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற்று சரித்திரம் படைத்த நீங்கள் முதலாவது சபை அமர்வில் உங்களது கன்னி உரையின் மூலம் அந்த மாகாண சபைக் கூட்டத்தில் அதிகம் பாராட்டைப் பெற்ற ஒருவராக மதிக்கப்பட்டீர்கள் என்பதை நாம் அறிவோம். அச்சம்பவம் குறித்துக் கூறுவீர்களா?**

உண்மையிலேயே முதல் சபை அமர்வில் கட்சியின் தலைவர் என்ற வகையில் ஆரம்ப உரையினை நிகழ்த்துவதற்கு சந்தர்ப்பம் தந்தார்கள்.

ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் முழு இலங்கையும் ஒன்று பட்டிருந்தன. இலங்கை அக்காலத்தில் மூன்று இராச்சியங்களாகப் பிரிக்கப்பட்டு இருந்தன. கந்த உடரட்ட. ரஜரட்ட, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றை ஆங்கிலேயர்கள் ஒன்று படுத்தினார்கள். இப்பொழுது இந்த மாகாண சபையின் முறையின் மூலமாக மீளவும் கண்டி இராச்சியம் தனியாக உருவாகியுள்ளன என்ற விடயத்தை மையப்படுத்திப் பேசினேன், அப்பொழுது சிங்கள மொழியில் ஆற்றிய எனது கன்னி உரையினை எல்லோரும் பாராட்டினார்கள். அப்பொழுது ஆளுநராக ஹுருல்ல என்பவர் இருந்தார். அவர் உடனே தொலைபேசியின் மூலம் அஷ்ரஃப் அவர்களைத் தொடர்பு கொண்டு 'நான் சிறப்பான உரையினை ஆற்றியதாகவும் ஒரு தகுதி வாய்ந்த ஒருவர் மாகாண



சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார் என்று பாராட்டுத் தெரிவித்த விடயத்தை தலைவர் அஷ்ரஃப் என்னிடம் தெரிவித்தார். உண்மையிலே அவ்வுரை எதிர்பாக்காதளவுக்கு நற்பெயரை ஈட்டித் தந்தது. எனது பேச்சுக்களை எப்பொழுது தயார் படுத்திப் பேசுவதில்லை. சும்மா சாதாரணமாகவே பேசினேன். முதல் மாகாண சபை அமர்வு தனியார் ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்றது.

1986 இல் இருந்து தலைவர் மரணம் எய்தும் வரையிலும் அவருடன் மிக நெருக்கமான பயணத்தோடுதான் எனது வாழ்க்கை அமைந்திருந்தது. கிழக்கு மாகாணத்தில் கட்சி தொடர்பான கூட்டங்களை எல்லா இடங்களுக்கும் சென்று நடத்தியுள்ளேன். கண்டி மாவட்டத்தின் கட்சியின் அமைப்பாளராகவும் இருந்தேன்.

**கண்டி மாவட்டத்தின் முஸ்லிம் கட்சியின் பிரதிநிதித்துவத்தின் ஊடாக பெரும்பான்மையின மக்களுடன் ஒன்றிணைந்து கண்டி வாழ் முஸ்லிம் மக்களுடைய கல்வி, சமூக, அபிவிருத்திப் பணிகளில் மாற்றங்களைக் கொண்டு வரலாம் என்ற நம்பிக்கையுடன் செயற்பட்ட பெருமை உங்களுக்கு உண்டு. எனவே அவை குறித்துக் கூறுவீர்களா?**

ஒரு கால கட்டத்தில் கொழும்பில் நடைபெற்ற கூட்டத்தில் தலைவர் அஷ்ரப் இந்தக் கட்சியை கலைத்து விட வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார். ஏனென்றால் பேராளர் மாநாடு நடத்துவதற்கும் பணம் இல்லை. தேசிய மாநாடுகள் நடத்தவதற்கும் பணம் இல்லை. கட்சியின் வளர்ச்சிக்காக யாரும் முன்னுக்கு வருவதில்லை என்று ஆதங்கத்துடன் அஷ்ரஃப் உரையாற்றினார். அப்பொழுது நான் உடனே எழுந்து கண்டியிலே பேராளர் மாநாட்டை நடத்தலாம் சேர். அதற்கான முழுமையான ஒத்துழைப்பை நான் வழங்கத் தயார்' என்று பகிரங்கமான முறையிலே எனது கருத்தைத் தெரிவித்தேன்.

அதன் பின்னர் அக் கூட்டத்தில் கண்டியிலே பேராளர் மாநாடு நடத்துவது என்று தீர்மானம் எடுத்தார்கள். அது கண்டி டி. எஸ். சேனநாயக மண்டபத்தில் நடத்தப்பட்டது. நாட்டின் நாலாப் பாகங்களில் இருந்தும் கட்சியின் ஆதரவாளர்கள் கலந்து கொண்டார்கள். மிகத் தூர இடங்களில் இருந்து வந்தவர்களை ஹோட்டலில் தங்குவதற்கான வசதிகளையும் செய்து கொடுத்தேன். இந்தக் கூட்டத்தை தனியாகவே செய்தேன். எனக்கு உதவியாக யாரும் வரவில்லை. ஓரளவு எனது சொந்தப் பணத்தையும் செலவு செய்து கொண்டு ஏற்பாடு செய்தேன். குறிப்பாகச் சொல்லப் போனால் வீழ்ச்சி நிலைக்குச் செல்லப் போன



கட்சியை தன்னாலான அனைத்து ஒத்துழைப்புக்களையும் வழங்கி தக்க வைத்துக் கொள்வதற்கான முயற்சிகளைச் செய்தேன் என்று கூறினால் அது மிகையாகாது.

அந்த மாநாட்டுக்கு முன்னர் எங்கள் இல்லத்தில் கட்சியின் உயர் பீடக் கூட்டம் இடம்பெற்றது. அதன் போது அஷ்ரஃப், ' நாங்கள் எல்லோரும் கடைசியாக கட்சியைக் கலைக்க வேண்டும் என்று கூறும் போது நீங்கள் ஏன் பாரூக் இதற்கு உயிர் கொடுக்க வந்தீர்கள்' என்று என்னிடம் இவ்வாறு கேட்டார், அதற்கு நான் 'எனக்கு ஓர் உதிப்பு வந்தது இந்தக்



கட்சியை கொண்டு செல்ல வேண்டும்' என்று. 'அதுதான் கண்டிக்கு வாருங்கள் என்று கூறினேன்' என்றேன். அன்றைய தினம் உயர் பீட உறுப்பினர்களுக்கான தெரிவும் இடம்பெற்றது. அதில் அவர் என்னை உடனே கட்சியின் தவிசாளராக நியமனம் செய்தார். மறுநாள் டி. எஸ். சேனநாயக்க மண்டபத்தில் நடைபெறவிருந்த பேராளர் மாநாட்டில் உத்தியோகபூர்வமாக எனது பெயரை அறிவித்தார்கள். பின்னர் அப்பேராளர் மாநாடு எனது தலைமையில் இடம்பெற்றது. அம்மாநாடு எனக்கு பாரிய வெற்றியைத் தந்தது. கிழக்கு மாகாணத்தில் இருந்து பெரு எண்ணிக்கையிலான ஆதரவாளர்கள் கண்டிக்கு வருகை தந்திருந்தார்கள். இவர்கள் அனைவருக்கும் தங்குமிட வசதிகள் உணவு ஏற்பாடுகள் செய்திருந்தேன். உணவு ஏற்பாடுகள் எனும் போது சுமார் 100 பேர் அளவுக்குத்தான் செய்தேன். இவை எல்லோருக்கும் செய்ய வில்லை.

தலைவர் அஷ்ரஃப் அவர்களுக்கு இந்த பேராளர் மாநாட்டைப் பார்த்து விட்டு பெரும் உற்சாகம் ஏற்பட்டது. அந்நேரத்தில் கட்சிக்கு 1000 பணம் கொடுப்பதற்கு யாரும் இல்லை. அவருடைய பேச்சில் ரூபா 1000 பணம் இருக்காது. எங்கேயாவது பயணம் சென்றால் என்னைப் பார்த்து பாரூக் அதற்கான பணத்தைக் கொடுத்து விடுங்கள் என்பார். இதை ஏன் சொல்கின்றேன் என்றால் அந்தளவுக்கு நாங்கள் இருவரும் மிகுந்த நட்பாகப் பழகி வந்தோம்.

**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மேலெழுச்சி நாட்டின் நாலா திக்குகளிலும் பரவத் தொடங்கியதன் விளைவாக பாராளுமன்றத் தேர்தல்களிலும் வரலாற்றில் முதல் முறையாக அஷ்ரஃப் உட்பட பலர் தெரிவு செய்யப்பட்டனர். இதில் நீங்களும் போட்டியிட்டீர்கள் தானே. அது பற்றி...**

இப்படியான கால கட்டத்தில் 1994 இல் பாராளுமன்றத் தேர்தல் வந்தது. அதில் கண்டி மாவட்டத்தில் இன்றைய தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களின் மாமா போட்டியிட்டார், அதில் நானும் போட்டியிட்டேன். நாங்கள் எல்லோரும் ஒரே அணியாக நின்று செயற்பட்டோம். அதன் போது அவருடைய வெற்றிக்காக ரவூப் ஹக்கீமின் குடும்பத்தினர் அனைவரும் கடினமாக உழைத்தனர். தேர்தல் முடிவு வந்தது. எல்லோரும் தோல்வி. ஆனால் என்னை விட குத்தூஸ் ஹாஜியார் 500 விருப்பு வாக்குகள் பெற்றிருந்தார். அப்பொழுது புஹார்தீன் ஹாஜியார் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். அவர் வீட்டில் பெரிய விருந்துபசாரம் இடம் பெற்றது. அங்கு கண்டி மாவட்டத்திற்கான அமைப்பாளர் தெரிவும் இடம்பெற்றது. அக்கால கட்டத்தில் கண்டி மாவட்ட அமைப்பாளராக நான் இருந்தேன். எனினும் ஒரு குழுவினர் வேறு ஒருவரை அந்த இடத்திற்கு நியமிப்பதற்கு முயற்சி செய்தார்கள்.

எனினும், தலைவர் அஷ்ரஃப் குத்தூஸ் ஹாஜியார் என்னை விட அதிகம் வாக்குப் பெற்று விட்டார் என்ற காரணத்தினால் அவரையும் கவனத்தில் கொண்டார்.கண்டி அமைப்பாளர் விடயத்தில் ஏனையோர்களுடைய கருத்துக்களையும் மதித்து செயற்பட்டார்.

இதற்காக என்னுடைய பெயர், குத்தூஸ் ஹாஜியார் பெயர் தெல்தோட்டையில் உள்ள மௌலவி இல்யாஸ் ஆகியோர்களுடைய மூன்று நபர்களது பெயர்களும் பரிந்துரை செய்யப்பட்டிருந்தன. இந்தச் சந்தர்ப்பத்தில் அஷ்ரஃப் இதற்கு என்ன செய்வார் என்று எல்லோரும் ஆவலோடு எதிர்பார்த்து இருந்தனர். அவர் உள்ளே சென்று வெளியே வந்தார். அவர் தான் தொழுது அல்லாஹ் விடம் துஆக் கேட்டு விட்டு வந்துள்ளேன். மூன்று துண்டுகள் உள்ளன. அதில் ஒரு துண்டில் சரி என்ற அடையாளத்தை இட்டுள்ளேன். சரி என்று வரும் துண்டில் உள்ள நபரின் பெயர் இருந்தால் அவர் தான் கண்டி மாவட்ட அமைப்பாளராகத் தெரிவு செய்யப்படுவார் என்று பகிரங்கமாகத் தெரிவித்தார்.

அதன் பிறகு நாங்கள் மூவரும் அந்த துண்டை எடுத்தோம். நான் எடுத்த துண்டில்தான் சரி என்ற அடையாளம் இருந்தது. அப்பொழுது அஷ்ரஃப் அவர்கள் தனது உரையில் 'தொழுகையில் சரியான ஒருவரை அந்த இடத்திற்கு தெரிவு செய்து தர வேண்டிக் கொண்டாதாகவும் உண்மையிலேயே சரியான ஒருவரைத் தான் அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ளான் என்று எனது பெயரைக் குறிப்பிட்டு உரையாற்றினார்.

இந்த இடத்திலே தலைவர் அஷ்ரஃப், செய்த நேர்த்தியான பன்முகத் தன்மை வாய்ந்த நுன்மதித் திறனும், நீதியான பார்வையும், ஆழமான அரசியல் கலாசார சிந்தனையும், கட்டுக்கோப்பான வழி நடத்தலும் அவரின் தலைமைத்துவ ஆளுமையில் இருந்து இயல்பாகவே வெளிப்பட்டு கண்டி மாவட்டத்திற்கான மாவட்ட அமைப்பாளர் பதவிக்காக மும்முனைப் போட்டி நிலவிய போது அதை யாருக்கு வழங்கலாம் என்பத்தில் உரிய நேரத்தில் சரியான தீர்மானத்தை எடுத்து, துண்டு குலுக்கல் முறை மூலம் நீதியான தீர்ப்பை வழங்கின்ற தலைவரின் திறன் அந்த சபையிலே அரங்கேறியது. ஒரு மறுமதலிப்பு இல்லை. இந்த தீர்ப்பை சபையோர் எல்லோரும் ஏற்றுக் கொண்டனர்.

நேர்காணல்: இக்பால் அலி



# நகர்வலம்



# ஜனாதிபதி தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்ள ஐ.தே.க எப்போதும் தயார்

## இரத்தினபுரி ஐ.தே.க அமைப்பாளர் சுப்பையா ஆனந்தகுமார்



ஜனாதிபதி தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராகிவிட்டது. எமது கட்சி தலைவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேசிய பொது வேட்பாளராக களமிறங்கி மக்களின் அமோக ஆதரவுடன் வரலாற்று ரீதியிலான வெற்றியை பதிவு செய்வது உறுதியாகியுள்ளது என்று ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் மூன்றுபேர் கொண்ட குழுவின் உறுப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் தெரிவித்தார்.

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரத்து 700 ரூபா சம்பளத்தை பெற்றுக்கொடுப்பதில் எமது கட்சி உறுதியாகவுள்ளது எனவும், சம்பள உயர்வை வழங்க மறுக்கும் நிறுவனங்களின் குத்தகை ஒப்பந்தம் நிச்சயம் இரத்து செய்யப்படும் எனவும் அவர் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன, பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார, சுப்பையா ஆனந்தகுமார் ஆகியோர் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களுடன் சந்திப்பொன்றை மேற்கொண்டனர்.

இச்சந்திப்பின் பிறகு ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர், அரசமைப்பின் பிரகாரம் உரிய காலப்பகுதியில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதில் ஜனாதிபதி உறுதியாக இருக்கின்றார். அந்தவகையில் தேர்தல் ஏற்பாடுகள் பற்றி ஆராய்வதற்கு வந்திருந்தோம். தேர்தலை நடத்துவதற்கான முதல் சந்தர்ப்பத்திலேயே தேர்தல் திகதியை நிர்ணயிக்குமாறு கோரிக்கை விடுத்தோம். நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தலுக்கு எமது கட்சி முழுமையான ஆதரவை வழங்கும். ஏனெனில் அன்று முதல் இன்று வரை ஜனநாயக வழியிலேயே அரசியல் பயணம் தொடர்கின்றது.

பொருளாதார போரில் இருந்து நாட்டை மீட்டெடுத்துள்ள உலகத் தலைவர்களுள் ஒருவராக போற்றப்படும் எமது ஜனாதிபதிக்கு நாளுக்கு நாள் மக்கள் ஆதரவு பெருகிவருகின்றது. அவரின் வெற்றி உறுதியாகியுள்ள நிலையில் இம்முறை வரலாற்று சாதனை படைக்கும் அளவுக்கு வாக்குகள் கிடைக்கப்பெறும் என்பது உறுதி. அனைத்து இன மக்களும் ஒன்றிணைந்து இலங்கையர்களாக, நாட்டுக்காக, நாட்டின் காவலனுக்கு வாக்களிக்கவுள்ளனர்.

அதேவேளை, மலையக மக்களை தேசிய நீரோட்டத்தில் இணைக்கும் விடயத்தில் ஜனாதிபதி அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றார். அந்தவகையிலேயே மலையக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்து பேச்சு நடத்தி இருந்தார்.

தோட்ட தொழிலாளர்களின் சம்பள பிரச்சினைக்கு நிச்சயம் தீர்வு கிட்டும்.

அவ்வாறு இல்லையேல் குத்தகை ஒப்பந்தம் இரத்து செய்யப்படும். இது தொடர்பில் பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது என்றார்.

# தும்பு ஏற்றிவந்த லொறி தீப்பிடித்து எரிந்து நாசம்

## முந்தல் பிரதேசத்தில் சம்பவம்



**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

முந்தல் பிரதேசத்தின் மங்களஎளிய சின்னப்பாடு பிரதான வீதியின் கொத்தாந்தீவு பிரதேசத்தில் தும்பு ஏற்றிச் சென்ற லொறியொன்று நேற்று (18) காலையில் தீப்பிடித்து முழுமையாக எரிந்து நாசமாகியுள்ளது.

இதனால் அவ்வீதியின் ஊடான போக்குவரத்து சுமார் இரண்டு மணி நேரம் தடைப்பட்டது. கொத்தாந்தீவு பிரதேசத்தில் இருந்து நேற்று காலை 11.00 மணியளவில் தும்பு ஏற்றிச் சென்ற லொறியொன்று வீதியில் உள்ள மின்சார வயரை அறுத்துக் கொண்டு பயணித்த நிலையில் லொறியில் இருந்த தும்பில் திடீர் என ஏற்பட்ட தீயினால் தும்பு முழுமையாக எரிந்ததுடன், லொறி பகுதியளவில் எரிந்துள்ளது.

குறித்த தீப்பரவல் காரணமாக பல இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. தும்புடன் கூடிய லொறியில் ஏற்பட்ட தீயை பிரதேச மக்கள் ஒன்றிணைந்து நீண்ட போராட்டத்திற்கு மத்தியில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் உடப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



பேருவளைக்கு அண்மையில் விஜயம் செய்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பேருவளை நகர சபை முன்னாள் எதிர்க்கட்சித்தலைவர் ஹஸன் பாஸியின் இல்லத்தில் இடம்பெற்ற பிரதேச பாடசாலைகளின் அபிவிருத்தி தொடர்பான விசேட கலந்துரையாடலில் கலந்துகொண்டார். இந்நிகழ்வில் அமைப்பாளர் இப்திகார் ஜெமீல் மற்றும் ரூமி ஹாசிம் பௌண்டேசன் தலைவர் டொக்டர் ரூமி ஆகியோரும் கலந்துகொண்டுள்ளதை படத்தில் காணலாம்.

## அகில இலங்கை தமிழ் தினப்போட்டி;

# ஹம்பாந்தோட்டை மாவட்ட போட்டிகள் நாளை ஆரம்பம்

**(ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்)**

அகில இலங்கை தமிழ் மொழித் தினப்போட்டியின் இவ் வருடத்திற்கான ஹம்பாந்தோட்டை மாவட்ட போட்டி நாளை 20 ஆம் திகதி சனிக் கிழமை வீரகெடிய, யக்கஸ்முல்லை அல் அமீர் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் வெகு விமரிசையாக நடைபெறவுள்ளதாக தென் மாகாண கல்வித் திணைக்களத்தின் தமிழ் மொழிப் பாடசாலைகளுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம். ஏ. எம். மஸாஹிர் (18) தெரிவித்தார்.

எழுத்தாக்கப் போட்டிகள் ஏற்கனவே, நிறைவு செய்யப்பட்டுள்ளதோடு ஏனைய சகல போட்டிகளும் அன்றையதினம் நடைபெறவுள்ளது. இம்மாவட்டத்திலுள்ள சகல தமிழ் மொழி மூல பாடசாலைகளிலிருந்தும் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்வேறு போட்டி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவுள்ளதோடு இந்தபோட்டிகளில் முதல் இடம் பெறும் மாணவர்கள் தென் மாகாண தமிழ் மொழிப் போட்டியில் கலந்துகொள்ளும் சந்தர்ப்பத்தினை பெறவுள்ளனர்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு வீரகெடிய, யக்கஸ்முல்லை அல் அமீர் முஸ்லிம் மகா வித்தியாலத்தில் மாவட்ட தமிழ் மொழிப் போட்டிகள் நடைபெறவுள்ளதனால் யக்கஸ்முல்லை அல் அமீர் முஸ்லிம் மகாவித்தியாலத்தின் அதிபர் எ. சீ. ஜெம்ஸித் தலைமையில், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் அனைவரும் ஒன்றிணைந்து சிறப்பாக நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளனர்.

## வெலிகம அறபாவில்

# பழைய மாணவர் சங்க ஏற்பாட்டில் கிரிக்கட் போட்டி

**(வெலிகம தினகரன் நிருபர்)**

வெலிகம அறபா மத்திய கல்லூரியின் (தேசிய பாடசாலை) பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள பழைய மாணவர்களுக்கிடையான மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி நாளை 20ஆம் திகதி மற்றும் 21ம் திகதிகளில் (சனி, ஞாயிறு) வெலிகம அறபா பதியுதீன் மஹ்மூத் விளையாட்டுத் திடலில் மிக விமர்சையாக இடம் பெறவுள்ளது.

இதில் 32 அணிகள் பங்குபற்றுகின்றன. 1978ல் இருந்து இன்று வரை கல்வி கற்ற பழைய மாணவர்கள் இச்சுற்றுப் போட்டியில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். சிரேஷ்ட , கனிஷ்ட பிரிவுகளாக இப்போட்டிகள் இடம் பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

அதேவேளை, அன்றைய தினம் பழைய மாணவர்களால் வாகன ஊர்வலம் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## பாடசாலை பதிவேட்டில் கையொப்பமிட்டுவிட்டு

# பிரத்தியேக வகுப்பு நடாத்திய ஆசிரியர் ஒருவர் பணி நீக்கம்

## வட மத்திய மாகாண கல்விப்பணிப்பாளர் அதிரடி

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

பாடசாலை ஆசிரியர் பதிவேட்டில் கையொப்பமிட்டுவிட்டு உயர்தர வகுப்பு மாணவர்கள் சிலருக்கு பிரத்தியேக கணிதப் பாடம் கற்பித்த அநுராதபுரம் பாடசாலை ஒன்றின் ஆசிரியர் ஒருவரை பணிநீக்கம் செய்துள்ளதாக வடமத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.எம். டப்ளியு. சமரகோன் தெரிவித்தார்.

குறித்த ஆசிரியர் பாடசாலை நேரத்தில் மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்பு நடத்தி வருவதாக மாகாண கல்வி பணிப்பாளருக்கு பெற்றோர்கள் முறைப்பாடு செய்திருந்தனர். இதனடிப்படையில் பணிப்பாளர் மற்றுமொரு உத்தியோகத்தர்கள் குழுவினருடன் குறித்த பாடசாலைக்கு களவிஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த போது அந்த ஆசிரியர் பாடசாலை பதிவேட்டில் கையொப்பமிட்டு பாடசாலைகளுக்கு வெளியில் சென்று சாலியபுர பகுதியில் மாணவர்களுக்கு கற்றுக் கொடுத்துள்ளார்.

குறித்த ஆசிரியர் எந்தவொரு பொறுப்பு வாய்ந்தவரினதும் அனுமதியின்றி இந்த ஆண்டு இது வரைக்கும் 26 நாட்கள் விடுமுறை எடுத்துள்ளதாகவும் பணிப்பாளர் தெரிவித்தார். அதனால் குறித்த ஆசிரியர் கடந்த (17) தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

# "சாதனை பெண்மணி" விருது வழங்கும் விழா



வெல்லம்பிட்டிய ஹஸ்மா பிரைடல் மற்றும் கலைக்கூடம் (பிரவேட் லிமிடெட்) ஏற்பாடு செய்த "சாதனைப் பெண்மணி" விருது விழா அண்மையில் கலைக்கூடத்தின் பணிப்பாளர் திருமதி ஹஸ்மா மாலிக் தலைமையில் வெல்லம்பிட்டிய பெவிலியன் கிராண்ட் மண்டபத்தில் வெகுவிமர்சையாக நடைபெற்றது.

இவ்விழாவில் பல்வேறுபட்ட அதிதிகள் கலந்து சிறப்பித்ததுடன் மாணவர்களுக்கு விருதுகளையும் வழங்கி வைத்தனர்.

ஒப்பனைக்கலையில் நிபுணத்துவம் பெற்ற முதன்மையான ஒப்பனை நிறுவனமான இக்கலைகூடம், ஹென்னாக்கலை, கேக் தயாரித்தல், சமையல் மற்றும் இலங்கையில் உள்ள இளம் தொழில் முனைவோரை கௌரவிக்கும் அதிசிறப்பான விவகாரங்கள் உட்பட பல்வேறு வகைகளில் 100க்கும் மேற்பட்ட பரிந்துரைகளுக்கு மத்தியில் ஆர்வமுள்ள ஒப்பனை கலைஞர்களுக்கான வடிவமைக்கப்பட்ட டிப்ளோமா பட்டங்களையும் வழங்குகிறது.மேலும் இந்நிகழ்வின் பிரதம அதிதிகளுக்கு நிகழ்வின் ஏற்பாட்டாளர்களால் நினைவுச்சின்னங்களும் வழங்கிவைக்கப்பட்டன.

**(படம்: எம்.எம்.ஜெஸ்மின்)**

# 08 மாணவர்கள் போட்டியில் வெற்றி

**புத்தளம் தினகரன் நிருபர்**

வென்னப்புவ நகரில் அண்மையில் நடைபெற்ற பாடசாலை மாணவர்களுக்கான மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளில் தேத்தாப்பளை ரோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலய மாணவர்கள் பல்வேறு போட்டிகளில் 08 மாணவர்கள் இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

பாடசாலை அதிபர் அருட் சகோதரி மேரி டெல்சியாவின் வழிகாட்டலில் விளையாட்டு பொறுப்பாசிரியர் பாயிஸின் சிறந்த பயிற்றுவித்தலில் மாணவர்கள் இந்த அடைவினை பெற்றுள்ளனர்.

புத்தளம் மாவட்ட தடகள போட்டிகள் சங்கம் பாடசாலை மாணவர்களிடையே இப்போட்டிகளை ஏற்பாடு செய்திருந்தது.

# நிசாம் காரியப்பரின் கவிதை நூல் வெளியீட்டு விழா



ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான நிசாம் காரியப்பரின் 'அந்த கல்முனைக்குடி நாட்கள்' எனும் கவிதைத் தொகுதி வெளியீட்டு நிகழ்வு நாளை சனிக்கிழமை 20 ஆம் திகதி பி.ப. 3.30 மணிக்கு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் லோட்டஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் விசேட அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம், வெளிநாட்டு அமைச்சின் ஓய்வு பெற்ற அதிகாரியும் முன்னாள் தூதுவருமான எச்.ஏ. அஸீஸ், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் தமிழ் பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# கிராண்ட்பாஸ் மகா வித்தியாலயத்தில் மாணவர்களுக்கு சின்னம் சூட்டும் விழா

**ருசைக் பாரூக்**



கொழும்பு கிராண்ட்பாஸ் விஜயபா மகா வித்தியாலயத்தின் ஏற்பாட்டில் மாணவர் தலைவர்கள் தின நிகழ்வு அண்மையில் பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் வணக்கத்துக்குரிய பேரகம விமல திஸ்ஸ தேரர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும் கொழும்பு மத்திய ஐக்கிய தேசியக் கட்சியின் உதவிச் செயலாளருமான ஏ.ஆர்.எம். சபான் பிரதம அதிதியாக கலந்து கொண்டு மாணவர்களுக்கு சின்னம் அணிவித்தனர்.

மேற்படி நிகழ்வில் பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.



மக்கொன அஹதிய்யா பாடசாலை மாணவர்கள் கல்விச் சுற்றுலா மேற்கொண்டு அண்மையில் கொழும்பு வந்தனர். இவர்கள் அஹதிய்யா பாடசாலை செயலாளர் ஜனாபா ஜிப்ரியா இப்ராஹீம் தலைமையிலான குழுவினர், ஆசிரியைகள் சகிதம் மாணவர்களுடன் லேக்ஹவுஸ் நிறுவனத்தை பார்வையிட்ட பின்னர் எடுத்துக்கொண்ட படம்.

(படம்: ருக்மல் கமகே)



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
உதவி அதிபர், கொ/ புனித அன்னம்மாள் மகளீர் மகாவித்தியாலயம், கொழும்பு 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

**I.**

சின்னஞ் சிறுவில்லாய்க் கண்டதம்மா – பின்னர்
செம்பொற் குடம்போலே தோன்றுதம்மா
என்ன அதிசயம் பாராயம்மா - ஈதோர்
இந்திர சாலமோ கூறாயம்மா

01. ஆச்சரியம் என்னும் கருத்தைத் தரும் சொல் எது? ………………………………

02. உவமைத் தொடரை எழுதுக. ……………………………………………………

03. இந்தப் பாடல் வரிகள் எதனைப்பற்றி கூறுகின்றது? ………………………………

04. அடுக்கிடுக்குத் தொடர் எது? ……………………………………………………

05. பிரித்தெழுதுக.
i. கண்டதம்மா - ……………………….. ii. செம்பொன் - ……………………..
iii. பொற்குடம் - ………..

06. இப்பாடலிலுள்ள உயர்திணை ஒருமை சொல் எது? ………………………………

07. அஃறிணை பன்மை பலவின்பால் வினைச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.
வந்தான் ஓடினான் மரங்கள் பறந்தன கிளி

08. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.
சூரியன் / வானத்தில் / பார்க்கலாம் / மறையும்போது / மேற்கில்

………………………………………………………………………………

09. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலைத் தொடர்பு சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் எழுதுக.
i. எனது பூந்தோட்டத்தில் அழகான பூக்கள் பூத்துள்ளன. ( )
ii. மான் கூட்டம் சிதறி ஓடின. ( )
iii. ஒவ்வொரு புத்தகமும் நல்லது. ( )
iv. தாலாட்டுப் பாடல்கள் இனிமையானவை. ( )

**II.**

10. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.
i. எவ்வளவு பெரிய மலை - ……………………………………………………
ii. பாலிலிருந்து தயிர் மோர் வெண்ணெய் நெய் முதலியவற்றைப் பெறுகின்றோம்
……………………………………………………………………………

11. கீழே தரப்பட்டுள்ளவற்றிற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.
(குட்டி, தோட்டம், நுங்கு, பிள்ளை, கோவை, குவியல், கச்சல்)
i. வாழையின் இளமையை குறிக்கும் சொல் ……………………………………
ii. வாழையின் கூட்டத்தைக் குறிக்கும் சொல் …………………………………
iii. வாழையின் பிஞ்சைக் குறிக்கும் சொல் ……………………………………

- பின்வரும் தொடர்களுக்குரிய தனிச் சொற்களை எழுதுக.

12. கணக்கு வழக்கின்றிப் பொருளை வீணே செலவு செய்பவன் ……………………..

13. பிறரைப் பற்றி அக்கறை இல்லாதவன் …………………………………………

14. பொருட்கள் பண்டங்களை சேமித்து வைக்கும் இடம் ……………………………

15. பின்வரும் பழமொழியின் கருத்தினை எழுதுக.
i. காற்றுள்ள போதே தூற்றிக் கொள். ……………………………………………

16. பின்வரும் தொடர் மொழிகளுக்குரிய தனிச்சொல்லை எழுதுக.
i. ஒரே பாடசாலையில் ஒன்றாகப் படித்தவர்கள் ………………………………
ii. தேர்தல் ஒன்றில் போட்டியிடுபவன் ……………………………………………

17. பொருத்தமான இணைமொழியைத் தெரிவு செய்து உரிய கோட்டில் எழுதுக.
i. குமார் தனது தொலைந்த பென்சிலைத் தேடி ………………………………… (அல்லும் பகலும் / அங்கும் இங்கும்) அலைந்து திரிந்தான்.
ii. மனிதர்கள் ……………… (நோய் நொடி / ஆடிப்பாடி) இன்றி வாழவேண்டும்.

18. தரப்பட்ட வாக்கியங்களை வினைச் சொல்லிற்கு பொருத்தமாக மாற்றி எழுதுக.
i. நான் தமிழ்ப் பாடத்தை படித்தேன்.
…………………………………………… படித்தான்.
ii. நீ பாடம் படித்தாயா?
………………………………………….. படித்தீர்களா?

19. பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.
i. வம்ப(ட்)டு - ……………………… ii. பொ(த்)த …………………………

20. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்ப் பதத்தை எழுதுக.
i. Sunflower - ……………………… ii. Lightening - ………………………
பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.
iii. புத்தாண்டு வாழ்த்துக்கள் - ………………….. iv. நிறுத்துக - ……………….

**III.**

21. ஆண்டுக்கான மார்ச் மாதத்தின் நாட்காட்டி கீழே தரப்பட்டுள்ளது. அவற்றை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

| மார்ச் 2019 | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

i. இம்மாதத்திலுள்ள ஞாயிற்றுக் கிழமைகளின் எண்ணிக்கை யாது? ……………
ii. மார்ச் 6ஆம் திகதியில் தொடங்கும் வாரத்தின் கடைசித் திகதியும் கிழமையும் யாவை?
……………………………………………………………………………

22. ஒரு நூலகத்தில் 2185 புத்தகங்களும் இன்னுமொரு நூலகத்தில் 3236 புத்தகங்களும் உள்ளன. எனின் இரண்டு நூலகத்திலும் உள்ள புத்தகங்களின் எண்ணிக்கையை எண் பெயராக எழுதுக.
……………………………………………………………………………

23. பழக்கடை ஒன்றிலுள்ள விலைப்பட்டியலில் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது. அதனை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.

| பழங்கள் | விலை |
|---|---|
| அன்னாசி | 250 ரூபாய் |
| தோடம்பழம் | 35 ரூபாய் |
| பலாப்பழம் | 350 ரூபாய் |

i. 500 ரூபாய் தாள் ஒன்றைக் கொடுத்து பலாப்பழம் ஒன்றும் தோடம்பழம் ஒன்றும் வாங்கினால் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு? …………………………………
ii. 1000 ரூபாய் தாள் ஒன்றைக் கொடுத்து 2 அன்னாசிப் பழங்களை வாங்கினால் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு? ……………………………………………

24. i. இத்திண்ம உருவின் பெயர் யாது? …………………
ii. இதன் முகங்களின் வடிவம் யாது? …………………
iii. முகங்களின் எண்ணிக்கை யாது? …………………
iv. விளிம்புகளின் எண்ணிக்கை யாது? ………………..
v. உச்சிகளின் எண்ணிக்கை யாது? …………………



25. எழுத்தில் தரப்பட்டுள்ள எண்களை இலக்கத்தில் எழுதுக.
i. அறுபத்தொன்பதாயிரத்துத் தொண்ணூற்றொன்பது ……………………………
ii. முப்பதாயிரத்து எழுநூற்று ஐம்பது ……………………………………………

26. கீழே தரப்பட்டுள்ள உரோமன் இலக்கத்திற்கு முன்னாலும் பின்னாலும் வரும் உரோமன் இலக்கங்களை எழுதுக.
………….. VIII ………………

27. ஒரு சாக்கில் 58 தேங்காய்கள் வீதம் மூன்று சாக்குகளில் தேங்காய்கள் உள்ளன. அம்மூன்று சாக்குகளிலும் உள்ள தேங்காய்களின் எண்ணிக்கை யாது?
……………………………………………………………………………

28. ஒரு பிள்ளைக்கு மூன்று இனிப்புக்கள் வீதம் 168 இனிப்புக்களை எத்தனை பிள்ளைகளுக்குப் பிரித்துக் கொடுக்கலாம்?
……………………………………………………………………………

29. கட்டங்களினுள் வரவேண்டிய எண்களை எழுதுக.

```
   2  1  5  2
   □  1  □  3
+  3  □  2  □
   ----------
   7  1  7  9
   ==========
```

**IV.** **சரியான விடையின் கீழ் கோடிடுக.**

30. தொல்பொருள் பெறுமதி மிக்கதாகவும் கலைத்துவப் பெறுமதி மிக்கதாகவும் உள்ள இடம்
i. எம்பிலிப்பிட்டிய ii. சிகிரிய iii. கொத்மலை

31. உடல் வளர்ச்சிக்கு உதவும் உணவுக் கூட்டத்தில் அடங்கியுள்ள உணவு எது?
i. ஈரப்பலா ii. பசளி iii. சோயா அவரை

32. பின்வருவனவற்றுள் அயடின் குறைபாட்டினால் ஏற்படும் நோய் எது?
i. கண்டமாலை ii. நீரிழிவு iii. தொண்டைக் கரப்பன்

33. இலங்கையின் தேசியக் கொடியைச் சுற்றிவர நான்கு பக்கங்களிலும் உள்ள மஞ்சள் நிறக் கீற்று காட்டுவது
i. சமுத்திரத்தினால் சூழப்பட்டுள்ள நாடு என்பதை எடுத்துக்காட்ட.
ii. நாட்டில் வாழும் இனங்களின் ஒற்றுமையைக் குறிக்க.
iii. நாட்டில் முக்கிய இனங்கள் நான்கு உள்ளன என்பதை அறிய.

(10ஆம் பக்கம் பார்க்க)

(09 ஆம் பக்கத் தொடர்)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

34. முலையூட்டி வகைப் பிராணிகள் மாத்திரம் அடங்கியுள்ள தொகுதி எது?
i. முதலை, நரி, யானை ii. ஆமை, புலி, கரடி iii. மாடு, நரி, புலி

35. களுகங்கை, படகமுவ ஆகியன முறையே இலங்கையில் உள்ள
i. ஓர் ஆறும் காடும் ஆகும். ii. ஒரு குளமும் ஒரு மலையும் ஆகும்.
iii. ஒரு நீர்வீழ்ச்சியும் ஒரு காடும் ஆகும்.

36. பொலித்தீன் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
i. பொலிதீனை எரிக்கும் போது வெளியேறும் நச்சு வாயு நோய்களை உண்டாக்குகின்றது.
ii. பொலித்தீன் விரைவாக உக்குவதற்கு மண் உதவுகின்றது.
iii. கைவிடப்பட்ட உணவு உள்ள பொலித்தீனை உண்பதால் விலங்குகள் இறக்கின்றன.

37. பிளாஸ்ரிக் கோப்பையில் அடைக்கப்பட்ட யோகட்டை உண்பதற்கு முன்பாக விசேடமாகக் கவனத்தில் கொள்ள வேண்டியது
i. அடைக்கப்பட்ட திகதி ii. காலாவதியாகும் திகதி iii. அடங்கும் பொருள்

38. பித்தளை மேசைக் கரண்டியில் சிறிதளவு நீரை இட்டு மெழுகுவர்த்தி சுவாலையில் பிடிக்கும் போது
i. நீரின் நிறம் மாறும் ii. நீர் உள்ள கரண்டி வெப்பமாகாது
iii. நீர் ஆவியாகும்

39. நடுவதற்குப் பொருத்தமான வித்து கொண்டிருக்கும் இயல்பு?
i. அழகானது ii. சிறியது iii. முதிர்ச்சியானது

40. வண்ணத்துப்பூச்சி முட்டையிடுவது?
i. இலைகளின் கீழ் ii. குப்பைகளில் iii. அசுத்தமான நீரில்

41. நிறையுணவைத் தரும் பிராணி?
i. சேவல் ii. மான் iii. பசு

42. மருத்துவ குணம் கொண்ட உணவைப் பெறமுடியாத தாவரம்?
i. பொன்னாவரசு ii. பூவரசு iii. நன்னாரி

43. பிறைப்பூ பூக்கும் மாதம்
i. ஆடி ii. ஆவணி iii. புரட்டாதி

44. பிராணிகளால் தாவரங்களுக்கு கிடைக்கும் நன்மை அல்லாதது?
i. வித்துப்பரம்பலுக்கு உதவும் ii. மகரந்த சேர்க்கைக்கு
iii. பாதுகாப்பு கிடைத்தல்

45. 
இவ்வீதிக் குறியீடு காணப்படுவது?
i. சந்தைக்கு முன் ii. பாடசாலைக்கு முன்
iii. நீதிமன்றத்திற்கு முன்

46. மூல வர்ணங்கள் எவை?
i. சிவப்பு, மஞ்சள், நீலம் ii. நீலம், பச்சை, சிவப்பு iii. சிவப்பு, மஞ்சள், பச்சை

47. அரச நிறுவனங்களில் ஒன்று
i. சிறப்பு அங்காடி ii. சந்தை iii. தபாலகம்

48. உடல் உள சுகத்திற்கான செயற்பாட்டின் 3ஆம் படிமுறை
i. திடசித்தம் ii. பிரார்த்தனை iii. உதிப்பு

49. இடவசதி குறைந்த இடத்தில் பயிரிடக்கூடிய முறை அல்லாதது
i. மழைப்பீலித்துண்டு ii. பழைய டயர் iii. ரெஜிபோம் பெட்டி

50. கொழும்பு நகரத்தில் கடலுடன் கலக்கும் நதி
i. களனி கங்கை ii. மாணிக்க கங்கை iii. ஜின் கங்கை

51. இலங்கை அரசாங்கத்தினால் இலவசமாக வழங்கப்படும் சேவை
i. தபால் ii. மின்சாரம் iii. நீர்

52. சூரியஒளி மூலம் கிடைக்கும் விற்றமின்
i. விற்றமின் B ii. விற்றமின் D iii. விற்றமின் C

53. மின்குமிழைக் கண்டுபிடித்தவர்
i. ரைட் சகோதரர்கள் ii. மார்க்கோணி
iii. தோமஸ் அல்வா எடிசன்

54. சுவாசத்திற்கு பயன்படும் பிரதான வாயு
i. ஒட்சிசன் ii. நைதரசன் iii. காபனீரொட்சைட்டு

55. தேசிய கீதம் பாடப்படுவது?
i. தேசிய கொடி ஏற்றும் போது ii. தேசியக் கொடி ஏற்றிய பின்னர்
iii. தேசியக் கொடி ஏற்ற முன்னர்

56. மரங்களில் இருந்து கிடைக்கும் பயன் அல்லாதது?
i. வெப்பத்திலிருந்து பாதுகாக்கும்
ii. பிராணிகளின் வசிப்பிடமாக அமையும்
iii. வெப்பத்தைத் தரும்

57. பாதுகாப்பிற்காக நிறம் மாறும் திறன் கொண்ட பிராணி?
i. குயில் ii. மைனா iii. பச்சோந்தி

58. அதிகமாக புகையிலை பாவிப்போருக்கு வரக்கூடிய நோய்
i. புற்றுநோய் ii. வாந்திபேதி iii. நீரிழிவு

59. ஒருவர் தனியாக பாவிக்க வேண்டிய பொருள்
i. கைக்குட்டை ii. வானொலி iii. தொலைபேசி

60. சென்ற வருட கல்விச் சுற்றுலா எனக்கு இப்போதும் நினைவிருக்கின்றது என்பதைத் தலைப்பாகக் கொண்டு மூன்று வாக்கிங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலை தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

## கடந்த வார (12.07.2024) வினாத்தாள் I இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 2 | 21. | 2 | 31. | 1 |
| 02. | 1 | 12. | 2 | 22. | 1 | 32. | 1 |
| 03. | 3 | 13. | 1 | 23. | 3 | 33. | 2 |
| 04. | 3 | 14. | 1 | 24. | 1 | 34. | 2 |
| 05. | 1 | 15. | 2 | 25. | 3 | 35. | 2 |
| 06. | 1 | 16. | 3 | 26. | 2 | 36. | 2 |
| 07. | 2 | 17. | 3 | 27. | 1 | 37. | 1 |
| 08. | 1 | 18. | 3 | 28. | 2 | 38. | 2 |
| 09. | 2 | 19. | 2 | 29. | 1 | 39. | 3 |
| 10. | 2 | 20. | 2 | 30. | 2 | 40. | 3 |

# குழந்தை கிணற்றில் வீசப்பட்டு கொலை; தாய் மீது சந்தேகம்

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

ருவன்வெல்ல பொலிஸ் பிரிவுக் குட்பட்ட யட்டியந்தோட்டை பிரதேசத்தில் உயிரிழந்த நான்கு வயது சிறுமியை அவரது தாயாரே கிணற்றில் வீசி கொலை செய்துள்ளதாக சந்தேகிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் (17) சிறுமி அவர் வசிக்கும் பகுதியிலுள்ள கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

யட்டியந்தோட்டை, கிரிபோருவ தோட்ட பகுதியைச் சேர்ந்த தேவ்மி அமயா என்ற 4 வயது 10 மாத பெண் குழந்தையே உயிரிழந்துள்ளது.



இச்சம்பவம் கடந்த 16ஆம் திகதி இரவு 11.00 மணிக்கும், மறுநாள் அதிகாலை 5.30 மணிக்கும் இடையில் இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது சிறுமியின் தாயாரே சிறுமியை கிணற்றில் வீசி கொலை செய்துள்ளதாக சந்தேகிக்கப்படுகின்றது. உயிரிழந்த சிறுமியின் தாய் வாய் பேச முடியாத பெண் என்பதுடன், சுகவீனமுற்றிருந்த நிலையில் கரவனெல்ல வைத்தியசாலையில் பொலிஸ் பாதுகாப்பில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்நிலையில் சிறுமியின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.கொலைக்கான காரணம் இதுவரை அறியப்படாத நிலையில், ருவன்வெல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பழைய மாணவர் சங்க ஒன்றுகூடல்

(தலவாக்கலை குறூப் நிருபர்)

தலவாக்கலை புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவர் சங்க ஒன்றுகூடல் நாளை (20) சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் கல்லூரி அதிபர் அருட்தந்தை டொமினிக் சந்தனம் தலைமையில் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பத்திரிசியார் கல்லூரியில் (1937 - 2021) ஆம் ஆண்டு வரை கல்வி பயின்ற அனைத்து பழைய மாணவர்களையும் இதில் கலந்து கொள்ளுமாறு கல்லூரி நிர்வாகம் அழைப்பு விடுத்துள்ளது.






ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் 2005/2006ஆம் வருட முகாமைத்துவ பீட மாணவர்களின் பங்களிப்பில் நுவரெலியா கல்வி வலயத்துக்குட்பட்ட கஷ்ட பிரதேச பாடசாலையான தலவாக்கலை கிறேட் வெஸ்டன் பாடசாலைக்கு பாடசாலை ஆசிரியர் பி.கேதீஸ் ஊடாக கரப்பந்தாட்டம் மற்றும் வலைப்பந்தாட்ட பந்துகள் இலவசமாக வழங்கப்பட்டன. பாடசாலை ஆசிரியர் பி.கேதீஸிடமிருந்து பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸ் பந்துகளை பெற்றுக்கொள்வதை படத்தில் காணலாம்.



அக்குறணை தொடன்கொள்ள அல் இல்மா (Al ilma) முன்பள்ளி சிறுவர்களின் வியாபாரசந்தை முன்பள்ளி வளாகத்தில் அண்மையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம்.

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு பெண் கொலை

பிங்கிரிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இஹல கடிகமுவ பகுதியில் பெண்ணொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் கணவரே இக்கொலையை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இஹல கடிகமுவ பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குடித்துவிட்டு வீட்டுக்கு வரும் கணவர், பெண்ணை பலமுறை தாக்கி சித்திரவதை செய்துள்ளமை தெரியவந்துள்ளது. குடும்பதகராறு காரணமாக கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் தனது பெற்றோர் வீட்டிற்கு அவர் சென்றுள்ளார்.

# கிராம உத்தியோகத்தர் திடீர் மரணம்

(அக்குறணை குறூப் நிருபர்)

கிராம உத்தியோகத்தர்களுக்கான பயிற்சியில் ஈடுபட்டிருந்த பெண்ணொருவர் திடீரென உயிரிழந்த சம்பவம் உடதும்பர பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. ஹுன்னஸ்கிரிய ரம்புக்பொத்த பகுதியைச் சேர்ந்த பிலிப் நக்மா என்ற 25 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக உடம்பர பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து நியமனம் பெறுவதற்கான பயிற்சியில் ஈடுபட்டிருந்த போதே உயிரிழந்துள்ளதாக தெரிய வருகின்றது. தெல்தெனிய வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி ஆர்.எம்.ஆர். அனுருத்த ரத்நாயக்க தலைமையில் பிரேத பரிசோதனை இடம்பெற்றது. இதன்போது மூளையில் கட்டி ஒன்று இருந்ததாகவும் அது வெடித்தமையால் இரத்த கசிவு ஏற்பட்டு மரணம் சம்பவித்துள்ளதாகவும் அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# பசறையில் சிறப்புமிக்க வருடாந்த ஆடி மகோற்சவ தேர் திருவிழா

(லுணுகல நிருபர்)

வரலாற்று சிறப்புமிக்க சின்னக்கதிர்காமம் என போற்றப்படுகின்ற அம்மணிவத்தை அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம், பசறை நகர் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம், கிக்கிரிவத்தை அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம், எல்டெப் அருள்மிகு ஸ்ரீ சிவசுப்ரமணிய கோயில், கோணக்கலை கீழ்பிரிவு தோட்ட அருள்மிகு ஸ்ரீ முருகன் கோயில், டெமேரியா மாத்தன்னை தோட்ட அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில், கோணக்கலை மேற்பிரிவு அருள்மிகு ஸ்ரீ முருகன் ஆலயம் மற்றும் கல்குடாவத்தை தோட்ட அருள்மிகு முருகன் ஆலயம் ஆகிய ஆலயங்களின் வருடாந்த ஆடி மகோற்சவ தேர் திருவிழா நாளை (20) மாலை வேளையில் நடைபெறவுள்ளது.

ஆண்டுதோறும் பக்திப்பூர்வமாக நடைபெறும் தேர்திருவிழாவில் பசறை நகரில் அம்மணிவத்தை அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின் முத்தேர் பவனியும் பசறை நகர் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய தேர் ஏனைய முருகன் ஆலயங்களின் இரத பவனி இணைந்த பன்னிரண்டு தேர் மற்றும் இரத பவனிகள் ஓரிடத்தில் சங்கமிக்கின்ற சிறப்புமிக்க தேர் திருவிழாவாகும்.

பத்து தொடக்கம் பதினாறு வரையான தேர், இரத பவனி ஓரிடத்தில் சங்கமிக்கின்ற சிறப்புமிக்க தேர் விழா இலங்கையில் பசறை பிரதேசத்திலேயே நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பெரடைஸ்வெவ குளத்தில் இரத்தினக்கல் தோண்ட ஏல விற்பனை

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி குருவிட்ட பெரடைஸ் வெவ குளத்தில் காணப்படுவதாக கூறப்படும் இரத்தினக்கல் கனியவளத்தை ஏலவிற்பனை செய்ய இரத்தினக்கல் அதிகாரசபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இரத்தினபுரி இணைப்புக் குழுவின் தீர்மானத்தையடுத்து அதிகாரசபை குளத்தின் நிலப்பகுதியை 20 பிரிவுகளாக பிரித்து ஏல விற்பனைக்கு விட்டுள்ளது.

ஏற்கனவே இக்குளத்தை சுத்திகரித்து மக்களுக்கு நலனோம்பு பணிகளை மேற்கொள்வதாக குறிப்பிட்ட சிலர் இதன் நீரை வெளியேற்றி இரத்தினக்கல் அகழ்வை மேற்கொள்ள முயற்சித்த போது அதற்கு பிரதேச மக்கள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வந்தனர்.

அத்துடன் இவ்விடயத்தை இரத்தினபுரி இணைப்புக் குழுவுக்கும் அறிவித்தனர்.

# கிழக்கின் குரல்



# உள்ளூராட்சிமன்ற பணியாளர் 500 பேருக்கு நிரந்தர நியமனம்



**மட்டக்களப்பு சுழற்சி, கல்லடி குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்**

உள்ளூராட்சிமன்றங்களில் தற்காலிக மற்றும் அமைய ஊழியர்களாக கடமையாற்றி சுமார் 10 வருடங்களுக்கு மேல் நிரந்தரமின்றி கடமையில் இருக்கும் உள்ளூராட்சி பணியாளர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்துக்கொண்ட துரித நடவடிக்கையின் பயனாக தற்பொழுது நிரந்தரநியமனம் வழங்கப்பட்டு வருகிறது .

இந்த அடிப்படையில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் உள்ளூராட்சிமன்றங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம் நேற்று வழங்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தில் பணியாற்றும் சுமார் 500 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கும் வைபவம் மட்டக்களப்பு மாநகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.மதிவண்ணன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இந்த நியமனங்களை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் அரசு சேவையாளர்கள், அரச அரசியல் அதிகாரிகள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

# தாந்தாமலை முருகன் ஆலய பாதயாத்திரை

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு கோட்டைக்கல்லாறு புனித தலயாத்திரை ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கிழக்கில் வரலாற்று பிரசித்தி பெற்ற தாந்தாமலை முருகன் ஆலயத்தை நோக்கிய 11ஆவது புனித யாத்திரை நாளை சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. இப்புனித யாத்திரையில் அடியார்கள் இணைந்து கொள்ளலாம் என கோட்டைக்கல்லாறு புனித தலயாத்திரை ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது. தாந்தாமலை முருகன் ஆலய தீர்த்தோற்சவத்தை முன்னிட்டு வருடாந்தம் கோட்டைக்கல்லாறு நூற்றுக்கணக்கான பக்த அடியார்கள் பாதயாத்திரை மேற்கொள்வது வழக்கமாகும். இதற்கமைய இம்முறை 20ஆம் திகதி அதிகாலை 5 மணிக்கு பாதயாத்திரை ஆரம்பமாகின்றது. இந்த யாத்திரை குழுவினர் 21ஆம் திகதி காலை தாந்தாமலை முருகன் ஆலயத்தை சென்றடையவுள்ளனர்.

இந்த யாத்திரையில் இணைந்துகொள்ளும் அடியார்களில் ஆண்கள் காவி நிற வேட்டியுடனும், பெண்கள் மஞ்சள் நிற சேலையுடனும் இணைந்துகொள்ளுதல் அவசியமாகும்.

இரு தினங்களும் பாதயாத்திரையில் ஈடுபடும் அடியார்களுக்கு அன்னதானம், தாகசாந்தி போன்றவற்றை வழங்க விரும்புபவர்கள் யாத்திரை குழுவினரோடு தொடர்பு கொள்ளலாம். குறித்த பாதயாத்திரை குழுவினர் கோட்டைக்கல்லாறு, ஒந்தாச்சிமடம், ஈஸ்டன் தோட்டம், களுவாஞ்சிக்குடி, பட்டிருப்பு சந்தி, பெரியபோரதீவு, கோயில் போரதீவு, புன்னக்குளம், தும்பங்கேணி, நிலக்கோட்டை, 40ஆம் கட்டை, செல்வாபுரம், வாழைக்காலை ஆகிய இடங்கள் ஊடாக 21 ஆம் திகதி தாந்தாமலை முருகன் ஆலயத்தை சென்றடைவர் என கோட்டைக்கல்லாறு புனித தலயாத்திரை ஒன்றியம் தெரிவித்துள்ளது.

# அவசர தேவைக்கு வேண்டிய பொருட்கள் வழங்கிவைப்பு



**அம்பாறை மத்திய தினகரன் நிருபர்**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்னாள் இராஜாங்க அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம்.எம். முஷாரப்புக்கு வழங்கப்பட்ட விஷேட நிதியொதுக்கீட்டில் இருந்து, சாய்ந்தமருது பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பாடசாலைகள், சமூக சேவை அமைப்புக்கள் மற்றும் விளையாட்டுக்கழகங்கள் போன்றவற்றின் அவசர தேவைகளுக்கு வேண்டிய பொருட்களை வழங்கி வைக்கும் நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச செயலக கேட்போர் கூடத்திலும் கலாசார மண்டபத்திலும் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப்பின் சாய்ந்தமருது மற்றும் மாவடிப்பள்ளி பிரதேச இணைப்பாளரான அஸாம் அப்துல் அஸீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு மேற்படி பொருட்களை வழங்கி வைத்தார்.

நிகழ்வின்போது சாய்ந்தமருது பிரதேச செயலக பிரதி திட்டமிடல் உத்தியோகத்தர் கே.எல்.எம். ஹமீட், நிர்வாக உத்தியோகத்தர் ஏ.சி.முகம்மட் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினரின் ஆலோசகரும் மருதமுனை மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆப் பள்ளிவாசலின் தலைவர் எம்.ஐ.எம். முகர்றப் (RDO) உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# போதை மாத்திரைகளுடன் இரு சந்தேக நபர்கள் கைது

**தம்பலகாமம் குறூப் நிருபர்**

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்போபுர பகுதியில் போதை மாத்திரைகளுடன் இரு சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

26, 28 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக உப்புவெளி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவர்களிடமிருந்து 362 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களையும் திருகோணமலை மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# சாதனை படைத்த மாணவர்கள் கௌரவிப்பு

**துறைநீலாவணை நிருபர்**



கல்குடா கல்வி வலயத்திலுள்ள சுங்கான்கேணி வலம்புரி விநாயகர் வித்தியாலய புதிய பெயர் பலகை திறப்பு விழாவும், இவ்வித்தியாலய பரிசளிப்பு விழாவும் அதிபர் த.கேந்திரராஜா தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை (17) நடைபெற்றது.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இதன்போது பாடசாலை பெயர் பலகையினை திறந்து வைத்ததோடு சாதனையாளர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவித்தார்.

இதன்போது கல்வி, கலை கலாசார மற்றும் விளையாட்டு துறைகளில் சாதனை படைத்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் கல்குடா வலய கல்வி பணிப்பாளர் த.ஆனந்தரூபன், பிரதி கல்விப் பணிப்பாளர்களான நிஸ்மியா பானு, ந.நேசகஜேந்திரன், சி.இதயகுமார், சி.தயாசீலன், கோட்டக்கல்வி பணிப்பாளர் அ.ஜெயக்குமணன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் அருண் திருநாவுக்கரசு, முன்னாள் அதிபர் மு.மகேந்திரன், ஆசிரிய ஆலோசகர் அ.சந்திரகாந்தன் உட்பட பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், கிராம சேவை உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், ஸ்ரீ வலம்புரி சித்தி விநாயகர் ஆலய பிரதம குரு மற்றும் ஆலய நிர்வாக சபையினர், விளையாட்டுக் கழக உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து சிறப்பித்தனர்.

# நாவிதன்வெளி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு விருது




2023 காலப்பகுதியில் சுக வனிதையர்களுக்கான சேவை வழங்குதலில் (Well Women Programme) நாடளாவிய ரீதியில் உள்ள 354 சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களில் முதல் 14 இடங்களினுள் நாவிதன்வெளி சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதார பணியகத்தினால் கடந்த 16ஆம் திகதி கொழும்பு UCFM மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த விருது வழங்கல் நிகழ்வில் பிரதம அதிதியாக சுகாதார அமைச்சின் செயலாளர் கலந்து கொண்டு விருதுகளை வழங்கி வைத்தார்.

தேசிய விருது பெற்று பிராந்தியத்தின் பெருமையை மேலோங்க செய்தமைக்காக நாவிதன்வெளி சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் இதற்காக உழைத்த உத்தியோகத்தர்களுக்கு கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் சகீலா இஸ்ஸதீன் நன்றி மற்றும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார். (எம்.எம்.ஜெஸ்மின்)

# போதை அற்ற சிறந்த நாட்டை உருவாக்கும் திட்டம் முன்னெடுப்பு

## பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி உவைஸ் பாரூக்

**ஒலுவில் விசேட நிருபர்**



நாட்டில் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்தி எதிர்காலத்தில் போதையற்ற சிறந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கு அரசாங்கத்தினால் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் உவைஸ் பாரூக் தெரிவித்தார். பொத்துவில் அஸ்ஸம்ஸ் நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில் மது பாவனை ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு பொத்துவில் தேசிய பாடசாலையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை (17) நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் உவைஸ் பாரூக் தொடர்ந்து உரையாற்றுகையில்,

"பாடசாலை மாணவர்களிடையே புகைத்தல் மற்றும் போதைவஸ்து பாவனை வீதம் அதிகரித்து காணப்படுவதால் இள வயதிலேயே மாணவர்கள் தொற்றா நோய்க்கு ஆளாகி வருகின்றார்கள். ஆரோக்கியமான சமூகமே அந்த நாட்டின் மதிப்பிட முடியாத வளமாக உள்ளது. புகைத்தல் மற்றும் போதைப்பொருள் பாவனைக்கு சிறுவர்களும் அடிமையாக மாறிக் கொண்டு வருவது தற்போது எதிர்நோக்கும் பாரிய சவாலாகும்.

தற்போது குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களிலும் புகைத்தல் மற்றும் போதைப்பொருள் பழக்கம் அதிகரித்து வருவதை காணக்கூடியதாகவுள்ளது. புகைத்தல் மற்றும் போதைப்பொருள் பாவனைக்காக தங்களின் வருமானத்திலிருந்து ஒருதொகைப் பணம் செலவிடப்படுவதால், போஷனை மட்டம் குறைவடைந்து செல்வதுடன், சிறுவர்களின் கல்வி நிலையும் பாதிக்கப்படுகின்றது. புகைத்தல் மற்றும் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகவுள்ள மக்களை அதிலிருந்து விடுவித்துக் கொள்வதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். சிறார்கள் இந்நாட்டின் பெறுமதிமிக்க செல்வங்கள். அவர்களைப் பேணி பாதுகாப்பது பாடசாலையினதும், பெற்றோர்களினதும் கடமையாகும். நாட்டின் அனைத்துச் சிறுவர்களும் எமது பிள்ளைகளென கருதி போதையிலிருந்து விடுபட்ட நாடொன்றை உருவாக்குவதற்கு நாம் எல்லோரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

# வீட்டு தோட்டத்துக்கு பயிர் விதைகள்

**பாலமுனை தினகரன் நிருபர்**

வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தட்டுமுனை கிராமத்தில் வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கைக்காக பயிர் விதைகள் வழங்கப்படவுள்ளன.

பிதேச செயலக சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் மற்றும் கிராம மட்டத்திலான குழுக்களினால் அடையாளம் காணப்பட்ட பயனாளிகளுக்கு விழுது தன்னார்வ தொண்டர்களினால் மட்டக்களப்பு பிரதி விவசாயப் பணிப்பாளர் மற்றும் விவசாய போதனாசிரியர் பிரபா ஆகியோரின் நெறியாழ்கையில் இரண்டு கட்டங்களாக பயிர் விதைகள் வழங்கப்படவுள்ளன.

சுமார் 25 பயனாளிகளுக்கு இரு கட்டங்களாக பயிர்ச் செய்கை சம்பந்தமான பயிற்சிகள் வழங்கப்பட்டு இறுதியாக பயிர் விதைகளும் அதற்கான ஏனைய பொருட்களும் வழங்கப்படவுள்ளதுடன் இந்த செயற்றிட்டம் சம்பந்தமாக வாகரை விவசாய கேந்திர நிலையத்துடன் இணைந்து கண்காணிக்கப் படவுள்ளது.

# குடிசன வீட்டு வசதிகள் தொகை மதிப்பு தெளிவூட்டல் நடவடிக்கை

**திருகோணமலை தினகரன் நிருபர்**

குடிசன வீட்டு வசதிகள் தொகை மதிப்பில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கையாக அமைந்துள்ள கணக்கெடுக்கும் திட்டத்தின் பயிற்சி மற்றும் கள நடவடிக்கையினை ஆரம்பிப்பதற்கு முன்னர் மாவட்டம் மற்றும் பிரதேச செயலகங்களில் தொகை மதிப்பு நடவடிக்கையினை வழிகாட்டும் சிரேஷ்ட நிர்வாக உத்தியோகத்தர்களுக்கான தெளிவூட்டும் நிகழ்வு கடந்த 16 ஆம்' திகதி திருகோணமலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தொகை மதிப்பு ஆணையாளர், பிரதி மற்றும் உதவித் தொகை மதிப்பு ஆணையாளர்கள் தெளிவூட்டல்களை வழங்கினர். அறிமுகம், தொகை மதிப்பின் திட்டங்கள், தொகை மதிப்பின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்புகள், கணக்கெடுத்தல், தொகை மதிப்பில் சேகரிக்கப்படும் தகவல்கள், தொகை மதிப்பு உத்தியோகத்தர்களின் வகிபாகங்கள், கால அட்டவணை போன்ற பல விடயங்கள் இதன்போது தெளிவூட்டப்பட்டன.

திருகோணமலை மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாவட்ட பிரதம கணக்காளர் ப.ஜெயபாஸ்கர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் கே.விஜயதாசன், புள்ளிவிபரத் திணைக்களத்தின் வெளிக்கள முகாமைத்துவ பிரிவு மற்றும் மாதிரி அளவீட்டுப் பிரிவின் பணிப்பாளரினால் திருகோணமலை அரசாங்க அதிபரின் சேவையை பாராட்டி நினைவுச்சின்னம் வழங்கி வைக்கப்பட்டது. புள்ளிவிபரத் திணைக்களத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பியலால் அரச குலரத்ன, பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், கணக்காளர்கள் உட்பட புள்ளிவிபரத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கபடி போட்டியில் தேசிய மட்டத்திற்கு தெரிவு

**மணல்சேனை நிருபர்**



மாகாண மட்ட பெரு விளையாட்டு போட்டியில் சம்மாந்துறை கல்வி வலயத்திற்குட்பட்ட றாணமடு இந்து கல்லூரி மாணவிகள் 17 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கபடி போட்டியில் இரண்டாவது இடத்தை பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளதாக அதிபர் க.கதிரைநாதன் தெரிவித்தார்.

இப்போட்டியானது 17 ஆம் திகதி புதன்கிழமை நிந்தவூர் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றதில் இச்சாதனையினை நிலைநாட்டியுள்ளனர். இதேவேளை இம்மாணவர்களின் வெற்றிக்கு உழைத்த பாடசாலையின் பயிற்றுவிப்பாளர் நிரோஜன், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் ஒத்துழைப்புக்களை வழங்கிய வலயக் கல்வி அலுவலகத்தினர் அனைவருக்கும் அதிபர் நன்றி தெரிவித்துள்ளார். அதேவேளை வெற்றி பெற்ற மாணவிகளுக்கு அப்பிரதேச பொது அமைப்புக்கள் பாராட்டுக்களை தெரிவித்துள்ளதுடன் வழிப்படுத்திய அதிபர் மற்றும் பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுகாதார அமைச்சர் தலைமையில் வடக்கு மாகாண சுகாதாரத்துறை தொடர்பான விசேட கலந்துரையாடல்





"சுகாதார மற்றும் கல்வித் துறைகளே நாட்டில் மிகவும் சிக்கல் வாய்ந்தவைகளாக காணப்படுகின்றன. இந்த இரண்டு துறைகளிலும் மிகவும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகின்றனர்" என வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரன தலைமையில் நேற்றுமுன்தினம் (17/07) வடக்கு மாகாண பிரதம செயலாளர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் வடக்கு மாகாண சுகாதாரத்துறை தொடர்பான விசேட கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத்தெரிவிக்கும் போதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார். இந்நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர்கள், மத்திய சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் P.G. மஹிபால, வடக்கு மாகாண பிரதம செயலாளர் எல். இளங்கோவன், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், விசேட வைத்தியர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாணத்தை பொறுத்தவரையில் எங்களுக்கு பல சவால்கள், வளப்பற்றாக்குறை காணப்படுவதுடன், குற்றச்சாட்டுக்களும் காணப்படுகின்றன.

சுகாதார துறையில் பல விடயங்களை மேம்படுத்த வேண்டிய தேவைக் காணப்படுகின்றது.

நோய் தடுப்புக்களை மேற்கொள்வதுடன் நோயாளர்களின் உரிமைகளை பாதுகாக்குமாறே எனது அதிகாரிகளுக்கு நான் கூறி வருகின்றேன். வரையறுக்கப்பட்ட வளங்களை பயன்படுத்தி சிறந்த சேவைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அத்துடன், ஜனாதிபதியால் திறந்துவைக்கப்பட்ட நான்கு வைத்தியசாலைகளின் விசேட பிரிவுகளிலும் வளங்களை பகிர்ந்து பயன்படுத்துவது, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களின் வைத்தியசாலைகளின் குறைப்பாடுகள் தொடர்பில் குறித்த வைத்தியசாலைகள் தொடர்பான முன்மொழிவுகள் தயார் செய்யப்பட்டு இந்திய உயர்ஸ்தானிகராலயத்திற்கு சமர்பிக்கப்பட்டுள்ளன. மக்களை பாதுகாப்பதற்கான அதிகபட்ச முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்நிலையில் மாகாண சுகாதார துறையில் காணப்படும் ஆளணிப் பற்றாக்குறைக்கு தீர்வுகளை வழங்குமாறு அமைச்சரிடம் கோரிக்கை முன்வைத்தேன். இந்த விடயம் தொடர்பில் விரைவில் தீர்வுகளை பெற்றுத்தருவதாக அமைச்சர் உறுதியளித்துள்ளார்." எனத் தெரிவித்தார்.

# வடக்கின் உதயம்

## யாழ். இளையோருக்கு வெளிநாட்டு ஆசை காட்டி 06 கோடி ரூபாவுக்கு மேல் மோசடி செய்தவர் கைது

**யாழ்.விசேட நிருபர்**

வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதாக பல்வேறு நபர்களிடம் இருந்து சுமார் 06 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணத்தினை பெற்று மோசடி செய்த குற்றச்சாட்டில் கிழக்கு பல்கலைக்கழக அலுவலர் ஒருவர் யாழ்ப்பாண பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த சிலரை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதாக கூறி பெரும் மோசடி ஒன்று நடைபெற்ற நிலையில், பாதிக்கப்பட்டவர்கள் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் பெண்ணொருவரை கைது செய்து, அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், அந்த பெண்ணினை வழிநடத்தி, மோசடிகளில் ஈடுபட்டவர் எனும் குற்றச்சாட்டில் கிழக்கு பல்கலைக்கழகத்தின் அலுவலர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை முன்னதாக கைது செய்யப்பட்ட இளம் பெண், பல்வேறு நபர்களிடம் இருந்து பெற்ற சுமார் 6 கோடி ரூபாய்க்கும் அதிகமான நிதியினை பல்கலைக்கழக அலுவலரின் வங்கி கணக்கில் வைப்பிலிட்டுள்ளமையும் விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## கச்சாய் தெற்கில் இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

**சாவகச்சேரி விசேட நிருபர்**

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கச்சாய் தெற்கு கடற்கரைப் பகுதியில் நேற்று முன்தினம் (17/07) புதன்கிழமை காலை இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக அடையாளம் காணப்பட்டுள்ளார். கச்சாய் தெற்குப் பகுதியைச் சேர்ந்த மேற்படி குடும்பஸ்தர் வீட்டில் இருந்து இரு நாட்களாக காணாமல் போயிருந்த நிலையிலேயே கடற்கரையில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்நிலையில் சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## மடு தம்பனைக்குளத்தில் சிறப்புற நடைபெற்ற ஆடிப்பிறப்பு விழா

**தலைமன்னார் விஷேட நிருபர்**





தமிழர்களின் பாரம்பரியப் பண்டிகைகளில் ஒன்றான ஆடிப்பிறப்பு கொண்டாட்டம் மடு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தம்பனைக்குளம் கிராமத்தில் புதன்கிழமை (17) காலை 8 மணிமுதல் மிகவும் சிறப்புற நடைபெற்றது.

வவுனியா மன்னார் வீதியில் அமைந்துள்ள தம்பனைக்குளம் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயத்தில் மடு பிரதேச செயலாளர் கீ. பீட் நிஜாகரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகின் அனுசரணையிலும் வழிப்படுத்தலிலும் மடு பிரதேச செயலகம் இந்த விழாவை ஒழுங்கு செய்திருந்தது.

ஆரம்ப நிகழ்வாக ஆடிப்பிறப்பு பண்டிகையை அறிமுகம் செய்து வைத்த யாழ்ப்பாணம் நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் திருவுருவப் படத்திற்கு மடு பிரதேச செயலாளர் கீ. பீட் நிஜாகரன் மலர் மாலை அணிவித்து மலர் வணக்கம் செலுத்தினார். தொடர்ந்து பொதுமக்கள் மலர் வணக்கம் செலுத்தினர்.

இதைத் தொடர்ந்து 'ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை' என்ற பாடலை தம்பனைக்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் இசைத்தனர். தொடர்ந்து அபிவிருத்தி உத்தியோகத்தர் மனோகராசா பிரதீபன் 'ஆடிப்பிறப்பும் தமிழர் பாரம்பரியமும்' என்ற தலைப்பில் சொற்பொழிவும், தொடர்ந்து தம்பனைக்குளம் அ.த.க.பாடசாலை மாணவர்கள் மற்றும் தம்பனைக்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நடனம், பேச்சு, கவிதை மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதன்போது கலை நிகழ்வுகளை வழங்கிய மாணவர்கள் பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் கலந்து கொண்ட அனைவருக்கும் பாரம்பரிய முறைப்படி சிரட்டைகளில் ஆடிக்கூழ் மற்றும் கொளுக்கட்டை என்பன வழங்கப்பட்டன.

சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் இந்த நிகழ்வுகளை மிகவும் நேர்த்தியாக நெறிப்படுத்தி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## வவுனியா பெரிய கோமரசன்குளம் ம.வி. மாணவிகள் மாகாண பளுதூக்கும் போட்டியில் சாதனை

**ஓமந்தை விஷேட நிருபர்**



2024ம் ஆண்டுக்கான மாகாண மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான பளுதூக்குதல் போட்டியில் வவுனியா பெரிய கோமரசன்குளம் மகா வித்தியாலய மாணவிகள் சாதனை படைத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் (17/07) மாகாண ரீதியில் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற பளு தூக்கல் போட்டியில் வவுனியா பெரிய கோமரசன்குளம் மகா வித்தியாலய மாணவிகள் மூவர் தங்கப்பதக்கத்தையும், ஒரு வெள்ளி பதக்கத்தையும் பெற்றுள்ளனர் .

அதில் 17 வயது பிரிவில் 59kg எடை பிரிவில் 70kg எடையை தூக்கி சூ.அனுஷா முதலாம் இடத்தையும், 64 kg எடை பிரிவில் 75kg எடையை தூக்கி க.வன்சிகா முதலாம் இடத்தையும், 81kg எடை பிரிவில் 84kg எடையை தூக்கி க.அபிசாளினி இரண்டாம் இடத்தையும், 20வயது பிரிவில் 49kg எடை பிரிவில் 80kg எடையை தூக்கி பி.மேரி அசெம்ரா முதலாம் இடத்தையும் பெற்று பாடசாலைக்கும் மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

இம் மாணவர்களுக்கான பயிற்றுவிப்பாளர் ஞா. ஜீவன் ஆசிரியர், நெறிப்படுத்திய பயிற்றுவிப்பாளர் செ. அம்பிகா மற்றும் மாணவர்களுக்கு பொறுப்பாக இருந்த உடற்கல்வி ஆசிரியர் ந. ரூபராஜா ஆகியோரின் தியாகமும் உழைப்பும் இன்றியமையாததாகும்.

இவ்வாறு தற்காலத்தில் வடக்கு மாகாணத்தை சேர்ந்த அதிகமான வீர, வீராங்கனைகள் பளு தூக்கும் போட்டிகளில் வெற்றி பெற்று தொடர்ந்து சாதனை நிகழ்த்தி மாகாணத்திற்கு பெருமைசேர்க்கின்றனர்.

## நண்பிக்கு வங்கியில் பணம் பெற்றுக் கொடுத்தவர் கடனை செலுத்தாத நிலையில் உயிர் மாய்ப்பு

**யாழ்.விசேட நிருபர்**

தனது நண்பிக்காக வங்கியில் இருந்து கடனாக பெற்றுக் கொடுத்த பணத்தினை மீள செலுத்த முடியாதமையால் மனமுடைந்த குடும்ப பெண் ஒருவர் தவறான முடிவெடுத்து தனது உயிரை மாய்த்துள்ளார்.

யாழ்ப்பாணம், அல்வாய் பகுதியை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரை மாய்த்துள்ளார். உறவு முறையான இரு பெண்களுக்கு இடையில் நீண்ட கால நட்பு இருந்து வந்துள்ளது.

அதில் ஒரு பெண் பண கஷ்டத்தில் இருந்த போது மற்றைய பெண் வங்கியில் பெருந்தொகை பணத்தினை கடனாக பெற்று, தனது நண்பிக்கு பண உதவி செய்துள்ளார்.

பண உதவியை பெற்றுக்கொண்ட பெண், பணத்தினை மீள செலுத்தாத நிலையில், வங்கியில் கடன் பெற்ற பெண் பண நெருக்கடிக்கு ஆளாகி, மனவுளைச்சலில் காணப்பட்டுள்ளார்.

இந்நிலையில் நண்பியின் பெயரை முகநூலில் பதிவிட்டு, தனது மரணத்திற்கு காரணம் இவர் தான் என்றும் இவரால் தான் தனது மூன்று பிள்ளைகளையும் அநாதையாக விட்டுச் செல்வதாக பதிவிட்டு உயிரை மாய்த்துள்ளார்.

## அராலியில் சிறப்பாக நடைபெற்ற பசுமை இயக்கத்தின் ஆடிப்பிறப்பு விழா!

**கரவெட்டி தினகரன் நிருபர்**



தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆடிப்பிறப்பு நாளைத் தமிழர் பண்பாட்டின் திருநாளாக நேற்றுமுன்தினம் புதன்கிழமை (17/07) அராலி வடக்கு குலனையூரில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடியுள்ளது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இவ்வாடிப்பிறப்பு விழா குலனையூர் கலைவாணி சனசமூக நிலையம், கலைவாணி விளையாட்டுக்கழகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் ஞானவைரவர் ஆலய முன்றலில் இடம்பெற்றுள்ளது. பிரதம விருந்தினராகக் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வரும் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் பொதுச்செயலாளருமான ச.லலீசன் கலந்து கொண்டிருந்தார். கலைவாணி சனசமூகநிலையத்தின் தலைவர் த.மதுசீலனின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகி, கலைவாணி விளையாட்டுக் கழகத்தின் தலைவர் நே.சாத்வீகனின் நன்றியுரையுடன் நிறைவுற்ற இவ்விழாவில் ஏராளமான மக்கள் கலந்துகொண்டிருந்தார்கள்.

மாணவர்களின் ஆற்றுகையில் கலை நிகழ்ச்சிகள் பலவும் இடம்பெற்றிருந்தன. அனைவருக்கும் ஆடிக்கூழும், கொழுக்கட்டையும் பரிமாறப்பட்டதோடு கலைநிகழ்ச்சிகளில் பங்கேற்ற மாணவர்களுக்கு பரிசுப் பொருட்களும் வழங்கப்பட்டன. தமிழர்களுக்கே உரித்தான ஒரு பண்பாட்டு அடையாளமான ஆடிப்பிறப்பும் அது சார்ந்த கொண்டாட்டங்களும் தற்போது அருகி வந்துள்ளன. இந்நிலையில் மீளவும் அதனை வெகுசனமயப்படுத்தும் நோக்கில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் ஆண்டுதோறும் கிராமமட்டத்தில் பொதுமக்களுடன் இணைந்து ஆடிப்பிறப்பைச் சிறப்பான முறையில் கொண்டாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### இளையோருக்கான தேசிய மட்ட போட்டியில்

## வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலய மாணவன் வெள்ளிப்பதக்கம் பெற்று சாதனை

**ஓமந்தை விஷேட நிருபர்**



2024ஆம் ஆண்டு தேசிய மட்ட இளையோருக்கான 18 வயது ஆண்கள் பிரிவில் சம்மட்டி எறிதல் போட்டியில் வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் கி. சுபிஸ்கரன் 36.60 மீட்டர் எறிந்து வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளார்.

கடந்த ஜூலை 13 முதல் 16 வரை தியாகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு அரங்கில் இப்போட்டி வெகு விமர்சையாக இடம்பெற்றது.

கி. சுபிஸ்கரன் முன்பிருந்த சாதனையை முறியடித்து வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றியதோடு, வட மாகாணத்தின் பெருமையை உயர்த்தியுள்ளார். இப்போட்டியில் மூன்று இடங்களையும் வட மாகாண மாணவர்களே வென்றுள்ளனர். இவை வன்னி மாணவர்களின் திறமை மற்றும் கடின உழைப்பின் சான்றாகும்.

இந்த வெற்றிக்கு முக்கிய காரணமானவர் பயிற்சியாளர் ச.ஜெனோஜன். அவரது சிறப்பான பயிற்சியின் மூலம் கி.சுபிஸ்கரன் இந்த அரிய சாதனையை அடைந்துள்ளார்.

இது போன்ற சாதனைகள் இளைஞர்களுக்கு உந்துதல் அளிக்கும் விதமாக திகழ்கின்றன. கி. சுபிஸ்கரனின் வெற்றியும் அவரது பயிற்சியாளரின் அர்ப்பணிப்பும் ஏனைய மாணவர்களுக்கு மிகுந்த முன்மாதிரியாக திகழ்கின்றன.

## பெண்கள் தொடர்பான கருவளச் சிகிச்சை நிலையத்திற்கு 3 கோடி 50 இலட்சம் ரூபா ஸ்கான் இயந்திரம் கையளிப்பு

**யாழ்.விசேட நிருபர்**





யாழ். போதனா வைத்தியசாலை, யாழ்.மருத்துவபீடம், சிவபூமி அறக்கட்டளை இணைந்து நடாத்தும் பெண்கள் தொடர்பான கருவளச் சிகிச்சை நிலையத்திற்கு கலாநிதி ஆறு.திருமுருகனின் வேண்டுகோளுக்கு இணங்க கொடையாளர் சதா.மங்களேஸ்வரன், வழங்கிய 3 கோடியே 50 லட்சம் ரூபா பெறுமதியான ஸ்கான் இயந்திரம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

சிவபூமி அறக்கட்டளைத்தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகனால் மேற்படி ஸ்கான் மெசின் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி மற்றும் யாழ்.மருத்துவ பீட மகப்பேற்று வைத்திய நிபுணர்கள், தாதியர்களிடம் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில், யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ். மருத்துவ பீடம், வைத்தியர்கள், சிவபூமி அறக்கட்டளை நிலைய கொடையாளர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

கிழக்கில்

# உள்ளூராட்சிமன்ற ஊழியர்கள் 1,350 பேருக்கு நிரந்தர நியமனம்

கிழக்கு மாகாண உள்ளூராட்சிமன்றங்களில் தற்காலிக நியமனத்தில் பணிபுரிந்து வந்த 1350 க்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கி வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் 10 வருடங்களுக்கும் மேலாக தற்காலிக நியமனத்தில் பணிபுரிந்து வந்த ஊழியர்கள் தமது நிரந்தர நியமனம் குறித்து கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இவ்விடயம் குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய தீர்வினை பெற்று தருவதாக ஆளுநர் செந்தில் தொண்டமான் உறுதியளித்திருந்தார்.

இது தொடர்பாக ஜனாதிபதி, பிரதமருடன் கலந்துரையாடி, அதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு 1350க்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் நிரந்தர நியமனத்தை வழங்கி வைத்தார்.



மேலும் கிழக்கு மாகாணத்தில் காணப்படும் பிரச்சினைகளை இனங்கண்டு அதற்கு உரிய தீர்வினை உடனடியாக பெற்றுக் கொடுத்தமைக்காக கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு பாராட்டு தெரிவித்ததோடு, தமக்கு நிரந்தர தீர்வினை பெற்றுத்தந்த ஆளுநருக்கு உள்ளூராட்சிமன்ற ஊழியர்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

# பேருவளை அப்ரார் பவுண்டேஷன் புலமைப்பரிசில் வழங்கும் விழா




பேருவளை, அப்ரார் பவுண்டேஷனின் குறைந்த வருமானம் பெறும் திறமையான மாணவ மாணவிகளுக்கான 11 ஆவது வருடாந்த புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 21 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு பேருவளை ஐ.எல்.எம் சம்சுதீன் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

அமைப்பின் போசகரும்,முன்னாள் ஊடக அமைச்சரும் மற்றும் பாராளுமன்ற உறுப்பினருமான இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில், பிரதம அதிதியாக ஓமான் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் அஹமத் பின் அலி பின் சயீத் அல்ராஷிதி கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக இலங்கைக்கான பாலஸ்தீன நாட்டின் பதில் தூதுவர் ஹிஷாம் அபு தாஹா கலந்து கொள்ளவுள்ளதோடு,விசேட பேச்சாளராக வர்த்தகத்துறை பிரமுகர் எம்.எச் ஹிஷாம் கலந்து விசேட உரையாற்றவுள்ளார்.

அப்ரார் பவுண்டேஷனின் தலைவர் ஏ.ஜே.எம் நிஸாம் வழிகாட்டலில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பேருவளை பிரதேசத்தின் மருதானை, மஹகொட, மாளிகாஹேன ஆகிய பகுதிகளிலுள்ள தமிழ் மற்றும் சிங்கள மொழிப் பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தினகரன் நாளிதழ், தினகரன் வார மஞ்சரி மற்றும் பேருவளை நியூஸ் குழுமத்தின் ஊடக அனுசரணையில் வெகுவிமரிசையாக நடைபெறவுள்ள இவ்விழாவில் பாடசாலை அதிபர்கள், ஊர்ப் பிரமுகர்கள், உலமாக்கள், மாணவ மாணவிகள்,கல்வி நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

**(பீ.எம்.முக்தார்)**

## கிண்ணியாவில் பெண்ணின் சடலம் மீட்பு

**தம்பலகாமம் குறூப், கிண்ணியா மத்திய நிருபர்கள்**

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோனா கடற்கரையில் பெண் ஒருவரின் சடலம் நேற்று வியாழக்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளதாக கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் கிண்ணியா அஹமட் லேன் வீதியைச் சேர்ந்த 33 வயதான மஹ்ரூப் முன்னவ்வரா என்பவர் ஆவாரென பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் புத்தி சுவாதீனமற்றவர் எனவும் கடலில் குளிப்பதற்காக காலை கடலில் இறங்கியதால் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரைண மூலம் தெரியவருகிறது.

குறித்த சடலத்தை விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைத்துள்ளதாகவும் கிண்ணியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் கலந்துரையாடல்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பில் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் அரையாண்டுக்கான கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை (16) இடம்பெற்றது.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் வெளிக்கள பிரிவுக்குரிய பிரதி பணிப்பாளர் தர்ஷன , தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் வடகிழக்கு மாகாணத்திற்கான இணைப்பாளர் ரசிர் முஹமட் ரசாட் இந் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையினால் உத்தியோகத்தர்களின் திறன் மேம்பாட்டை அபிவிருத்தி செய்வதற்காக இது நாள் பாசறையாக இடம் பெற்ற இந் நிகழ்வில எதிர்கால திட்டமிடல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இதன் போது கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர் மாவட்டத்தில் போதைப் பொருள் பாவனையற்ற மாவட்டமாக மாற்றுவதற்கு அனைவரும் செயற்பட வேண்டும் என்பதுடன் சிறார்களை பாதுகாத்து

விழிப்புணர்வு வழங்க வேண்டியது எமது கடமையும் பொறுப்பாகும் என்றார். இந்நிகழ்வில் மாவட்ட போதைப்பொருள் தடுப்பு உத்தியோகத்தர் ப.தினேஸ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# சித்திரவேலாயுத சுவாமி ஆலய வருடாந்த திருக்கொடியேற்றம்

**காரைதீவு குறூப் நிருபர்**

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த திருக்கொடியேற்ற உற்சவம் நேற்று வியாழக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சண்முகமகேஸ்வர குருக்கள் முன்னிலையில் ஆலயகுரு சிவஸ்ரீ அங்குசநாதக்குருக்கள் ஒத்துழைப்பில் கொடியேற்ற உற்சவம் நடைபெற்றது.



இதில் ஆலய பரிபாலன சபை தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தலைமையிலான பரிபாலன சபையினர் மற்றும் ஆயிரக்கணக்கான கந்தன் அடியார்கள் கலந்து கொண்டனர்.

இந்த உற்சவம் 18 நாட்கள் நடைபெற்று ஆகஸ்ட் மாதம் 04ஆம் திகதி சமுத்திர தீர்த்த உற்சவத்துடன் நிறைவடைய இருக்கின்றது.

## சண்டிலிப்பாய் இந்து கல்லூரி பழைய மாணவர் சங்க கூட்டம்

யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 21ஆம் திகதி காலை 9.30 மணிக்கு அக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் நூலக மண்டபத்திலேயே இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்த கூட்டத்தில் அனைத்து மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

# இரண்டாயிரம் மாணவர்களுக்கு ஜனாதிபதி புலமைப்பரிசில்

**சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சிந்தனைக்கு அமைவாக ஜனாதிபதி நிதியத்தினால் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் அம்பாறை மாவட்டத்தில் 2000 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை (17) அம்பாறை டீ.எஸ். சேனாநாயக்கா தேசிய பாடசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது அம்பாறை மாவட்டத்தில் 2000 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் நிதி மற்றும் சான்றிதழ்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டன. இங்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கருத்துத் தெரிவிக்கையில்,

"நாட்டை முன்னேற்றமடையச் செய்ய கல்வித்துறை வளர்ச்சி காண வேண்டும் என்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகுந்த அக்கறை கொண்டுள்ளார். அதற்கமைய பல்வேறு கல்வி அபிவிருத்தித் திட்டங்கள் மாணவர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை எதிர்காலத்தில் சிறப்பாக முன்னெடுத்துச் செல்ல அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" என்றார்.

## இளம் கண்டுபிடிப்பாளரின் ஆக்கப்பொருள் கண்காட்சி



**அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்ட இளம் கண்டுபிடிப்பாளர்களின் ஆக்கப்பொருள் கண்காட்சி கல்லூரி ஆராதனை மண்டபத்தில் இடம்பெற்றது.

'எம் எதிர்கால மாணவர் சமுதாயத்தின் விஞ்ஞான ஆர்வத்தை மேம்படுத்தி நாட்டின் முன்னேற்றத்திற்கு வித்திட்டு அவர்களையும் வேலை உலகிற்கு தயார்படுத்துதல்' எனும் தொனிப்பொருளில் கல்வி அமைச்சினால் பாடசாலைகளுக்கு இடையிலான இளம் கண்டுபிடிப்பாளர்களுக்கான போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றியாளர்களுக்கு பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் இவ்வாறான போட்டி நிகழ்வுகளுக்காக மாணவர்களின் சிறந்த கண்டுபிடிப்புகளை இனங்கண்டு கொள்ளவென எமது அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையில் பாடசாலை மட்ட இளம் கண்டுபிடிப்பாளர்களுக்கான கண்காட்சி நிகழ்வு இடம்பெற்றது.

அதிபர் ஏ.எச்.பௌஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷேக் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

## உள்ளூராட்சி மன்றங்களின் ஊழியர்களுக்கு நியமனம்

**இறக்காமம் தினகரன் நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் 20 உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றிய ஊழியர்களுக்கு நியமன கடிதம் வழங்கும் நிகழ்வு உள்ளூராட்சி ஆணையாளர் க.மணிவண்ணன் தலைமையில் சம்மாந்துறை பிரதேச சபையின் அப்துல் மஜீத் மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எல்.எம். அதாவுல்லா, டபிள்யு.டி. வீரசிங்க, டீ. கலையரசன், விமல்வீர திசாநாயக்க உள்ளிட்ட கிழக்கு மாகாண சபையின் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.


**விலைமனுக்களுக்கான அழைத்தல்**

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்
**Repairing of Tank Nos. 40 & 41 at Upper Tank Farm, Chinabay**

**B/42/2024**

திருகோணமலையிலுள்ள சீனன்குடா தாங்கி மேற்பண்ணையின் 40 மற்றும் 41ஆம் இலக்கமுடைய தாங்கிகளை பழுதுபார்த்தல் என்ற ஒப்பந்தத்திற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

ஒப்பந்தத்தை வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் தகுதிநீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவர்களாகவும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் கூறப்பட்டுள்ள பின்வரும் தகுதித்தன்மை மற்றும் தகைமை தகவுத்திறனுக்கு அமைந்தொழுகியிருந்திருத்தலும் வேண்டும்.

- கனமான உருக்கு இணைத்தல் வகுதியின் கீழ் ஈஎம்2 அல்லது தரத்தில் அல்லது மேற்பட்ட தரத்தில் இலங்கை நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களாகவிருத்தல்.
  **மற்றும்**
  கடந்த 10 வருடங்களில் இபெகூ/ CPSTL அல்லது வேறேதாவது உள்ளூர்/வெளிநாட்டு நிறுவனத்துடன் AP1 Standard 650/653 இற்கு அமைவாக 60 மில்லியன் ரூபாவிற்கு குறையாத தொகையில் உருக்கிலான களஞ்சியப்படுத்தும் தாங்கி நிர்மாணம்/ பேணல்/ பழுதுபார்த்தல் ஆகியவற்றை முன்னெடுத்துச் சென்ற அனுபவம்.

''சீனன்குடா மேல் தாங்கி பண்ணையில் 2024.07.24 ஆம் திகதியன்று மு.ப. 8.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும். விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு சமுகமளித்தல் கட்டாயமானது என்பதுடன் விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு பங்குபற்றாமை விலைமனுவை நிராகரிப்பதற்கான வழியை வகுக்கலாம்''.

மீளளிக்கப்படாத கட்டணமாக 30,000 ரூபாவை (Rs. 24,803.64 +2.5% SSCL+18% VAT அடங்கலானது) இபெகூ இற்கு செலுத்திய பின்னர், 2024.08.01 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்திலுள்ள 1 ஆம் மாடியின் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

விலைமனுக்கள் 2024.08.02 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு விலைமனுக்களின் மூடும் நேரத்தின் பின்னர் உடனடியாகவே கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும். 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் வளமுள்ள விலைமனுதாரர்கள் https://eroc.drc.gov.lk/ என்ற இணையதளத்தினூடாக கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்த பின்னர் அவர்களின் விலைமனுக்களுடன் பிசிர 3 சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்

அனைத்து விலைமனுக்களும் 2,000,000 ரூபா பெறுமதியான விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை பொறிமுறை பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி இல.: 011 5455363

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்) மே/பா.,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**1 ஆம் மாடி, இல. 609, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, கொழும்பு-09. இலங்கை.**
**தொலைபேசி: 0094-11-5455336. தொலைநகல்: 0094-11-5455424**
**மின்னஞ்சல்**: supplies@ceypetco.gov.lk



# MINISTRY OF EDUCATION
# VOCATIONAL TRAINING AUTHORITY OF SRI LANKA

**Invitation for Bids (IFB)**

## Construction Works in Vocational Training Centers of Vocational Training Authority of Sri Lanka

| S. No | District | Description (Title) | Procurement No. | Engineer's Estimate (Without Contingencies & Vat) Rs.Mn | Value of Refundable Bid Security | Eligibility of Bidder CIDA (Successor to ICTAD) Grading (Building) | Non Refundable Document fee |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | Kandy | Construction of Student Sanitary Block at VTC at Angammana | VTA/PROC/ Works/TF/NCB/ 2024/05 | 3.27 | Cash **Rs.25,000.00** (payable to cashier of VTA) or **Rs.50,000.00** Bid Security from Bank | C - 08 or C – 07 | 2000.00 |
| 2. | Colombo | Rehabilitation & Improvement to Damaged part of Boundary wall at VTC at Aththidiya | VTA/PROC/ Works/TF/NCB/ 2024/04 | 2.36 | Cash **Rs.18,000.00** (payable to cashier of VTA) or **Rs.36,000.00** Bid Security from Bank | C - 08 or C – 07 | 2000.00 |

1. The Chairman, Procurement Committee on behalf of the Vocational Training Authority of Sri Lanka now invites sealed bids from eligible and qualified bidders for above Construction work of the Vocational Training Centers.
2. Bidding will be conducted through National Competitive Bidding. (NCB). Since the Estimated value of work to be performed under this procurement (excluding VAT and Taxes) is below Rs.50Mn., regional preference and CIDA grade preference shall apply as stipulated in the Public Finance Circular No. 04/2016 (iii).
3. Bidders who have not been black listed are eligible to award contract and they are informed to go through the Pre-Qualification requirements to Qualify for the contract award of the above Construction Works stated in the section 4 of each bidding document.
4. Interested eligible bidders may obtain further information from the Assistant Director (Procurement) of VTA from **19/07/2024 to 01/08/2024** at **09.00 A.M to 3.00 P.M** on working days and inspect the Bidding Documents at the Procurement Unit.
5. A complete set of bidding documents prepared in English Language may be purchased by the interested bidders on submission of a written application with the copy of CIDA (**Successor to ICTAD**) registration by the Bidder himself or by bidders' representatives to the Procurement Unit and upon payment of non-refundable document fee as per the above schedule for each procurement document, from **9.00 A.M to 3.00 P.M** from **19/07/2024 to 01/08/2024** on Working days. The mode of payment shall be in cash in favor of Chairman, Vocational Training Authority of Sri Lanka.
6. **Pre-Bid Meeting** will be held on **25/07/2024 at 10.30 a.m.** at the **Procurement Unit**, 4th Floor at Vocational Training Authority of Sri Lanka, Colombo 05.
7. Completed bids in two copies in two separate envelops indicating the name of the project in upper left corner as **Original** & **Duplicate,** and encase them in one envelop, sealed, and must be delivered by registered post or by courier service to the address given below or can be deposited in the Bid Box kept at the Procurement Unit, 4th floor of the "Nipunatha Piyasa", Vocational Training Authority on or before **2.30 P.M** on **02/08/2024**. Late bids will be rejected. Bids will be opened in the presence of the bidders or their representative's right after the bid closing.
8. Any bidder can bid for one or several contracts indicated in the schedule and submit separate bids. Each and every bid shall be accompanied by a Bid Security of amount described in the above table.
9. The decision of this Procurement Committee is final and conclusive. The Procurement Committee is empowered to reject any Bid at its own discretion.

Chairman,
Procurement Committee,
Vocational Training Authority of Sri Lanka
4th floor "Nipunatha piyasa", 354/2, Elvitigala Mawatha,
Narahenpita,, Colombo 05
Tel. 011-2596516, 0719476753

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

### 106 கார்கள்

**விற்பனைக்கு**

CBJ-9402 ZOYTE Z100, 2019, CAR அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு-03. தொலைபேசி. 0714542958. 048455

EP - JQ-1594 - TATA - INDIGO - GLX - MOTOR CAR - 2004 - GREEN - கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ .பே. 0812-081033. 048526

WP - KV- 5463 - MICRO - PANDA - CROSS - MOTOR CA R - 2013 - IMAGIN ARY BLUE - கூடிய விலைக் கோரி க்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 0812-081033. 048530

# அறிவித்தல்

## 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்கம் கொண்ட கம்பனிகள் சட்டத்தின் 241 (4) (b) பிரிவின் கீழான அறிவித்தல்

### ∴பன்டேசியா நரோ ∴பப்ரிக்ஸ் (பிரைவட்) லிமிட்டட் மற்றும் ஸ்டிரெச்லயின் (பிரைவட்) லிமிடட் என்ற கம்பனிகளின் ஒன்றிணைத்தல்

∴பன்டேசியா நரோ ∴பப்ரிக்ஸ் (பிரைவட்) லிமிட்டட் (கம்பனி பதிவிலக்கம் PV 00207330) மற்றும் ஸ்டிரெச்லயின் (பிரைவட்) லிமிடட் (கம்பனி பதிவிலக்கம் PV 2777) என்ற கம்பனிகளின் பணிப்பாளர் சபைகளினால் 2007 ஆம் ஆண்டு இலக்கம் 07 ஐக் கொண்ட கம்பனிகள் சட்டத்தின் 239வது பிரிவின் படி ∴பன்டேசியா நரோ ∴பப்ரிக்ஸ் (பிரைவட்) லிமிட்டட் மற்றும் ஸ்டிரெச்லயின் (பிரைவட்) லிமிடட் என்ற கம்பனிகள் ஒரு நிறுவனமாக ஒன்றிணைக்கப்பட்டு எதிர்காலத்தில் ஸ்டிரெச்லயின் (பிரைவட்) லிமிடட் என தொடர்ந்து இயங்கவுள்ளதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

∴பன்டேசியா நரோ ∴பப்ரிக்ஸ் (பிரைவட்) லிமிட்டட் மற்றும் ஸ்டிரெச்லயின் (பிரைவட்) லிமிடட் என்ற கம்பனிகளின் இயக்குநர் சபைகளினால் இணைக்கப்படும் கம்பனிகளின் முன்மொழிவுகளின் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரதிகள், பங்குதாரர்களின் அல்லது கடனாளர்களின் பரீட்சிப்புக்காக ஒன்றிணைக்கப்படும் கம்பனிகளான ∴பன்டேசியா நரோ ∴பப்ரிக்ஸ் (பிரைவட்) லிமிட்டட் மற்றும் ஸ்டிரெச்லயின் (பிரைவட்) லிமிடட் என்ற கம்பனிகளின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகங்களான இல. 07, போஸ்ட் மாஸ்டரின் இடம், டெம்பிள்ர்ஸ் சாலைக்கு அப்புறம், கல்கிசையில் மற்றும் பகுதி 89, பியகம ஏற்றுமதி செயலாக்க வலயம், வல்கம, மல்வானயிலும் முறையே சாதாரண வணிக நேரங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதுடன் ஒன்றிணைக்கப்படும் கம்பனிகளின் பங்குதாரர் அல்லது கடன் வழங்குநர் அல்லது ஒன்றிணைக்கப்படும் கம்பனிகளிடம் இருந்து கடப்பாடொன்றை உடையவரும் ஒன்றிணைக்கப்படும் கம்பனிகளிடம் கேட்கும் பட்சத்தில் ஒன்றிணைக்கப்பட்ட யோசனையின் பிரதியொன்றை எந்தவித கொடுப்பனவுமில்லாது விநியோகிப்பதற்கு கடமைப்பட்டுள்ளோம்.

இவ் ஒன்றிணைப்பானது கம்பனிகள் பதிவாளர் தலைமை அதிபதி அவர்களால் கம்பனிகள் சட்டத்தின் 244 பிரிவின் கீழ் வழங்கப்படும் ஒன்றிணைத்தல் சான்றிதழ் வழங்கப்பட்ட திகதியிலிருந்து அமுல்படுத்தப்படுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

**கோபரேட் சேர்விசஸ் (பிரைவேட்) லிமிடட்,**
**கம்பனி செயலாளர்,**
**ஸ்டிரெச்லயின் (பிரைவட்) லிமிடட் மற்றும் ∴பன்டேசியா நரோ ∴பப்ரிக்ஸ் (பிரைவட்) லிமிட்டட்**
**இல. 216, தி சேரம் பிளேஸ், கொழும்பு 10**

## ஒன்றிணைப்புப் பற்றிய அறிவித்தல்

### 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242 (3) (b) பிரிவுக்கு அமைவாக

### டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி மற்றும் பார்த்தி எயார்டெல் லங்கா (பிரைவேட்) லிமிடெட் ஆகிய நிறுவனங்களின் ஒன்றிணைப்பு

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242 (1) பிரிவுக்கு ஏற்ப ஒன்றிணைப்பிற்கான தீர்மானம் ஒன்றை டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி மற்றும் பார்த்தி எயார்டெல் லங்கா (பிரைவேட்) லிமிடெட் ஆகிய நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகள் மேற்கொண்டுள்ளன என்பதோடு, அதன் மூலம் டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி மற்றும் பார்த்தி எயார்டெல் லங்கா (பிரைவேட்) லிமிடெட் என்பன ஒரு தனி நிறுவனமாக ஒன்றிணைக்கப்படுவதோடு, அவ்வாறு ஒன்றிணைக்கப்படும் நிறுவனம் டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி ஆகும்.

மேற் சொல்லப்பட்ட ஒன்றிணைப்பானது 30 ஆகஸ்ட் 2024 ஆம் திகதியிலிருந்து அமுல்படுத்தப்படுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,**
**டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி**
**(கம்பனி பதிவிலக்கம் PQ 38)**
**பார்த்தி எயார்டெல் லங்கா (பிரைவேட்) லிமிடெட்**
**(கம்பனி பதிவிலக்கம் PV 10652)**

## கொழும்பு மாவட்ட நீதிமன்றம்

### விண்ணப்பத்திற்கான அறிவித்தல்

**வழக்கு எண்: DTS/241/2024**
**இயல்பு : ஏற்பாடு**
**செயல்முறை : சுருக்கம்**
**மதிப்பு : ரூ.48,500,000/-**

ஆஸ்திரேலியா, நியு சவுத் வேல்ஸ் 2765, மெஸ்டன் பார்க், பெர்ன்லின் கிரசன்ட், இல.30 என்ற முகவரியில் வசித்து மறைந்த மனோபாலன் கோட்வினின் இறுதி உயில் தொடர்பாக நியூ சவுத் வேல்ஸ் உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தகுதிகாண் மறு முத்திரையிடுவதற்காக (1977ம் ஆண்டு 20ம் இலக்க சட்டம் மற்றும் 1993ம் ஆண்டு 14ம் இலக்க சட்டங்கள் மூலம் திருத்தப்பட்ட) குடியியல் நடைமுறைச் சட்டத்தின் 554(U) பிரிவின் கீழ் இறுதி உயில் மற்றும் மரண சாதனம் விண்ணப்பம் சம்பந்தமாக

**மனோபாலன் கோட்வின்**

**இறந்தவர்**

**ராஜேஸ்வரி காட்வின், இல. 10/2, 1வது லேன், பள்ளியாவத்தை, ஹெந்தல, வத்தளை.**

**மனுதாரர்**

இதன் மூலம் அறிவிக்கப்படுவதாவது, இல.30, பெர்ன்லின் கிரசன்ட், மெஸ்டன் பார்க், நியு சவுத் வேல்ஸ் 2765, ஆஸ்திரேலியா என்ற முகவரியில் வசித்து மறைந்த மனோபாலன் கோட்வினின் இறுதி உயில் மற்றும் ஏற்பாட்டின் பேரில் 15-03-2024 அன்று நியூ சவுத் வேல்ஸ் உயர் நீதிமன்றத்தில் மனுதாரருக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டு தகுதிகாண் மறுமுத்திரையிடுவதற்காக 1977 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க சட்டம் மற்றும் 1993 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட சிவில் நடைமுறைச் சட்டத்தின் அத்தியாயம் XXXVIII B இன் பிரிவு 544U இன் கீழ் மனுதாரர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்துள்ளார்.

**2024 ஜுன் 12 ஆம் நாள்.**

**மனுதாரர் சார்பில் வழக்கறிஞர்**

## விஷேட அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

1999 ஜுன் 20 ஆம் திகதியிடப்பட்ட விஷேட அற்றோணித்தத்துவமொன்றினூடாக இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கத்தின் கொழும்பு-08, டட்லி சேனாநாயக்க மாவத்தை (முன்பு காசல் வீதி என அழைக்கப்பட்டது) 175 ஆம் இலக்கத்தைச் சார்ந்தவரும் 601610795V என்ற இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையின் உரிமையாளருமாகிய ஹெஹப்பிரதேவகே கோசல தர்மதாச என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட அனைத்து அதிகாரங்களையும் 2024 ஜுலை 15 ஆம் நாளிலிருந்து இரத்துச் செய்யப்பட்டு, நீக்கப்பட்டு மற்றும் இல்லாதொழிக்கப்பட்டுள்ளன என இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கத்தின் பத்தரமுல்ல, ஜயவடனகம, 4B/101 என்ற முன்னைய முகவரியை சார்ந்தவரும் 520541560V என்ற தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உடையவருமான ஹெஹப்பிரதேவகே வோல்டர் ரஞ்சித் தர்மதாச ஆகிய நான் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் அதனது பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன். இதன் பின்னர் மேற்குறிப்பிட்ட ஹெஹப்பிரதேவகே கோசல தர்மதாச என்பவரினால் மேற்குறிப்பிட்ட விஷேட அற்றோணித்தத்துவ ஆவணத்தினூடாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் இவ்வாவணமானது 2024 ஜுலை 15 ஆம் நாள் தொடக்கம் சட்டத்தில் எந்தவொரு வலு மற்றும் செல்லுபடியாகும் தன்மையில்லாததினால் நான் பொறுப்பேற்கமாட்டேன்.

**2024 ஜுலை 15 ஆம் நாளன்று**
**ஹெஹப்பிரதேவகே வோல்டர் ரஞ்சித்.**




## இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

### விலைமனுக்கோரல்

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் | பொறியியலாளர்களின் மதிப்பீட்டுத் தொகை (மேலதிக செலவுகளற்ற) ரூ.மில்லியன்) | ஒப்பந்த காலம் (நாட்கள்) | CIDA தரம் | மனுப் பாதுகாப்பு பிணைத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|
| RDA/RM&M/UVA/RMI/2024/18 | தெமோதர - ஸ்பிரிங்வெளி - பதுளை வீதி (B 097)16+145 முதல் 20+800 கி.மீ வரை மேம்படுத்தல் | 137.5 | 126 | C3 அல்லது அதற்கு மேல் நெடுஞ்சாலை நிபுணத்துவம் | 2,400,000.00 |
| RDA/MM/WP/GOSL(WB)/2024/04 | துடெல்ல - பமுனுகம - தலாஹேன மீகமுவ வீதி (B 425) 20/4 இலக்க பாலத்தினை திருத்தம் செய்தல் | 87.9 | 182 | C4 அல்லது அதற்கு மேல் பாலம் நிபுணத்துவம் | 1,500,000.00 |
| RDA/RM&M/HQB/2024/03 | ADG (HR), ADG(ES), ADG(PLANNING) & AD (ADMIN) க்காக பத்தரமுல்ல மகநெகும மஹமெதுர அலுவலக இடத்தை தயார்படுத்தல் | 12.5 | 63 | C5 அல்லது C6 கட்டுமான நிபுணத்துவம் | 200,000.00 |

மேற்குறிப்பிடப்பட்ட ஒப்பந்தங்களுக்காக **தேசிய மனுக்கோரல் போட்டி முறையின்** கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றது. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2024.07.19** ஆம் திகதி முதல் **2024.08.09** ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு இணையத்தளம் **www.rda.gov.lk** இனை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கொள்முதல் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை.**

SELACINE

## கேள்விக்கான அழைப்பு

### காணி, மாகாண நீர்ப்பாசன, விவசாய, விலங்கு உற்பத்தி மற்றும் விலங்கு சுகாதார மற்றும் மீன்பிடி விடயங்கள் அமைச்சு

### சபரகமுவ மாகாண சபை

சபரகமுவ மாகாண சபையின் காணி, மாகாண நீர்ப்பாசன, விவசாய, விலங்கு உற்பத்தி மற்றும் விலங்கு சுகாதாரம் மற்றும் மீன்பிடி விடயங்கள் அமைச்சின் பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் நிர்மாணங்கள் செயற்றிட்டங்களுக்காக நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (ICTAD), நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை (CIDA) அல்லது சபரகமுவ மாகாண சபையின் கீழ் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | செயற்றிட்டம் | பதிவுத் தரம் மற்றும் விடயங்கள் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் (ரூபா) | கேள்விப் பிணை முறித் தொகை (ரூபா) | மதிப்பிடப்பட்ட வேலை பெறுமதி (ரூ.மி.) |
|---|---|---|---|---|---|
| 01 | கரபிஞ்ச அரசின் விவசாய பயிற்சி நிலையத்தின் மூன்று மாடி விடுதிக் கட்டிடத்தின் நிர்மாணம் (முதலாம் மாடி மிகுதி வேலைகள் -IIம் கட்டம்) | C4/C5 கட்டிட விடயம் | 5,000.00 | 350,000.00 | 33.81 |

02. இது பற்றி ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு சபரகமுவ மாகாண விவசாய அமைச்சிலிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன் (தொ.பே. இல. 045-2224425) 20244.08.09 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்த்து கீழ்க்காணும் முகவரிக்கு வேண்டுதல் விடுத்து மேற்கண்டவாறு கட்டணங்களைச் செலுத்தி கேள்வி ஆவணத் தொகுதியைக் கொள்வனவு செய்யலாம்.

03. இப் பெறுகை பற்றிய விபரமான தகவல்களை சபரகமுவ மாகாண சபையின் www.sg.gov.lk இணையதளத்திற்கு பிரவேசித்து அங்கு Download மெனுவிற்கு சென்று அங்கு Tender Notices ஐத் தேர்ந்தெடுத்து அங்கு Ministry of Land, Provincial, Irrigation, Agriculure இற்கு பிரவேசித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**காணி, மாகாண நீர்ப்பாசன, விவசாய, விலங்கு உற்பத்தி**
**மற்றும் விலங்கு சுகாதார மற்றும் மீன்பிடி விடயங்கள் அமைச்சு,**
**சபரகமுவ மாகாண சபை,**
**புதிய நகரம் - இரத்தினபுரி.**
2024.07.19









## கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்

**வழக்கு இல.**: DTS 00167/24
**தன்மை** : சாசனம்
**பெறுமதி** : ரூ. 16,290,622.35/-
**நடைமுறை** : சுருக்கம்

சிவில் நடைமுறைச் சட்டத்தின் அத்தியாயம் XXXVIIIB (வெளிநாட்டு மரணசாசன அதிகாரப்பத்திரம்) இன் கீழ் மற்றும் விதிகளின்படி, ஆக்ஸ்போர்டில் உள்ள மாவட்ட மரணசாசன அதிகாரப் பத்திரம் பதிவகம், உயர் நீதிமன்றத்தில் (District Probate Registry at Oxford, of the High Court of Justice) வெளியிடப்பட்ட வெளிநாட்டு மரண சொத்து நிர்வாகத் தத்துவப் பத்திரம் தொடர்பான வழக்கில், மறைந்த நைனா மரிக்கார் லியாகத் அலி கான் (Naina Marikar Liaquat Ali khan) மரணசாசனம் இல்லாது இறந்தவரின் தோட்டம் தொடர்பாக 136, லிடெல் வே (Liddell Way), அஸ்காட் (Ascot), பெர்க்சயர் (Berkshire) SL5 9UZ, இங்கிலாந்து மற்றும் வேல்ஸ்.

**ஹிசார் மொஹிதீன் அலிகான்**
**(Hizar Mohidheen Alikhan),**
எண்.125,
மன்னார் வீதி,
புத்தளம்

மற்றும் தற்போது

136, லிடெல் வே (Liddell Way),
அஸ்காட் (Ascot), பெர்க்சயர் (Berkshire) SL5 9UZ,
ஐக்கிய இராச்சியம்.

***மனுதாரர்***

ஏப்ரல் 24,2024 அன்று

**இது வெளியிடப்பட்ட நாளிலிருந்து இருபத்தெட்டு (28) நாட்கள் காலாவதியான பிறகு, மரணச் சொத்து நிர்வாகத் தத்துவப் பத்திரத்தை மறுசீல் செய்வதற்காக சிவில் நடைமுறைச் சட்டத்தின் (திருத்தப்பட்டபடி) அத்தியாயம் XXXVIIIB இன் கீழ் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்யப்படும். 136 லிடெல் வே (Liddell Way), அஸ்காட் (Ascot), பெர்க்சயர் (Berkshire) SL5 90Z, இங்கிலாந்து மற்றும் வேல்ஸைச் சேர்ந்த மறைந்த** நைனா மரிக்கார் லியாகத் அலி கானின் (Naina Marikar Liaquat Ali khan) **மரணசாசனமில்லாது இறந்தவரின் தோட்டத்தைப் பொறுத்தமட்டில், ஆக்ஸ்போர்டில் உள்ள மாவட்ட மரணசாசன அதிகாரப்பத்திரம் பதிவகம், உயர் நீதிமன்றத்தால்** (District Probate Registry at Oxford, of the High Court of Justice) **2015 ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி வெளியிடப்பட்டது மற்றும் வழங்கப்பட்டது.**

**மனுதாரரின் பதிவு பெற்ற சட்டத்தரணிகள்**

---

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

---

## பெறுகை அறிவித்தல்

### இலங்கை தேசிய வைத்தியசாலை - கொழும்பு -10

இலங்கை தேசிய வைத்தியசாலையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள Multicore Underground Telephone Cable அமைப்பின் வருடாந்த பராமரிப்பு மற்றும் சேவை விடயங்கள் சார்பாக பொருத்தமான நிறுவனமொன்றை தேர்ந்தெடுப்பதற்காக திறந்த கேள்வி விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

குறித்த வழங்கலுக்காக தகைமையுடனான உள்ளூர் நிறுவனங்கள் இதற்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடிவதுடன் ரூ. 2,000.00 வைப்பை இலங்கை தேசிய வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு செலுத்தி பின்னர் 2024.08.20 வரை வார நாட்களில மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை இலங்கை தேசிய வைத்தியசாலையின் வழங்கல் பிரிவில் குறித்த கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

2024.08.21 மு.ப. 10.00 இற்கு இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதம கணக்காளர் பணிமனையில் குறித்த விலைமனுக்கள் திறக்கப்படும்.

**வைத்திய நிபுணர் டபிள்யூ.கே. விக்ரமசிங்ஹ**
**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை.**

---

## பெறுகை அறிவித்தல்

### பிரதேச சபை – ஹபராதுவ

ஹபராதுவ பிரதேச சபையின் தலைமையக கட்டிடத்திற்கு கீழ்க்காணுமாறு வளிச்சீராக்கி இயந்திரங்களை வழங்கிப் பொருத்துவதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | விபரம் | அளவு | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் பிணை வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 01 | BTU 9000 | 01 | 500.00 | 5000.00 |
| 02 | BTU 12000 | 02 | | |
| 03 | BTU 18000 | 05 | | |
| 04 | BTU 24000 | 03 | | |

**விபரங்கள் மற்றும் நிபந்தனைகள்**

01. மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூ.500.00 ஆவதுடன், மீளளிக்கப்படும் கேள்விப்படிவக் கட்டணம் ரூ. 5000.00 ஆகும்.
02. கேள்விப் பத்திரங்கள் விநியோகித்தல் ஹபராதுவ பிரதேச சபை முன்னரங்கு அலுவலக கருமபீடத்திலிருந்து 2024.07.19 முதல் 2024.08.08 பிற்பகல் 3.00 வரை
03. கேள்வி விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளல் 2024.08.09ம் திகதி முற்பகல் 10.00 வரை
04. கேள்விப் பத்திரங்கள் திறத்தல் 2024.08.09 மு.ப. 10.30 இற்கு ஹபராதுவ பிரதேச சபை தலைமையகத்தில்.
05. கேள்விப் பத்திரங்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியை வேறு வேறாக உறைகளில் இட்டு மீண்டும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு செயலாளர், பிரதேச சபை, ஹபராதுவ என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது தலைமையகத்தின் செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் உள்ள கேள்விப் பெட்டியில் கொண்டுவந்து உள்ளிடலாம்.
06. கேள்வி விண்ணப்பத்துடன் குறித்த சகல விபரங்கள் மற்றும் நிபந்தனைகளைச் சமர்ப்பிக்கிறேன்.
07. மேலதிக விபரங்களுக்கு தொ.பே.இல. 091 - 2283302ஐ அழையுங்கள்.

**பெறுகைக் குழு,**
**ஹபராதுவ பிரதேச சபை,**

**செயலாளர்,**
**பிரதேச சபை - ஹபராதுவ**

---

## கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்

**வழக்கு இல.**: DTS 00168/24
**தன்மை** : சாசனம்
**பெறுமதி** : ரூ. 27,188,532.85/-
**நடைமுறை** : சுருக்கம்

சிவில் நடைமுறைச் சட்டத்தின் அத்தியாயம் XXXVIIIB (வெளிநாட்டு மரணசாசன அதிகாரப்பத்திரம்) இன் கீழ் மற்றும் விதிகளின் படி, ஆக்ஸ்போர்டில் உள்ள மாவட்ட மரணசாசன அதிகாரப் பத்திரம் பதிவகம், உயர் நீதி மன்றத்தில் (District Probate Registry at Oxford, of the High Court of Justice) வெளியிடப்பட்ட வெளிநாட்டு மரண சாசன அதிகாரப்பத்திரம் தொடர்பான வழக்கில், மறைந்த ஆயிஷா உம்மா லியாகத் அலி கான் (Ayisha Umma Liaquat Ali Khan) தோட்டம் தொடர்பாக 136, லிடெல் வே (Liddell Way), அஸ்காட் (Ascot), பெர்க்சயர் (Berkshire) SL5 9UZ, இங்கிலாந்து மற்றும் வேல்ஸ்.

**ஹிசார் மொஹிதீன் அலிகான்**
**(Hizar Mohidheen Alikhan),**
எண்.125,
மன்னார் வீதி,
புத்தளம்

மற்றும் தற்போது

136, லிடெல் வே (Liddell Way),
அஸ்காட் (Ascot), பெர்க்சயர் (Berkshire) SL5 9UZ,
ஐக்கிய இராச்சியம்.

***மனுதாரர்***

ஏப்ரல் 24,2024 அன்று

**இது வெளியிடப்பட்ட நாளிலிருந்து இருபத்தெட்டு (28) நாட்கள் காலாவதியான பிறகு, மரணசாசன அதிகாரப்பத்திரத்தை மறுசீல் செய்வதற்காக சிவில் நடைமுறைச் சட்டத்தின் (திருத்தப்பட்டபடி) அத்தியாயம் XXXVIIIB இன் கீழ் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்யப்படும். 136 லிடெல் வே (Liddell Way), அஸ்காட் (Ascot), பெர்க்சயர் (Berkshire) SL5 90Z, இங்கிலாந்து மற்றும் வேல்ஸைச் சேர்ந்த மறைந்த ஆயிஷா உம்மா லியாகத் அலி கானின் (Ayisha Umma Liaquat Ali Khan) தோட்டத்தைப் பொறுத்தமட்டில், ஆக்ஸ்போர்டில் உள்ள மாவட்ட மரணசாசன அதிகாரப்பத்திரம் பதிவகம், உயர் நீதிமன்றத்தால் (District Probate Registry at Oxford, of the High Court of Justice) 2016 ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதி வெளியிடப்பட்டது மற்றும் வழங்கப்பட்டது.**

**மனுதாரரின் பதிவு பெற்ற சட்டத்தரணிகள்**

---

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### கட்புல மற்றும் ஆற்றுக்கலைகள் பல்கலைக்கழகம்

### தனியார் பாதுகாப்பு சேவையை வழங்கல் (2024-2025)

இப்பல்கலைக்கழகத்திற்கு பாதுகாப்பு சேவையை வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கட்புல மற்றும் ஆற்றுக்கலைகள் பல்கலைக்கழகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரைக்குறியிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.

01. விலைமனுதாரர்களின் அடிப்படை தகுதித்தன்மை தகவுத்திறனானது பின்வருமாறு:
    (1) பாதுகாப்பு சேவையை வழங்குவதற்காக பாதுகாப்பு அமைச்சுடன் பதிவு பெற்றிருத்தல்.
    (2) இலங்கையில் வியாபார பதிவு செய்தல் அல்லது கம்பனிகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் கூட்டிணைத்திருத்தல்.
    (3) கடந்த ஐந்து வருடங்களில் ஆகக் குறைந்தது இரு ஒப்பந்தங்களில் ஒவ்வொரு மாதத்திற்கும் ஒவ்வொன்றும் 12 மணிநேர 80 பாதுகாப்பு முறைமாற்றங்களுக்கு குறையாத தன்மையில் பல்கலைக்கழகங்களுக்கு அல்லது அரசாங்க நிறுவனங்களுக்கு திருப்திகரமான பாதுகாப்பு சேவையை பூர்த்தி செய்திருத்தல்.
    (4) கடந்த மூன்று வருடங்களாக பாதுகாப்பு துறையில் தொடர்ச்சியான சேவையை வழங்கியிருத்தல்.
    (5) ஆகக் குறைந்தது கடந்த 5 வருடங்களுக்கு ஊசேநி/ ஊநநி ஐ ஒழுங்கு முறையாக செலுத்தியிருத்தல்.
02. உத்தேசிக்கப்பட்ட சேவைக் காலப் பகுதியானது 365 நாட்களாகும். விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் இரு-உறைகள் முறைமையின் கீழ் நடாத்தப்படும். ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை பல்கலைக்கழக இடப்பரப்பிலுள்ள பொது நிருவாகப் பிரிவிலிருந்து பெற்று 2024.07.19 ஆம் திகதியிலிருந்து 2024.08.08 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் முன்சந்திப்பு ஏற்பாட்டுடன் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
03. 2024.07.19 ஆம் திகதியிலிருந்து 2024.08.08 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத பணக்கொடுப்பனவாகிய பத்தாயிரம் ரூபாவை (10,000 ரூபா) ஆவணக் கட்டணமாக செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொழும்பு-07, அல்பேர்ட் கிறசென்ட், 21ஆம் இலக்கத்திலுள்ள கட்புல மற்றும் ஆற்றுக்கலைகள் பல்கலைக்கழக 2 ஆம் மாடியின் பொது நிருவாகப் பிரிவிலிருந்து கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
04. விலைமனுக்கள் 2024.11.08 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
05. ஒவ்வொரு விலைமனுவும் 2024.09.12 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டதும் கட்புல மற்றும் ஆற்றுக்கலைகள் பல்கலைக்கழக துணைவேந்தரின் பெயரில் வழங்கப்பட்டதும் நாலு இலட்சம் ரூபாவிற்கான (400,000 ரூபா) விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
06. விலைமனுக்கள், தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, கட்புல மற்றும் ஆற்றுக்கலைகள் பல்கலைக்கழகம், இல. 21, அல்பேர்ட் கிறசென்ட், கொழும்பு-07 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Bid for providing Private Security Service (2024/25) என்ற சொற்கள் குறித்துரைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
07. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் 2024.08.09 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் மேலேயுள்ள முகவரியிலுள்ள பொது நிருவாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.
08. தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமான அங்கீகாரமுடைய விலைமனுதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.
09. 2024.08.01 ஆம் திகதியன்று மு.ப. 11.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமானது கொழும்பு-07, அல்பேர்ட் கிறசென்ட், 21 ஆம் இலக்கத்திலுள்ள கட்புல மற்றும் ஆற்றுக்கலைகள் பல்கலைக்கழகம், நிருவாக கட்டிடத்தொகுதி, 5 ஆம் மாடியின் நலன்புரி சபை அறையில் நடைபெறும்.

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,**
**கட்புல மற்றும் ஆற்றுக்கலைகள் பல்கலைக்கழகம்,**
**இல. 21, அல்பேர்ட் கிறசென்ட்,**
**கொழும்பு-07.**

---

### இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## கேள்விக்கோரல்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறியிடப்பட்ட கேள்விக்கோரல்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/24/ PT/04/057 | Spares for UD Nissan Prime Movers | 17,500.00 | 1,000.00 | 2024.08.08 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/24/ PT/04/059 | Spares for 2.5T Heli CPCD 25 Fork Lift Trucks | 30,000.00 | 1,000.00 | 2024.08.08 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/24/ PT/14/011 | 01 No. Air Compressor (500 Liters, 15 Bars) & 01 No. Engine Driven Air Compressor | 75,000.00 | 1,000.00 | 2024.08.08 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/24/ PT/04/021 | Book Scanners | 27,000.00 | 1,000.00 | 2024.08.09 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/24/ PT/04/058 | Spares for UD Nissan Prime Movers | 17,500.00 | 1,000.00 | 2024.08.09 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டவரொருவராக செயற்பட விரும்பினால், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவு சான்றிதழை (பிசிஏ-3) அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2024 ஜூலை 19 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

**பிரதான பொறியியலாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள் : 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638.**
**தொலைநகல் இலக்கங்கள் : 2381652, 2470443**

தேசிய விளையாட்டுப் போட்டி:

# கோலூன்றிப் பாய்தலில் டக்சிதாவை அடுத்து புவிதரனும் புதிய சாதனை

கொழும்பு, சுகததாச விளையாட்டு அரங்கில் நடைபெற்று வரும் 48 ஆவது தேசிய விளையாட்டுப் போட்டியின் ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அருந்தவராசா புவிதரன் போட்டிச் சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

நேற்று (18) நடைபெற்ற இந்தப் போட்டியில் வட மாகாணம் சார்பில் போட்டியிட்ட புவிதரன் 5.11 மீற்றர் உயரம் பாய்ந்தே போட்டிச் சாதனையை நிகழ்த்தி முதலிடம் பெற்றார். இதில் மேல் மாகாணத்தின் எம்.எச்.ஐ. சந்தருவன் 5.00 மீற்றர் உயரம் பாய்ந்து இரண்டாம் இடத்தையும், 4.60 மீற்றர் உயரம் பாய்ந்த மத்திய மாகாணத்தின் டி.எச்.ஜி.எஸ். ஜயந்த மூன்றாமிடத்தையும் பெற்றார்.



புவிதரன் ஏற்கனவே கோலூன்றிப் பாய்தலில் தேசிய சாதனைக்கு சொந்தக்காரராவார். அண்மையில் சுகததாச அரங்கில் நடந்த இராணுவ மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டியில் புவிதரன் 5.17 மீற்றர் உயரத்தை தாவி தேசிய சாதனை படைத்திருந்தார்.

முன்னதாக தேசிய விளையாட்டுப் போட்டியின் தடகள போட்டியின் முதல் நாளான நேற்று முன்தினம் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலிலும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நேசராசா டக்சிதா தனது போட்டிச் சாதனையை புதுப்பித்தார். இதன் போது அவர் 3.51 மீற்றர் உயரம் பாய்ந்தார். இதன்மூலம் 2023 ஆம் ஆண்டில் 3.50 மீற்றர் உயரம் பாய்ந்து அவர் படைத்த சாதனையையே முறியடித்திருந்தார்.

இதேவேளை நேற்று நடந்த ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியிலும் மேல் மாகாணத்தைச் சேர்ந்த காலிங்க குமாரகே போட்டிச் சாதனையை முறியடித்தார். அவர் போட்டித் தூரத்தை 20.71 விநாடிகளில் நிறைவு செய்தார்.

இதில் பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப்போட்டியில் பங்கேற்கவிருக்கும் அருண தர்ஷன போட்டித் தூரத்தை 20.77 விநாடிகளில் நிறைவு செய்து இரண்டாம் இடத்தைப் பிடித்ததோடு போட்டித் தூரத்தை 21.16 விநாடிகளில் நிறைவு செய்த வடமேல் மாகாணத்தின் ஏ.எஸ்.எம். சபான் மூன்றாமிடத்தை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேற்று நடந்த ஆண்களுக்கான 400 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் மத்திய மாகாணத்தின் 18 வயதான அயோமால் அகலங்க 51.3 விநாடிகளில் போட்டித் தூரத்தை நிறைவு செய்து இலங்கை 19 வயதுக்கு உட்பட்ட தேசிய சாதனையை முறியடித்தார். சப்ரகமுவ மாகாணத்தின் ஏ.எல்.ஏ.ஐ. ரத்னசேன போட்டித் தூரத்தை 51.6 விநாடிகளில் நிறைவு செய்து இரண்டாவது இடத்தையும் மேல் மாகாணத்தின் என்.டி.கே. விதுரங்க 52.2 விநாடிகளில் போட்டியை நிறைவு செய்து மூன்றாவது இடத்தையும் பெற்றனர்.

தேசிய விளையாட்டுப் போட்டியின் முதல் நாள் முடிவின்போது பதக்கப்பட்டியலில் மேல் மாகாணம் 96 தங்கப்பதக்கங்களுடன் முதலிடத்தைப் பிடித்ததோடு மத்திய மாகாணம் (36 தங்கம்) இரண்டாம் இடத்தையும் வடமேல் மாகாணம் (36 தங்கம்) மூன்றாம் இடத்தையும் பெற்றிருந்தன. வட மாகாணம் 3 தங்கங்களுடன் கடைசி இடத்தில் இருப்பதோடு கிழக்கு மாகாணம் 7 தங்கங்களுடன் 7 ஆவது இடத்தில் உள்ளது.

## மகளிர் டி20 ஆசிய கிண்ணம் இன்று தம்புள்ளையில் ஆரம்பம்



மகளிர் டி20 ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர் எட்டு அணிகளுடன் தம்புள்ளையில் இன்று (19) ஆரம்பமாகவுள்ளது.

இதில் வலுவான அணியாக இந்திய அணி இருப்பதோடு சமரி அத்தபத்து தலைமையிலான இலங்கை, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அணிகளும் வெற்றி வாய்ப்புகளைக் கொண்ட அணிகளாக கருதப்படுகின்றன. இதுவரை நடந்த நான்கு மகளிர் ஆசிய கிண்ண டி20 தொடர்களில் மூன்றை இந்தியா வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தவிர நேபாளம், ஐக்கிய அரபு இராச்சியம், மலேசியா, தாய்லாந்து ஆகிய அணிகளும் இந்தத் தொடரில் பங்கேற்கின்றன. இதில் பி குழுவில் இடம்பெற்றிருக்கும் இலங்கை அணி ஆரம்ப சுற்றில் பங்களாதேஷ், மலேசியா மற்றும் தாய்லாந்து அணிகளை எதிர்கொள்ளவுள்ளன. இலங்கை மகளிர் அணி தனது முதல் போட்டியில் நாளை பங்களாதேஷ் அணியை எதிர்கொள்ளவுள்ளது. ஏ குழுவில் இந்தியா பாகிஸ்தானுடன் நேபாளம் மற்றும் ஐக்கிய அரபு இராச்சிய அணிகள் இடம்பெற்றுள்ளன. இன்று முதல் நாளில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளும் நேபாளம் எதிர் ஐக்கிய அரபு இராச்சிய அணிகளும் மோதவுள்ளது.

ஒவ்வொரு குழுவிலும் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறவுள்ளன. தொடரின் இறுதிப் போட்டி எதிர்வரும் ஜூலை 28 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தொடரின் அனைத்துப் போட்டிகளும் ரங்கிரி தம்புள்ளை சர்வதேச மைதானத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



மட்டக்களப்பு மத்திய வலய மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகளில் ஆறு தங்கப் பதக்கங்கள் உட்பட மொத்தம் 18 பதக்கங்களை வென்ற காத்தான்குடி மத்திய கல்லூரி வீரர்கள் மற்றும் அதிகாரிகளை படத்தில் காணலாம்.

(படம்: மாளிகைக்காடு குறூப் நிருபர்)

கொவிட் தொற்றுக்கு மத்தியில்:

# தேர்தலில் இருந்து விலக பைடனுக்கு புது அழுத்தம்



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கு கொவிட்–19 நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவரிடம் இலேசான அறிகுறிகள் காணப்படுவதாக வெள்ளை மாளிகை கூறியது.

இரண்டு தடுப்பூசிகளுடன் கூடுதல் தடுப்பூசியும் போட்டுக் கொண்ட பைடனுக்கு இதற்கு முன் இரு முறை கொவிட்–19 தொற்று ஏற்பட்டுள்ளது. லாஸ் வேகஸில் பிரசாரம் செய்து வரும் பைடன் நேற்று இரவு (18) நடக்கவிருந்த கூட்டத்தை ரத்துச் செய்தார்.

பைடனுக்கு சளி, இருமல் ஆகியவை ஏற்பட்டுள்ளதாக வெள்ளை மாளிகை செய்தித்தொடர்பாளர் கெரின் ஜீன் பியேரி தெரிவித்தார். டெல்வாரில் உள்ள தனது வீட்டில் அவர் தனிமையில் இருந்து தனது பணிகள் அனைத்தையும் மேற்கொள்வதாக பியரி கூறினார்.

கடந்த மாத இறுதியில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்புடன் நேரடி விவாதத்தில் பங்கேற்ற 81 வயது பைடன் மோசமாகத் தடுமாறினார்.

அதனால், ஜனாதிபதி போட்டியிலிருந்து விலக வேண்டும் என்ற குரல் வலுத்து வரும் வேளையில் அவருக்கு கொவிட்–19 தொற்று ஏற்பட்டுள்ளது.

ஜனநாயக கட்சியின் இரு முன்னணி உறுப்பினர்களான அமெரிக்க கொங்கிரத் மற்றும் செனட் சபை உறுப்பினர் சக் ஸ்கூமர் மற்றும் பிரதிநிதிகள் சபை உறுப்பினர் ஹகீம் ஜெப்ரி ஆகிய இருவரும் பைடனை தனிப்பட்ட முறையில் சந்தித்து ஜனாதிபதி வேட்பாளர் போட்டியில் பங்கேற்பது குறித்து அக்கறை தெரிவித்துள்ளனர்.

நவம்பர் தேர்தலில் குடியரசு கட்சி வேட்பாளர் டிரம்பை, அவரால் வீழ்த்த முடியாது என்று பிரதிநிதிகள் சபையின் முன்னாள் சபாநாயகர் நான்சி பெலொசி குறிப்பிட்டுள்ளார்.

பைடனின் வயது மூப்புக் காரணமாகவே அவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது குறித்து ஜனநாயகக் கட்சிக்குள் எதிர்ப்பு வலுத்த வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எனினும் மீண்டும் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடுவதிலிருந்து ஒதுங்கப்போவதில்லை என்பதில் பைடன் உறுதியாக உள்ளார்.

ஜனநாயகக் கட்சியின் அதிகாரபூர்வ வேட்பாளராக பைடனை முன்மொழியும் நிகழ்ச்சி அடுத்த மாத ஆரம்பத்தில் இடம்பெறவுள்ளது.

# சீனாவில் கடைத்தொகுதியில் ஏற்பட்ட தீயில் 16 பேர் பலி



சீனாவின் சீச்சுவான் மாநிலத்தில் உள்ள ஒரு கடைத்தொகுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் 16 பேர் உயிரிழந்துள்ளனர்

தேடல், மீட்பு நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. 13 மாடிக் கட்டடத்திலிருந்து சுமார் 30 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

கடைத்தொகுதிக் கட்டடத்தின் கீழ்த்தளங்களிலிருந்து கரும்புகை வெளியேறும் காணொளிகளைச் சமூக ஊடகங்களில் பார்க்க முடிகிறது.

தீப்பிடிக்க என்ன காரணம், நெருப்புப் பரவியபோது கட்டடத்தின் உள்ளே எத்தனை பேர் இருந்தனர் முதலிய விபரங்கள் தெரியவில்லை.

## சர்வதேச செய்திகள்

'காசாவில் அனைத்து போர் விதிகளும் மீறல்'

# மத்திய பகுதியில் தாக்குதல் தீவிரம் ரபா நகரில் டாங்கிகள் முன்னேற்றம்

காசாவில் இஸ்ரேலின் உக்கிர தாக்குதல்கள் தொடரும் நிலையில், அங்கு அனைத்து போர் விதிகளும் மீறப்பட்டிருப்பதாக பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனத்தின் ஆணையாளர் நாயகம் பிலிப்பே லசரினி சாடியுள்ளார்.

கடந்த ஒக்டோர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீதான பலஸ்தீன போராளிகளின் தாக்குதலைத் தொடர்ந்து ஆரம்பமான இந்தப் போரில் அண்மைய தினங்களாக இஸ்ரேலியப் படை பலஸ்தீனர்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் ஐ.நாவினால் நடத்தப்படும் பாடசாலைகள் மற்றும் நிலையங்கள் மீது தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளது.



இவ்வாறான தாக்குதல்கள் கிட்டத்தட்ட தினசரி இடம்பெறுவதாக குறிப்பிட்டிருக்கும் லசரினி, 'பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனத்தின் ஆறு பாடசாலைகள் உட்பட, கடந்த 10 நாட்களில் குறைந்தது எட்டு பாடசாலைகள் தாக்கப்பட்டுள்ளன' என்று எக்ஸ் சமூகதளத்தில் பதிவிட்டுள்ளார்.

'இந்தப் போர் காசாவில் உள்ள சிறுவர்கள் மற்றும் சிறுமிகளின் குழந்தைப் பருவம் மற்றும் கல்வியை பறித்துள்ளது. பாடசாலைகள் இலக்காகக் கூடாது' என்று வலியுறுத்திய அவர், 'காசாவில் அனைத்து போர் விதிகளும் மீறப்பட்டுள்ளது' என்றார்.

எனினும் காசாவில் இஸ்ரேல் 286 ஆவது நாளாக நேற்றைய தினத்திலும் தனது கடுமையான தாக்குதல்களை தொடர்ந்தது. மத்திய காசாவில் இஸ்ரேலியப் படை நடத்திய செல் குண்டு தாக்குதல்களில் ஏழு பேர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதில் அல் சாவியா சிறு நகரில் உள்ள வீடு ஒன்றை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் ஆறு பேர் கொல்லப்பட்டிருப்பதாக மருத்துவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது. அல் நுசைர் அகதி முகாமில் இருக்கும் அப்துல் அசாம் பள்ளி வாசல் மீது இடம்பெற்ற மற்றொரு தாக்குதலில் மேலும் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். அல் புரைஜ் அகதி முகாமில் வீடு ஒன்றின் மீது நேற்றுக் காலை இடம்பெற்ற தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டு மேலும் 7 பேர் காயமடைந்திருப்பதோடு 4 சிறுவர்கள் காணாமல்போயிருப்பதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டுள்ளது.

தவிர இஸ்ரேலியப் படை தெற்கு நகரான கான் யூனிஸின் கிழக்கு பகுதியிலும் ரபா நகரின் கிழக்கு பகுதியிலும் வீடுகள் மீது குண்டுகளை வீசியதாக செய்தி வெளியாகியுள்ளது.

ரபா நகரில் மேற்கு பக்கத்தில் ஆழ ஊடுருவும் இஸ்ரேலிய டாங்கிகள் மேட்டு நிலம் ஒன்றில் நிலைகொண்டிருப்பதாக அங்குள்ள குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். அங்கு பல சுரங்கப்பாதைகளை கண்டுபிடித்ததாகவும் பல துப்பாக்கிதாரிகளை கொன்றதாகவும் இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

தென்மேற்கு ரபாவில் இஸ்ரேலிய படைகள் மீது நேற்று மோட்டார் குண்டுகளை வீசியதாக ஹமாஸ் ஆயுதப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறிப்பாக ஒன்பது மாதங்களுக்கு மேலாக போர் நீடிக்கும் நிலையிலும் ஹமாஸ் தலைமையிலான பலஸ்தீன போராளிகளினால் இஸ்ரேலிய படைகள் மீது டாங்கி எதிர்ப்பு ரொக்கெட்டுகள் மற்றும் மோட்டார் குண்டுகள் அதே போன்று அவ்வப்போது இஸ்ரேல் மீது ரொக்கெட் குண்டுகள் வீசி தாக்குதல் நடத்த முடிந்துள்ளது.

வடக்கு காசாவில் போர் உக்கிரம் அடைந்ததை அடுத்து ஒரு மில்லியனுக்கும் அதிகமான பலஸ்தீனர்கள் ரபாவில் அடைக்கலம் பெற்றிருந்தனர். எனினும் இங்கு கடந்த மே மாத ஆரம்பத்தில் இஸ்ரேல் படை நடவடிக்கையை ஆரம்பித்ததை அடுத்து பெரும்பாலான பலஸ்தீனர்கள் மீண்டும் ஒருமுறை வெளியேற்றப்பட்டனர்.

காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் குறைந்தது 54 பேர் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதன்படி அங்கு கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 38,848 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 89,459 பேர் காயமடைந்துள்ளனர்.

இஸ்ரேலின் தாக்குதல்கள் தீவிரம் அடைந்திருக்கும் நிலையில் காசா போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைகளும் ஸ்தம்பித்துள்ளன. ஐ.நா பாதுகாப்புச் சபையில் நேற்று முன்தினம் உரையாற்றிய பலஸ்தீன தூதுவர் ரியாத் மன்சூர், 'வரலாற்றில் அதிகம் ஆவணப்படுத்தப்பட்ட இனப்படுகொலை ஒன்றே காசாவில் நிகழ்ந்து வருகிறது' என்றார்.

இதில் உரையாற்றிய ஐ.நாவுக்கான சீன தூதுவர் பு கொங், காசாவில் உடன் போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தவும், இரு நாட்டுத் தீர்வை செயற்படுத்தவும் வலியுறுத்தியதோடு, காசா மக்கள் மீது நடத்தப்படும் கூட்டுத் தண்டனையை இஸ்ரேல் நிறுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

எனினும் பலஸ்தீன நாடு ஒன்றை நிராகரிக்கும் தீர்மானம் இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் நேற்று அதிக பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்றப்பட்டது. வலதுசாரி கட்சிகள் மற்றும் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் கூட்டணி அரசைச் சேர்ந்தவர்களால் கொண்டுவரப்பட்ட இந்தத் தீர்மானத்திற்கு பாராளுமன்றத்தில் 68 ஆதரவு வாக்குகள் கிடைத்திருப்பதோடு எதிராக ஒன்பது வாக்குகள் மாத்திரமே பதிவாகியுள்ளன.

இஸ்ரேலிய பாராளுமன்றத்தின் இந்தத் தீர்மானம் இரு நாட்டுத் தீர்வை எதிர்ப்பதாக உள்ளது என்று பலஸ்தீன தேசிய முன்முயற்சியின் செயலாளர் நாயகம் முஸ்தபா பார்கூத்தி தெரிவித்துள்ளார்.

'இந்தத் தீர்மானம் பலஸ்தீனர்களுடனான அமைதியை நிராகரிப்பதாகவும் ஒஸ்லோ உடன்படிக்கையின் மரணத்தை உத்தியோகபூர்வமாக அறிவிப்பதாகவும் உள்ளது' என்று அவர் எக்ஸ் சமூகதளத்தில் தெரிவித்துள்ளார்.

1993 இல் இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன தலைவர்கள் இடையே கைச்சாத்தான ஒஸ்லோ உடன்படிக்கை, இஸ்ரேலிய நாட்டுடன் பக்கத்து பக்கத்தில் வாழும் சாத்தியமான மற்றும் இறைமை உடைய பலஸ்தீன நாடு ஒன்றுக்கு அழைப்பு விடுக்கிறது.

காசாவில் கடந்த ஒன்பது மாதங்களுக்கு மேலாக இடம்பெற்று வரும் இஸ்ரேலிய தாக்குதல்களில் கொல்லப்பட்டோர் எண்ணிக்கை தற்போது 39 ஆயிரத்தை நெருங்கி இருப்பதோடு இஸ்ரேலிய முற்றுகையால் அங்கு உணவு, மருந்து மற்றும் அத்தியாவசிய பொருட்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

காசா மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்கு காசா கரையில் இஸ்ரேல் 230 மில்லியன் டொலர் செலவில் அமைத்த தற்காலிக துறைமுகத்தை அது அகற்றியுள்ளது. இந்தத் தற்காலிக துறைமுகத்தை இயக்குவதில் கடல் கொந்தளிப்பு மற்றும் ஏற்பாட்டியல் பிரச்சினைகள் என்று பல சவால்களை சந்தித்த நிலையிலேயே அது முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூலை மாதம் 19ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

## இலங்கை வாழ் சகல மக்களினதும் அறிவூட்டலுக்காக

களுகமுவ வீதி, பெத்தேகம, பமுனுகொட்டுவ முகவரியில் Rasoda Daries (Pvt) Ltd மூலம் (2019 உணவு, சீனி, உப்பு, கொழுப்பிற்காக வர்ண குறியீடு மேற்கொள்ளும் கட்டளையை மீறி) வர்ண குறியீட்டுடன் ஐஸ்கிறீம் உற்பத்தியை விநியோகித்த குற்றச்சாட்டு சம்பந்தமாக நாச்சாதுவ பொதுச் சுகாதார பரிசோதகர் திரு. ஆர். டபிள்யூ. ஜே. ரம்புக்வெல்லவினால் தொடரப்பட்ட இல. 76255 என்ற வழக்குடன் சம்பந்தப்பட்ட குற்றவாளியாக அநுராதபுரம் நீதவான் நீதிமன்றத்தில் தீர்க்கப்பட்டதாகவும் முன்னைய குற்றங்களை கவனத்திற் கொண்டு ரூ. 18000 தண்டத் தொகை தீர்மானிக்கப்பட்டதுடன் முழுத் தண்டத்தொகையைச் செலுத்தவில்லையெனில் இலகு வேலையுடன் 06 மாத சிறைத்தண்டனை தீர்மானிக்கப்பட்டதாக இலங்கை வாழ் மக்களின் அறிவூட்டலுக்காக இத்தால் பிரசுரிக்கிறேன்.

## இலங்கை வாழ் சகல மக்களினதும் அறிவூட்டலுக்காக

களுகமுவ வீதி, பெத்தேகம, பமுனுகொட்டுவ முகவரியில் Rasoda Daries (Pvt) Ltd மூலம் (2019 உணவு, சீனி, உப்பு, கொழுப்பிற்காக வர்ண குறியீடு மேற்கொள்ளும் கட்டளையை மீறி) வர்ண குறியீட்டுடன் ஐஸ்கிறீம் உற்பத்தியை விநியோகித்த குற்றச்சாட்டு சம்பந்தமாக நாச்சாதுவ பொதுச் சுகாதார பரிசோதகர் திரு. ஆர். டபிள்யூ. ஜே. ரம்புக்வெல்லவினால் தொடரப்பட்ட இல. 76256 என்ற வழக்குடன் சம்பந்தப்பட்ட குற்றவாளியாக அநுராதபுரம் நீதவான் நீதிமன்றத்தில் தீர்க்கப்பட்டதாகவும் முன்னைய குற்றங்களை கவனத்திற் கொண்டு ரூ. 18000 தண்டத் தொகை தீர்மானிக்கப்பட்டதுடன் முழுத் தண்டத்தொகையைச் செலுத்தவில்லையெனில் இலகு வேலையுடன் 06 மாத சிறைத்தண்டனை தீர்மானிக்கப்பட்டதாக இலங்கை வாழ் மக்களின் அறிவூட்டலுக்காக இத்தால் பிரசுரிக்கிறேன்.

## இலங்கை இராணுவம்

# கேள்வி அறிவித்தல்

1. இலங்கை இராணுவத்திற்குரித்தான 01 டிரக் வாகனம், 01 இடர் (Recovery) வாகனத்திற்கான தகர வேலை மற்றும் நிறப்பூச்சு வேலை மற்றும் 12 கெப் வாகனங்கள், 04 வேன்கள், 03 க்றூ கெப்கள், 05 ஜீப்களுக்கான திருத்தவேலைகளை மேற்கொள்வதற்காக தகைமை வாய்ந்த உள்நாட்டு முகவர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவத் தலைமையகம், இலங்கை இராணுவத்தின் பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.

2. சகல தொடர்புடைய விலைமனு ஆவணங்களை 2024-07-22ஆம் திகதி முதல் 2024-08-20ஆம் திகதி வரை மு.ப 1000 மணி முதல் பி.ப. 1500 மணி வரையான வேலை நாட்களில் ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவத் தலைமையகத்தின் வாகனத் தரிப்பிட இடப்பரப்பில் கேள்விகள் திறக்கப்படும் இடத்தில் பெற்றுக்கொள்ளலாம். சகல கேள்விகளும் ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவத் தலைமையகத்தின் கேள்விகள் திறக்கப்படும் பிரிவில் 2024-08-21ஆம் திகதி 1100 மணித்தியாலத்தில் திறக்கப்படும்.

3. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் www.promise.lk மற்றும் www.army.lk எனும் இணையதளங்களுக்குப் பிரவேசித்து தேவையான விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**மேலதிக விபரங்களுக்கு:**

**அ. மின்சாரம் மற்றும் இயந்திர பொறியியல் பணிப்பாளர் சபை,**
**இராணுவத் தலைமையகம்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர.**
**தொலைபேசி இலக்கங்கள்: 0113070478, 0114051843**

**இராணுவத் தளபதி,**
**இராணுவத் தலைமையகம்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## மத்திய மாகாண கல்வித் திணைக்களம் - கண்டி

## பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்றிட்டம் (GEMP)

**விலைக்கோரல் இலக்கம்: GEMP/CP/DE/G/2024/01,02,03**

1. பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்றிட்டத்தின் (GEMP) கீழ் ஒதுக்கப்பட்டுள்ள மானியத்தினால் வலயக் கல்வி அலுவலகங்கள் மற்றும் மாகாண கல்வித் திணைக்களத்திற்கான பின்வரும் கணனிகள் மற்றும் ஏனைய இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் தளபாட உபகரணங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல் மற்றும் பின்வரும் புத்தகங்களை அச்சிட்டு வழங்குவதற்காக தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் வகையில் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| பொதி இல. | பொதிகளின் பெயர் | உருப்படி இல. | பொருட்களின் வகை பற்றிய சுருக்கமான விபரங்கள் | எண்ணிக்கை | விலைக்கோரல் பிணை முறி இல. ரூபா |
|---|---|---|---|---|---|
| GEMP/CP/DE/G/2024/01 | சுய கற்றல் புத்தகங்களை அச்சிடுதல் மற்றும் வழங்குதல் | 1 | சுய கற்றல் புத்தகம் - கணிதம் (சிங்களம்) | 28,600 | 50,000.00 |
| | | 2 | சுய கற்றல் புத்தகம் - கணிதம் (தமிழ்) | 13,917 | 40,000.00 |
| | | 3 | சுய கற்றல் புத்தகம் - கணிதம் (ஆங்கிலம்) | 2,483 | |
| GEMP/CP/DE/G/2024/02 | கணனி மற்றும் ஏனைய இலத்திரனியல் உபகரணங்களை வழங்குதல் | 1 | லேசர் அச்சுப்பொறிகள் | 38 | 35,000.00 |
| | | 2 | Smart Boards and Smart Board U.P.S | 14 | 168,000.00 |
| | | 3 | மடிக்கணனிகள் | 17 | 105,000.00 |
| | | 4 | மேசைக் கணனிகள் | 90 | 540,000.00 |
| | | 5 | UPS | 90 | 25,000.00 |
| | | 6 | புகைப்படப் பிரதி இயந்திரங்கள் | 31 | 125,000.00 |
| GEMP/CP/DE/G/2024/03 | தளபாட உபகரணங்களை வழங்குதல் | 1 | செயற்பாட்டு மேசைகள் | 264 | 125,000.00 |
| | | 2 | செயற்பாட்டு கதிரைகள் / ஸ்டூல்கள் | 1584 | 175,000.00 |
| | | 3 | விரிவுரை மண்டப கதிரைகள் | 100 | 30,000.00 |
| | | 4 | சிறுவர் மேசைகள் | 200 | 20,000.00 |
| | | 5 | சிறுவர் கதிரைகள் | 200 | 14,000.00 |

2. இந்த விலைக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் பிரகாரம் இடம்பெறும்.
3. இது தொடர்பிலான மேலதிக விபரங்களை 081-2203774 எனும் தொலைபேசி இலக்கம் மற்றும் cpceduacc@gmail.com எனும் மின்னஞ்சல் ஊடாக மத்திய மாகாண கல்வித் திணைக்கள பெறுகை அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். விலைக்கோரல் ஆவணங்களை 2024-07-22ஆம் திகதி முதல் 2024-08-09ஆம் திகதி வரையான வேலை நாட்களில் (மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 03.00 மணி வரையில்) மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. ஒரு பொதி அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பொதிகள் அல்லது ஒரு பொருள் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்களை வழங்குவதற்கான இயலுமை வழங்குநருக்கு இருத்தல் வேண்டும்.
5. மத்திய மாகாண கல்வித் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படும் வேண்டுகோள் கடிதம் சகிதம் மத்திய மாகாண கல்விப் பணிப்பாளரின் பெயரில் மாகாண கல்வித் திணைக்களத்தின் சிறாப்பருக்கு ஒவ்வொரு பொதிக்காகவும் வெவ்வேறாக மீளளிக்கப்படாத இரண்டாயிரம் ரூபாவை (2,000.00 ரூபா) விலைமனுப் படிவக் கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்ததன் பின் விலைக்கோரல் நிபந்தனைகள் மற்றும் விபரக்குறிப்புகள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள விலைக்கோரல் படிவத்தை 2024-07-22ஆம் திகதி முதல் 2024-09-08ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் பெறுகை அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2024 ஆகஸ்ட் மாதம் 01ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தில் இடம்பெறும்.
6. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை நகல்பிரதி சகிதம் 2024 ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதி பி.ப. 1.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பெறுகைக் குழு, மத்திய மாகாண கல்வித் திணைக்களம், கண்டி எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைப்பதானால் அந்த அலுவலகத்தின் கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பொதியின் பெயர் மற்றும் இலக்கம் என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
